# கோகுலம்

Gokulam

மே 83 • ரூ 2





வீட்டுப்பாடம் செய்ய முடியாத அளவு களைப்பா?
க்ளூகோன்-டி (T)
உங்களுக்கு நம்பகமான
க்ளாக்ஸோஸ்-Dயின்
புதிய பெயர்.
அதிக சக்தி — அவனுக்குத்
தேவையான போது.
புத்துணர்ச்சியூட்டும், குளுமை
யான, சக்தி தரும் க்ளூகோன்-டி.
வைட்டமின்-டி, கால்ஷியம்
ஃபாஸ்ஃபேட் ஆகியன செறிந்த அசல்
க்ளூகோஸ் பவுடர் அடங்கியது.
க்ளாக்ஸோ நிறுவனம் அளிக்கிறது.
எந்த பானத்திலும் இதனை கலந்து
அருந்தலாம். பழரசம், பால், தேநீர்,
காபி, தண்ணீர் இவற்றிலே கலந்தோ
அல்லது நேரடியாகவோ உட்கொள்
ளுங்கள். திரும்பவும் பெருகிவரும்
சக்தியை உணர்வீர்.
க்ளூகோன்-டி உங்களுக்கு வழக்க
மான அதே பச்சை உறையிலே
கிடைக்கிறது.
Glucon-D
Glucon-D
Glucon-D
க்ளூகோன்-டி (T) சக்தியை மீட்டுத்தர நம்பகமானது.
க்ளாக்ஸோ நிறுவனம் அளிக்கிறது.




இந்த விடுமுறை நாட்களை நீங்களெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தி வருகிறீர்கள் என்று நம்புகிறேன்.

பல மாதங்களாக மழை இல்லாததால் எங்கு பார்த்தாலும் தண்ணீர்ப் பஞ்சம். விளைச்சல் இல்லை. பல வகையிலும் நாம் எல்லாருமே சிரமப்படுகிறோம். ஒவ்வொரு சிறுவன் அல்லது சிறுமியும் தன்னுடைய தாய் தந்தையருக்கு இந்த விடுமுறையில் எந்த எந்த வகையில் உதவி செய்து அவர்களது சிரமத்தைக் குறைக்கலாம் என்று பாருங்கள். உங்கள் சக்திக்கு ஏற்றபடி உதவுங்கள். அதிலே ஒரு மகிழ்ச்சி இருக்கும்.

வெய்யில் மிகக் கடுமையாக இருக்கிறது. இந்த வெய்யிலில் அவசியமிருந்தாலொழிய வெளியில் செல்லாதீர்கள். பகலில் வீட்டுக்குள்ளே விளையாடுங்கள். மாலையில் வெளியில் சென்று விளையாடலாம். நாள் முழுதும் விளையாடிக் கொண்டிருக்க முடியுமா? நல்ல நல்ல புத்தகங்களை நூலகங்களில் சென்று படிக்கலாம். அல்லது நண்பர்களிடமோ தெரிந்தவர்களிடமோ வாங்கிப் படிக்கலாம். வசதியுள்ளவர்கள் காசு கொடுத்துச் சில புத்தகங்களை வாங்கியும் படிக்கலாம்.

விடுமுறை முடிந்து பள்ளிக்கூடத்துக்கு மீண்டும் செல்லும்போது விடுமுறைக்கு முன்பு இருந்ததைவிட இப்போது நம் அறிவு வளர்ந்திருக்கிறது பண்பு சிறந்திருக்கிறது என்ற மனநிறைவு உங்களுக்கு ஏற்பட வேண்டும். அதுவே எங்கள் ஆசை.

**அழ. வள்ளியப்பா**

கௌரவ ஆசிரியர்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்



# கோகுலம்


கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

மலர்—1 இதழ்—4
1983 மே மாத இதழ்

தனிப்பிரதி ரூ. 2/-
ஆண்டுச் சந்தா ரூ. 24/-

கோகுலம்
கிண்டி, சென்னை-600 032


இந்த இதழ்
எழுத்தாளர்களில்
சிலர்:


ரா. பொன்ராசன்


மா. வரதராஜன்


மு. முத்துக்காளத்தி



நெல்லை ஆ. கணபதி


மைதிலி வேணு கோபால்



தேவி


விஜயா கண்ணன்


கமலா நடராஜன்


ஜமதக்னி


வ. தேனப்பன்


மெரமூர்த்தி

# மொத்தம் எத்தனை?

இங்கே எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன? சரியாக எண்ணிப் பார்த்துச் சொல்லுங்கள்.

'நேரா'



விடை : 30 புத்தகங்கள்


உழைத்துப் பிழை
கதை: ராஜாஜி
சித்திரம்: விஜயன்
1
குடியானவனே, உன் பக்திக்கு மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேண்டும், கேள். ஆனால், உனக்குத் தருவதை எல்லாருக்கும் தருவேன்.
கண்ணபிரானே, என் மனைவியுடன் யோசனை செய்து நாளைக்குச் சொல்கிறேன்.
ராஜா துணிக் கடை
2
என்ன, உன் மனைவியுடன் யோசனை செய்தாயா?
செய்தேன் சுவாமி. பெட்டி நிறைய வெள்ளிப் பணம் வேண்டும். எவ்வளவு எடுத்தாலும் குறையக் கூடாது!
சரி, அப்படியே தந்தேன். உனக்கு மட்டுமல்ல, எல்லாருக்கும்!
3
ஆஹா! பெட்டி நிறையப் பணம்!
அம்மாடியோவ்! சரி, உடனே போய் எனக்கு இரண்டு புடவை வாங்கி வாருங்கள்.
4
இந்த இரண்டு புடவைகளும் வேண்டுமா? பதிலுக்கு என்ன தருவாய்?
இதோ வெள்ளிப் பணம்! எவ்வளவு தர வேண்டும்?
5
பணமா? வேண்டாம்.. அதுதான் எல்லோரிடமும் இருக்கிறதே! இதற்குப் பதிலாக எத்தனை மூட்டை அரிசி தருவாய்?
அரிசியா! என்னிடம் பணம் தான் இருக்கிறது.. சரி, வருகிறேன்.


பிரபு ஜுவல் ஸ்டோர்ஸ்
புடவையா வேணும்? அப்படியானால் அரிசியோ, பருப்போ கொண்டுவா. பணம் வேண்டாம்.
ஐயோ! பணத்துக்கு மதிப்பே இல்லையா!
என்னங்க, புடவை தான் கிடைக்கவில்லே. சாப்பாட்டுச் சாமான் கூடவா கிடைக்கவில்லே?
எல்லாரிடமும் பணம் இருக்கிறதாம். வேறு ஏதாவது பண்டம் கொண்டு வரச் சொல்கிறார்கள்!
ஐயோ! நம்மிடம் வேறு ஏதுவுமே இல்லையே! இப்படியே இருந்தால் பட்டினி கிடந்து சாக வேண்டியது தான்.
இந்த வரமே வேண்டாம். கண்ணனிடமே திருப்பிக் கொடுத்து விடுகிறேன்.
கண்ணா, உன் வரத்தை நீயே திருப்பி எடுத்துக் கொள். நான் முன்போல் உழைத்துப் பிழைக்கிறேன்.
அதுவே சரி. நீயும் உழைத்துப் பிழை. மற்றவர்களும் உழைத்துப் பிழைக்கட்டும்.



# என் பொழுது போக்கு ஆல்பம் செய்தல்

தபால் தலை, நாணயம், பறவை இறகு, இசைத்தட்டு, பெரியோர்களின் கையெழுத்து, போட்டோ இப்படிப் பலவற்றை என்போன்ற சிறுவர்களும், சிறுமியரும் பொழுது போக்காகச் சேகரிக்கின்றனர். அவற்றிலிருந்து பல உண்மைகளையும் அறிந்து பயனடைகின்றனர். இந்தப் பொழுதுபோக்குகள் ஒழுங்காகவும், சீராகவும் அமைய அவர்களுக்கு ஆல்பங்கள் தேவை. என்னுடைய பொழுதுபோக்கு அத்தகைய ஆல்பங்களைச் செய்வதே!

நான் சின்மயா வித்யாலயாவில் பதினோராம் வகுப்பில் படிக்கிறேன். என் தந்தை ஓர் ஆல்பத் தொழிற்கூடம் வைத்திருக்கிறார். படிக்கும் நேரம் போக, பாக்கி ஓய்வு நேரங்களை நான் வீணாக்குவதில்லை. என் அப்பாவின் தொழிற் கூடத்துக்குச் செல்கிறேன். அங்கு நடக்கும் பணிகளைக் கூர்ந்து கவனிக்கிறேன். 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்' என்ற பாடலுக்கேற்ப நான் ஆல்பம் செய்யும் தொழிலைக் கற்றுக்கொண்டு வருகிறேன். என் தந்தைக்கும் என்னால் உதவி செய்ய முடிகிறது. எனக்கும் கல்விச் செலவுக்குச் சிறிது பணம் கிடைக்கிறது.

ஆல்பங்களில்தான் எத்தனை வகைகள்! மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு பொழுது போக்குக்கும் ஏற்ப ஒரு விசேஷ ஆல்பம் இருக்கிறது. ஒவ்வொரு ஆல்பமும் அதனுடைய பயனுக்குத் தகுந்தபடி அமைப்பிலும் அளவிலும் உருவத்திலும் மாறுபட்டிருக்கும். என் அப்பாவின் தொழிற் கூடத்தில் பெரும்பாலும் போட்டோ ஆல்பங்களே செய்யப்படுகின்றன. ஆகவே போட்டோ ஆல்பங்களைப் பற்றிச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

போட்டோ ஆல்பங்களை அவற்றின் வளர்ச்சிக்கும், அமைப்புக்கும் ஏற்ப நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். முதலாவது — பட்டு நூல் ஆல்பம்.

○ பி. ராமன் ○

(SILK THREAD ALBUM) உள்ளே கறுப்புக் காகிதத் தாள் உள்ளது. இவற்றின் மேல்தான் போட்டோக்களை ஒட்ட வேண்டும். அட்டை கனமாகவும் பல்வேறு வர்ணங்களிலும் இருக்கும். இடது பக்கத்தில் பட்டு நூலால் சேர்த்துத் தைக்கப்பட்டிருக்கும் இந்த ரக ஆல்பங்களைச் சிறுவர்களும் பெரியவர்களும் நீண்ட நாட்களாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இரண்டாவது ரிங் ஆல்பம் (Ring Album) இது பட்டு நூல் ஆல்பத்தைப் போலவே இருக்கும். ஆனால், இடது பக்கத்தில் பட்டு நூலுக்குப் பதிலாக ஸ்பிரிங் போன்ற வளையங்கள் இருக்கும்.

மூன்றாவது ரிங் பவுச் ஆல்பம் (Ring Pouch Album) இந்த வகையில் கறுப்புத் தாள்கள் இராது. அவற்றிற்கும் பதிலாக பிளாஸ்டிக் உறைகள் இருக்கும். இந்த உறைகளை வளையங்கள் இணைத்திருக்கும்.

நான்காவது பவுச் ஆல்பம் (Pouch Album) இதில் பிளாஸ்டிக் உறைகளிருக்கும். இடது பக்கத்தில் பட்டு நூலோ ஸ்பிரிங்கோ ஒன்றும் இருக்காது. உறைகள் 'வெல்ட்'' (Weld) செய்யப்பட்டு இணைக்கப்பட்டிருக்கும். இதில் 24 முதல் 120 உறைகள் வரை உண்டு.

பவுச் ஆல்பம் வசதியானது: அழகும் கவர்ச்சியும் அதிகம். விலை குறைவு. ஆகையால், பட்டு நூல் ஆல்பத்தை விட இந்த வகை ஆல்பத்தையே எல்லோரும் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். இதுதான் இன்றைய நாகரிகம் (Latest Fashion). இருந்தாலும் இவை பட்டு நூல் ஆல்பத்தைப் போல் உழைப்பதில்லை. உஷ்ணத்தைத் தாங்குவதில்லை. இனி பவுச் ஆல்பம் செய்யும் முறையைப் பார்ப்போம்.

**தேவையான பொருட்கள்:**

வெள்ளை மொராக்கோ தாள்கள்.
பி.வி.சி. பிளாஸ்டிக் தாள்கள் (P.V.C. Transparent Sheets)
மின்சாரத்தால் இயங்கும் வெல்டிங் மெஷின்.

மொராக்கோ தாளிலும் பி.வி.சி. பிளாஸ்டிக் தாளிலும் அநேக ரகங்கள் உண்டு. ஆல்பத்தின் ரகத்திற்கும், விலைக்கும் ஏற்றவாறு நாம் தாள்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**செய்யும் முறை:**

போட்டோக்கள் சில குறிப்பிட்ட அளவுகளில் வருகின்றன. உதாரணமாக 9''×6''; 10''×7'', 10''×8'', 12''×9'', 13''×10'', 14''×12'', 16''×12'' 18''×14''. போட்டோக்களுக்கு ஏற்ப உறைகளும் இருக்க வேண்டும். ஆகவே மொராக்கோ தாளையும், பி. வி. சி. தாளையும் எடுத்து மூன்று பக்கங்களிலும் வெல்ட் செய்து இணைக்க வேண்டும். மூன்று பக்கங்களையும் மூடி, ஒரு பக்கத்தை மட்டும் திறந்து வைக்க வேண்டும். அது உறையைப் போல் இருக்கும். இவ்வாறு 24 உறைகளைச் செய்ய வேண்டும். அந்தந்த ஆல்பத்தின் அளவுக்கு ஏற்ற உறைகளைச் செய்ய வேண்டும். பிறகு, அந்த உறைகளைச் சீராகச் சேர்த்து அடுக்க வேண்டும். மறுபடியும் எல்லா உறைகளையும் ஒன்று சேர்த்து ஓர் ஓரத்தில் வெல்ட் செய்ய வேண்டும்.

அவ்வளவுதான். ஆல்பம் தயாரிக்கப்பட்டு விட்டது! இனிமேல் நாம் சேகரித்துள்ள போட்டோக்களை அந்த உறைகளில் போடலாம். அவற்றைப் பார்த்துப் பார்த்து ரசிக்கலாம். அல்லது ஆல்பங்களைப் பரிசுப் பொருளாக வழங்கலாம். ஆல்பங்களைப் பரிசாகப் பெறுகிறவர்கள் தாங்கள் விரும்பும் போட்டோக்களை உறைகளில் போட்டு ரசிப்பார்கள்.

இது எளிய முறையில் செய்த ஆல்பம். மேலை நாடுகளிலும் ஜப்பானிலும் நவீன ஆல்பங்களைச் செய்கின்றனர். அட்டையைத் திறந்ததுமே ஆல்பத்திலிருந்து ஓர் இனிய பாட்டு அல்லது மகிழ்ச்சியான வாழ்த்துச் செய்தியைக் கேட்கலாம்!

### நினைப்பது எப்போது?

மூஞ்சூறு (பிள்ளையாரிடம்): அரசியல் வாதிகள் எலெக்ஷன் சமயத்திலே மக்களைநினைக்கிற மாதிரி இந்தப் பசங்க பரீட்சை சமயத்திலே தான் நம்மை நினைக்கிறாங்க.

—கீழை அ. கதிர்வேல்



உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதை-3

# பினாக்கியோவின் சாகசங்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி

**தே**வதை அவனுடைய நீண்ட மூக்கைப் பார்த்துப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள். அவன் விக்கி விக்கி அழத் தொடங்கினான். ''பொய் சொல்வது ஒரு கெட்ட பழக்கம்'', என்பதை உணர்த்தவே தேவதை அவனுடைய மூக்கை வளரச் செய்தாள். ஆனால், அவனுடைய அழுகைக்கு இரங்கினாள். கைகளைத் தட்டினாள். உடனே ஆயிரம் மரம் கொத்திப் பறவைகள் ஜன்னல் வழியாக உள்ளே பறந்து வந்தன. அவனுடைய நீண்ட மூக்கின் மேல் வரிசையாக உட்கார்ந்தன. 'டொக், டொக்' என்று அவனுடைய மூக்கைக் கொத்திக் கொத்தி மீண்டும் பழைய அளவுக்குச் செய்து விட்டுப் போயின. பினாக்கியோ சந்தோஷமடைந்தான்.

• • •

**பி**னாக்கியோ ஒரு கெட்ட பிள்ளை. ஆனாலும், அவனுடைய மனம் நன்றாக இருந்தது. அதனால் தேவதைக்கு அவனைப் பிடித்திருந்தது. வீட்டில் தொடர்ந்து தங்கினால் அக்கா- தம்பியாக அன்போடு வாழலாம் என்றுசொன்னாள்.


''அப்பா தனியாக இருக்கிறார். அவரைப் பார்க்க வேண்டும்'' என்று அவன் அவசரப்பட்டான். ''உன் அப்பாவுக்குத் தகவல் அனுப்பி யிருக்கி-றேன். இன்றிரவு இங்கு வருவார்'' என்று தேவதை உரைத்தாள். பினாக்கியோ பெரு மகிழ்ச்சி யடைந்தான். அப்பாவரும் வரை காத்திருக்கவில்லை, அவன். எதிர் கொண்டு அழைப்பதற்காக அவன் புறப்பட்டான். தேவதை புத்திமதி சொல்லி அனுப்பினாள்.

அப்பாவைச் சந்திக்கும் ஆர்வத்-தோடு பினாக்கியோ காட்டில் போய்க் கொண்டிருந்தான். ஆனால், எதிரே வந்தது யார் தெரியுமா? கெப்பெத்தோ அல்ல! முன்பு நொண்டியாக நடித்த நரியும், குருடாக நடித்த பூனையும் தான்! அவை மறுபடியும் இனிக்கப் பேசின. அவனிடமிருந்த பணத்தைப் பறிப்பதற்கு ஒரு தந்திரம் செய்தன.

''அருகில் ஒரு 'அதிசய வயல்' இருக்கிறது. அங்கு மண்ணைத் தோண்டிக் காசைப் புதைக்க வேண்டுமாம். தண்ணீர் ஊற்றிச் சில நிமிடங்கள் காத்திருந்தால் மரமாகி விடுமாம்! அப்படியே கொத்துக் கொத்தாகப் பணம் காய்த்துத் தொங்குமாம்! எல்லோரும் அப்படிச் செய்து பணம் சேர்க்கிறார்கள். நீயும் செய்தால் நிறையப் பணம் கிடைக்கும்'' என்று ஆசை காட்டின. பினாக்கியோவுக்கு முதலில் ஆசை வரவில்லை. அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கேட்டுக் கடைசியில் மயங்கினான். 'அதிசய வய'லுக்கு அவர்களோடு போனான்.

அவர்கள் சொன்னபடியே பொற்காசுகளைப் புதைத்தான். நீர் ஊற்றினான். வெளியே காத்திருந்தான். திரும்பிச் சென்று பார்த்தான். அங்கே மரத்தையும் காணவில்லை! மண்ணில் புதைத்த பணத்தையும் காணவில்லை! நரியையும் காணவில்லை! பூனையையும் காணவில்லை!

நரியும் பூனையும் அவனுடைய பொற்காசுகளைத் திருடிச் சென்ற கதையை அருகில் இருந்த ஒரு கிளி அவனுக்குக் கூறியது. உடனே நீதி மன்றத்துக்கு விரைந்தான் பினாக்கியோ. நரியும் பூனையும் தன்னுடைய பணத்தைக் களவாடிய நிகழ்ச்சியை எடுத்துச் சொல்லி நியாயம் கேட்டான். ஒரு முதிய குரங்கார் நீதிபதியாக இருந்தார். வழக்கை முழுவதும் கவனமாகக் கேட்டார். கடைசியில் பினாக்கியோவுக்கு நான்கு மாதங்கள் சிறைத்



எச். கிருஷ்ணமூர்த்தி

தண்டனை விதித்தார். தனக்கு எதற்காகத் தண்டனை கொடுத்தார் என்று பினக்கியோவுக்குப் புரியவில்லை!

தண்டனை முடிந்தது. வெளியே வந்தான். மழைக் காலம். மண் பாதை. ஒரே சேறு. அவற்றையெல்லாம் அவன் பொருட்படுத்தவில்லை. அப்பாவையும், தேவதையையும் சந்திக்கும் ஆவலில் வீட்டை நோக்கி விரைந்தான். வழியில் ஒரு பெரிய பாம்பு படுத்திருந்தது. பச்சைத் தோல். சிவப்புக் கண்கள். கூரிய வால். வாலின் முனை வழியே அது புகையைக் கக்கிக் கொண்டிருந்தது.

பினக்கியோ பயந்தான். பொறுத்துப் பார்த்தான். பாம்பு அசையவில்லை. அருகில் சென்றான். உடனே அது அவனுடைய காலைப் பற்றிக்கொண்டது. அவன் தலை குப்புற விழுந்தான். தலை சேற்றில் மாட்டிக் கொண்டது. கால் மேலே போனது. தன்னை விடுவித்துக் கொள்வதற்காகக் கால்களை உதைத்துக் கஷ்டப் பட்டான். அந்தக் காட்சி பாம்புக்கு வேடிக்கையாக இருந்தது. அது குலுங்கிக் குலுங்கிச் சிரித்தது. அவன் தன்னை விடுவித்துக் கொண்டான். பயணத்தைத் தொடர்ந்தான்.

இருட்டும் முன் வீட்டை அடைய விரும்பினான். பசி வந்தது. தாங்க முடியவில்லை. பாதை அருகில் ஒரு தோட்டம். அதில் திராட்சைக் குலைகள் தொங்கின. பறிப்பதற்காகத் தோட்டத்திற்குள் குதித்தான். கைகள் மேலே இருந்த பழத்தை எட்டுவதற்குள் கால்கள் கீழே இருந்த ஒரு பொறியில் மாட்டிக் கொண்டன. பசி ஒரு புறம், வலி ஒருபுறம். உயிரே போவது போல இருந்தது.

தோட்டத்தில் ஒரு கோழிப் பண்ணை. அதிலிருந்த குஞ்சுகளைப் பூனைகள் திருடி வந்தன. அவற்றைப் பிடிக்கவே தோட்டக்காரன் ஒரு பொறியை வைத்திருந்தான். பூனைக்கு வைத்த பொறியில் ஒரு பையன் நிற்பதைக் கண்டு தோட்டக்காரன் ஆச்சரியப்பட்டான்.

பினக்கியோவின் வேண்டுகோள் எதுவும் தோட்டக்காரன் காதில் ஏறவில்லை. அவனை இழுத்துப் போனான். ஒரு நீண்ட சங்கிலியை அவன் கழுத்தில் இணைத்து வாசலில் கட்டிப் போட்டான். ''என்னுடைய நாய் செத்து விட்டது. அதற்குப் பதிலாக நீதான் இன்றைக்குக் காவல் நாயாக இருக்க வேண்டும்,' என்று சொல்லிவிட்டு உள்ளே போனான். ''நல்ல பிள்ளையாக இருந்திருந்தால் இந்தக் கஷ்டமெல்லாம் எனக்கு வந்திருக்காதே'' என்ற வேதனையோடு பினக்கியோ இரவு படுத்து உறங்கினான்.

நடு இரவு. நான்கு பூனைகள் பினக்கியோவிடம் வந்தன. ''இரவில் நாங்கள் குஞ்சுகளைத் திருடி உண்பது வழக்கம். காவல் நாய்க்கும் ஒன்றைப் பரிசாக அளிப்போம். நீ ஒப்புக் கொண்டால், உனக்கும் அது போலத் தருவோம்'' என்றன. அவன் ஒப்புக் கொண்டான்.


பூனைகள் அருகில் இருந்த பண்ணையில் நுழைந்தன. உடனே அவன் கதவைத் தாளிட்டான். நாயைப் போலக் குரைத்தான். தோட்டக்காரன் ஓடிவந்தான். பினக்கியோ உண்மையைச் சொன்னான். ''என்னிடம் சில குறைகள் உண்டு. இருந்தாலும் திருடர்கள் தரும் பரிசுக்கு நான் என்றைக்குமே ஆசைப்பட்டது இல்லை'' என்று பெருமையோடு கூறினான். தோட்டக்காரன் பூனைகளைக் கட்டிப் போட்டான். பினக்கியோவைப் பாராட்டி விடுவித்தான்.

• • •

பினக்கியோ விடுதலை ஆனான். நேராகத் தேவதையைத் தேடிப் போனான். காட்டில் பழைய இடத்தில் வீட்டைக் காணவில்லை. அந்த இடத்தில் ஒரு சிறிய சலவைக் கல் இருந்தது. கல்லின் மேல், ''பினக்கியோத் தம்பியால் கைவிடப்பட்டு மனம் வருந்திய நீல வர்ண முடியுள்ள சிறுமி இங்கு மீளாத் துயிலில் ஆழ்ந்திருக்கிறாள்'' என்ற வாசகம் காணப்பட்டது. எழுத்துக் கூட்டி அவன் படித்தான். தேவதையையும் காணவில்லை. அப்பாவையும் காணவில்லை. அவனால் அழுகையை அடக்க முடியவில்லை. கதறிக் கதறி அழுதான்.

ஒரு பெரிய புறா அவன் அருகில் வந்தது. கெப்பெத்தோ, தன் மகனைத் தேடிக் கொண்டு கடல் கடந்து சென்றதாக அது அறிவித்தது. அதைக் கேட்டுப் பினக்கியோ அதிக வருத்தம் அடைந்தான். கடல் தாண்டி அவனை அழைத்துப் போவதாகப் புறா சமாதானம் கூறியது. குதிரையின் மேல் உட்காருவது போல் அவன் புறாவின் மேல் ஏறி உட்கார்ந்தான். அது பறந்தது. கடலுக்கு அப்பால் ஒரு தீவில் அவனை இறக்கி விட்டு மறைந்தது.

தீவில் இறங்கியதும் பினக்கியோ அப்பாவைத் தேடினான். வழியில் ஒரு மீனைச் சந்தித்தான். அப்பாவைப் பற்றி விசாரித்தான். கெப்பெத்தோவின்



படகு கடலில் மூழ்கி, அவனை ஒரு ராட்சச சுறாமீன் விழுங்கியதாக அந்த மீன் தெரிவித்தது. அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. மீனிடம் விடை பெற்றுக் கொண்டு தீவின் உள்ளே போனான்.

'சுறுசுறுப்புத் தேனீக்கள்' என்று அழைக்கப்படும் ஒரு கிராமத்தை அவன் அடைந்தான். ஊர் நிறைய மக்கள் இருந்தனர். எல்லோரும் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டிருந்தனர். நன்றாக உழைத்தனர். ஒருவர் கூடச் சோம்பேறியாக இல்லை.

பினோக்கியோவுக்குப் பசித்தது. அவன் உழைக்க விரும்பவில்லை. பிச்சை எடுக்கத் தீர்மானித்தான். அவமானம் அவனைப் பிடுங்கித் தின்றது. வேறு வழியின்றித் தலையைக் குனிந்துகொண்டான். சாலை ஓரம் நின்றான். போவோர் வருவோரிடம் கையேந்திப் பிச்சை கேட்டான். உழைக்காத அவனுக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை.

பினோக்கியோவின் பசியும் தாகமும் அதிகரித்தன. இரண்டு பாத்திரங்களில் தண்ணீரை எடுத்துக் கொண்டு ஒரு பெண் போய்க் கொண்டிருந்தாள். அவளிடம் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டான். கொடுத்தாள். பசிக்கு உணவு கேட்டான். ''ஒரு பாத்திரத்தைச் சுமந்து வந்தால் தருகிறேன்'' என்றாள். அவ்வாறே செய்தான். வயிறாரச் சாப்பிட்டான். பிறகு அந்தப் பெண் வேறு யாரும் அல்ல; நீல வர்ண முடியுள்ள அவனுடைய தேவதைதான் என்று கண்டு பிடித்தான். அவளுடைய காலில் விழுந்து கதறினான். தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்டான்.

சிறுமியாக இருந்த தேவதை ஒரு அம்மாவைப் போலப் பெரியவளாக வளர்ந்திருந்தாள். எப்படி வெகு சீக்கிரத்தில் அவளால் வளர முடிந்தது என்று கேட்டான் பினோக்கியோ. ''அது தேவதைகளின் ரகசியம். எங்களால் எதுவும் செய்ய முடியும்'' என்றாள் தேவதை.

''எனக்கு அதைக் கற்றுக்கொடேன். நானும் சீக்கிரத்தில் பெரியவனாக வளர ஆசைப்படுகிறேன்.''

''உன்னால் வளர முடியாது.''

''ஏன்?''

''ஏனென்றால் பொம்மைகள் வளருவதில்லை. அவை பொம்மைகளாகப் பிறக்கின்றன. பொம்மைகளாக வாழ்கின்றன. பொம்மைகளாக இறக்கின்றன''

''எனக்குப் பொம்மையாக இருந்து அலுத்து விட்டது. இனிமேல் நான் வளர வேண்டும்.''

''ரொம்பச் சுலபம். ஆனால், அதற்கான தகுதிகளை நீ கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், உண்மை பேசுதல், ஒழுங்காகப் பள்ளிக்குப் போதல், உழைத்தல் முதலிய நல்ல குணங்களை நீ பயில வேண்டும்.''

பினோக்கியோ முழு மனத்தோடு அந்த நிபந்தனைகளை ஒப்புக்கொண்டான்.

பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகப் போனான் பினோக்கியோ. கற்ற பிள்ளைகளுக்கு ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தான். ஆசிரியர் புகழ்ந்தார். தேவதை மகிழ்ந்தாள்.

அவனுடைய வகுப்பில் சில கெட்ட பிள்ளைகள் இருந்தனர். அவர்களுடன் பழகுவதை விட்டுவிடும்படி ஆசிரியரும், தேவதையும் கூறினார்கள். அவர்கள் தான் அவனுக்கு நெருங்கிய நண்பர்கள். ஆகவே அந்தத் தொடர்புகளை அவன் விடவில்லை.

அந்தக் கெட்ட பிள்ளைகள் ஒருநாள் அவனைக் கடற்கரைக்கு அழைத்தனர். ஒரு பெரிய ராட்சச கருமீன் இருப்பதாகக் கூறினர். அவலோடு போனான். அங்கு போன பிறகுதான் அது பொய் என்றும், அவர்கள் தன்னை ஏமாற்றி விட்டனர் என்றும் புரிந்து கொண்டான். அவன் நன்றாகப் படித்ததற்காக அவனைக் கேலி செய்தனர், பதிலுக்கு அவனும் கிண்டல் செய்தான். பேச்சு சண்டையில் முடிந்தது. அவன் ஒருவன். அவர்கள் ஏழு பேர். புத்தகங்களை எறிந்து தாக்கிக் கொண்டனர். அந்தக் குழப்பத்தில் ஒரு பையனுக்குத் தலையில் அடி. இரத்தம் கொட்டியது. கீழே விழுந்தான். பிள்ளைகள் பயந்து ஓடிப் போயினர்.

அடிபட்டவனுக்காகப் பினாக்கியோ அனுதாபப் பட்டான். காயங்களைத் துடைத்தான். அப்போது அங்கே வந்த இரண்டு காவல்காரர்கள் பினாக்கியோவைச் சந்தேகித்துக் கைதுசெய்தனர். அவன் தப்பித்து ஓடினான். அவனைப் பிடிக்க ஒரு நாயை ஏவினர். பினாக்கியோ ஓட, நாய் அவனைத் துரத்தியது. அவன் கடலில் குதித்தான். நாயும் குதித்தது. அவன் நீந்தினான். நாய்க்கு நீந்தத் தெரியவில்லை. ''பினாக்கியோ! என்னைக் காப்பாற்று!'' என்று அது அலறியது. இரக்கம் கொண்டான். நாயைக் கரையில் சேர்த்தான். அது நன்றியோடு நடந்து சென்றது. அவன் தொடர்ந்து நீந்தினான்.

சிறிது தூரம் சென்றதும் ஒரு மீனவனுடைய வலையில் சிக்கினான். மீனவன் அவனை ஒரு புது வகை மீன் என நினைத்தான். தான் ஒரு மீன் இல்லை என்று எவ்வளவோ கெஞ்சினான். மீனவன் நம்பவில்லை. அவனைச் சமைத்துச் சாப்பிட ஏற்பாடுகள் செய்தான். தக்க சமயத்தில் அந்தக் காவல்காரர்களின் நாய் அங்கே தோன்றியது. அவனைக் கவ்விக் கொண்டு வெளியே ஓடியது. அவன் உயிர் தப்பினான்.

பினாக்கியோவுக்குச் சட்டைகள் இல்லை. வெறும் உடம்போடு இருந்தான். வழியில் ஒரு கோணி கிடைத்தது. இடுப்பில் சுற்றிக் கொண்டான். தேவதையின் வீட்டுக்கு ஓடினான். களைப்பால் அங்கே மயங்கி விழுந்தான். கண் விழித்தபோது கட்டில் மீது இருந்தான். தேவதை அருகில் இருந்தாள். ''மறுபடியும் உன்னை மன்னிக்கிறேன். இன்னொரு முறை கெட்டு நடந்தால் நீ கஷ்டப்படுவாய், ஜாக்கிரதை!'' என்று தேவதை எச்சரிக்கை செய்தாள்.

பினாக்கியோ பள்ளிக்கூடத்தில் சேர்ந்தான். உழைத்தான். முதலிடம் பெற்றான். நல்ல மாணவன் என்ற பாராட்டும் பெற்றான். தேவதைக்கு அளவில்லாத ஆனந்தம்.

''பினாக்கியோ! நீ இனிமேல் மரப்பொம்மையாக இருக்க வேண்டாம். உன்னை ஓர் உண்மைச் சிறுவனாக மாற்றுகிறேன். நாளைக்கு உன் ஆசை பூர்த்தியாகும்'' என்றாள். பினாக்கியோ தன் அதிர்ஷ்டத்தை எண்ணி வியந்தான். மறுநாள் அந்த நிகழ்ச்சியை ஒரு விழாவாகக் கொண்டாடத் தீர்மானித்தனர். அவனுடைய பள்ளித் தோழர்களுக்கு நல்ல விருந்து ஏற்பாடு செய்தனர்.


அடுத்த நாள் விருந்துக்குத் தோழர்களை அழைப்பதற்காகப் பினாக்கியோ புறப்பட்டான். ''இருட்டுவதற்குள் திரும்பிவிடு. ஜாக்கிரதை'' என்று கூறித் தேவதை வழி அனுப்பினாள். தோழர்களை அழைத்தான். கடைசியில் ரோமியோ என்ற நண்பனைச் சந்தித்தான். ரோமியோ படிப்பில் அக்கறை இல்லாதவன். முழுச் சோம்பேறி. ''இன்றிரவு நான் விளையாட்டுப் பூமிக்குப் போகிறேன். விழாவுக்கு வர முடியாது'' என்றான் ரோமியோ.

''அங்கே என்ன விசேஷம்?'' என்று பினாக்கியோ கேட்டான்.

''அங்கு பள்ளிக்கூடமே இல்லை. வருடம் முழுவதும் விடுமுறைதான். கஷ்டமே இல்லை. விருப்பம் போல் விளையாடலாம். நீயும் வருகிறாயா?'' என்று அவன் கேட்டான். பினாக்கியோ முதலில் மறுத்தான். பிறகு மனம் மாறினான். தேவதையை மறந்தான். வீட்டை மறந்தான். விழாவை மறந்தான்.

இரவு நேரம். 'விளையாட்டுப் பூமி'யின் வண்டி வந்தது. பல கழுதைகள் அதை இழுத்து வந்தன. வண்டிக்காரன் வித்தியாசமாக இருந்தான். அவனைப் பார்த்ததுமே சிறுவர்களுக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. எட்டு முதல் பன்னிரண்டு வயது வரை ஏராளமான சிறுவர்கள் வண்டியில் இருந்தனர். ரோமியோ வண்டியில் ஏறினான். பினாக்கியோவும் ஏறிக் கொண்டான். வண்டி விரைந்தது.

'விளையாட்டுப் பூமி'யில் ஏராளமான சிறுவர்கள். வித விதமான பொழுது போக்குகள். விளையாட்டுகள். உல்லாசங்கள். அங்கு இல்லாதவை புத்தகம், ஆசிரியர், பள்ளிக்கூடம், படிப்பு. பினாக்கியோவுக்குச் சொல்ல



முடியாத மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியில் ஐந்து மாதங்கள் ஐந்து நொடிகளாகக் கழிந்தன.

ஒரு நாள் பினாக்கியோ காலையில் எழுந்தான். உடம்பு வலித்தது. தலையைச் சொறிந்து கொண்டான். கையில் ஏதோ தட்டுப்பட்டது. அருகில் இருந்த நீரில் முகத்தைப் பார்த்தான். அவனுடைய காதுகள் இரண்டும் கைகளை விட நீளமாக வளர்ந்திருந்தன! சிறிது நேரத்தில் கைகள் முன்னங் கால்களாக மாறின. முகம் நீண்டு வாயாக மாறியது! வால் தோன்றியது! உடம்பு நிறம் மாறியது. பழுப்பு ரோமங்கள் முளைத்தன! நிஜமாகவே அவன் ஒரு சின்னக் கழுதைக் குட்டியாக மாறினான்! வாயைத் திறந்து கழுதையைப் போல ''ஆஅ. ஆஅ. ஆஅ'' என்று கத்தினான்.

ரோமியோவும் மற்ற சிறுவர்களும் அதே போல் சின்னச் சின்னக் கழுதைக் குட்டிகளாக மாறினர். சுற்றிச் சுற்றி ஓடினர். கோஷ்டி கோஷ்டியாகக் கத்தினர். அந்தச் சப்தத்தைக் கேட்டு 'விளையாட்டுப் பூமி'யின் வண்டிக்காரன் வந்தான். அவற்றைச் சந்தைக்கு ஓட்டிச் சென்றான். நல்ல விலைக்கு விற்றான்.

பினாக்கியோவை ஒரு சர்க்கஸ்காரன் வாங்கினான். பல விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுத்தான். நன்கு அலங்கரித்தான். ஒரு நாள் வளையத்தின் வழியாகப் பினாக்கியோ தாண்டும்போது கால்கள் மடங்கி விட்டன. அடிபட்டது. அவன் நொண்டி ஆனான். அன்று முதல் விளையாட்டுக்களைச் செய்ய முடியவில்லை. எனவே, பினாக்கியோ ஒரு மேளக்காரனுக்கு விற்கப்பட்டான்.

மேளக்காரன் பினாக்கியோவைக் கொன்று, தோலை உரித்து ஒரு புதிய மேளம் செய்ய நினைத்தான். அதற்காக அவனைக் கடற் கரைக்கு ஓட்டிப் போனான். கழுத்தில் பெரிய கல்லைக் கட்டினான். கடல் நீரில் தள்ளினான். அப்போது கடல் மீன்கள் பினாக்கியோவைச் சூழ்ந்தன. அவனுடைய கழுந்துத் தோலைக் கடித்துச் சாப்பிட்டன. அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. பினாக்கியோ மறுபடியும் மரப் பொம்மையாக மாறி விட்டான்! மேளக்காரன் வியப்பில் ஆழ்ந்தான். பினாக்கியோ கடலில் நீந்திச் சென்றான்.

கடலில் ஒரு ராட்சச சுறாமீன் இருந்தது. அது பினாக்கியோவை விழுங்கி விட்டது. ஏற்கெனவே அது கெப்பெத்தோவை விழுங்கியிருந்தது. கெப்பெத்தோ மீனின் வயிற்றுக்குள் நலமாக இருந்தான். உள்ளே போன பினாக்கியோ அப்பாவைக் கண்டான். 'அப்பா' என்று கட்டிக் கொண்டு கதறி அழுதான். ''இனிமேல் உங்களை விட்டுப் போக மாட்டேன்'' என்று உறுதி அளித்தான்.


எதிர்பாராத சந்திப்பு இருவருக்கும் இன்பமாக இருந்தது. அவர்கள் திட்டமிட்டுச் சுறாமீனின் வாய் வழியாகக் கடலில் குதித்தனர். கெப்பெத்தோவுக்கு வயதாகி விட்டது. நீந்த முடியவில்லை. பிள்ளையின் முதுகில் ஏறி அமர்ந்தான். பினாக்கியோ எளிதில் நீந்தி அப்பாவைக் கரையில் சேர்த்தான்.

பினாக்கியோ அப்பாவிடம் மிகவும் அன்பாக இருந்தான். அவரைக் காப்பாற்றுவதற்காகக் கடுமையாக உழைத்தான். சிக்கனமாக இருந்து சேமித்தான். அப்பாவுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தான். ஓய்வு நேரத்தில் புத்தகங்களைப் பயின்று அறிவாளி ஆனான்.

தேவதை அவனை மன்னித்தாள். அவனுடைய ஆசையை அன்போடு நிறைவேற்றினாள். மரப் பொம்மையாக இருந்த பினாக்கியோ ஓர் உண்மைச் சிறுவனாக மாறினான்!

---

CARLO COLLODI என்பவர் இத்தாலிய மொழியில் எழுதிய 'The Adventures of PINOCCHIO: The story of a puppet' என்ற கதையின் சுருக்கமே இது.



# விஞ்ஞான விளையாட்டு

ஆர்.பி.சாரதி

விளையாட்டை விரும்பாதவர்கள் உண்டா? சின்னஞ்சிறுவர் சிறுமியர்முதல் இளைஞர், பெரியவர் வரை விளையாட்டில் விருப்பமுடையவராகவே இருப்பர். இங்கே நாம் பார்க்கப் போவது வேடிக்கையான விளையாட்டு மட்டுமல்ல.... அறிவை வளர்க்கும் அறிவியல் விளையாட்டு!... விஞ்ஞான விளையாட்டு! மிக எளிய விளையாட்டு முதல் மின்சார விளையாட்டு வரை கற்கலாம்! சிலவற்றைப் பள்ளியின் அறிவியல் கண்காட்சிகளில் கூடச் செய்து நண்பர்களை மகிழ்விக்கலாம்! ஆம், சிலவற்றைச் செய்துபார்க்கச் சில இரசாயனப் பொருட்கள் கூடத் தேவையாக இருக்குமே — அவைகளை ஆய்வுக் கூடத்தில் செய்து பார்க்கலாம்.

விளையாட்டாக விஞ்ஞானம் கற்கும் நீங்களே நாளை சர் சி. வி. இராமனாகவும் சர். ஜகதீச சந்திரபோஸாகவும் மாற முடியாதா, என்ன?



## தண்ணீரா? வெந்நீரா?

தண்ணீர் உயர்ந்ததா, வெந்நீர் உயர்ந்ததா?

இது பட்டிமன்றத் தலைப்புப் போல இருக்கிறதா?... ஆம்!

தண்ணீர் — இந்தக் கடுங்கோடையில், எவ்வளவு ஜில்லென்று சுகமாக இருக்கும்!

(கிடைத்தால்தானே என்கிறீர்களா?)

வெந்நீர் — எப்போதும் உடல்நலத்துக்கு உகந்தது வெந்நீர்தான்!

சரி, இதைப் பேசித் தீர்ப்பதைவிட செய்து பார்த்து நிரூபித்து விடுவோமா, எது சிறந்ததென்று?

ஒரே அளவிலான இரு சிறு கண்ணாடிப் புட்டிகளை எடுத்துக் கொள்வோம். காலி மைப்புட்டிகள் கூடப் போதும். ஒரு புட்டியில் தண்ணீரையும், இன்னொரு புட்டியில் வெந்நீரையும் ஒரே அளவில் ஊற்றுவோம். அடையாளம் நன்றாகத் தெரிவதற்காக இரண்டொரு சொட்டு சிவப்பு மையை வெந்நீரில் விட்டுச்சிவப்பு நீராக்கிவிடுவோம்! இரண்டு புட்டிக்குமே மூடி எதுவும் வேண்டாம்!

வெந்நீர்ப் புட்டியைக் கீழே வைத்து விடுவோமா? தண்ணீர்ப் புட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு மெல்லிய அட்டை ஒன்றால் அழுத்தி மூடியபடியே மெல்லக் கவிழ்த்தபடி வெந்நீர்ப் புட்டி மீது வைப்போம்... புட்டிகளின் வாய்ப் புறம் இரண்டும் முழுமையாக ஒன்றின் மீது ஒன்று சரியாகப் பொருந்த வேண்டும்.

இப்போது மெல்ல அட்டையை எடுத்து விடுவோமா?

அடடா! என்ன நடக்கிறது?

வெந்நீரைக் கீழாகவும், தண்ணீரை மேலாகவும்தானே வைத்தோம்!

வெந்நீர் மேலே.... மேலே.... உயர்கிறது! மேல் புட்டிக்கு விரைகிறது!



ஒரிடத்தில் உடல்கள்;
மற்றோரிடத்தில் தலைகள்!

மருது பாண்டியரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பெரிய மருது, சின்ன மருது என்று இரு சகோதரர்களைத்தான் மருது பாண்டியர் என்பார்கள். இவர்கள் சிவகங்கைச் சீமையை மிகச் சிறப்பாக ஆண்டவர்கள்; அஞ்சா நெஞ்சம் கொண்டவர்கள்; உணர்ச்சி மிக்கவர்கள்.

இவர்கள் வெள்ளைக்காரரை எதிர்த்து வீரப்போர் புரிந்தார்கள். 150 நாட்கள் இடைவிடாமல் போர் நடந்தது. ஆயினும் இவர்களுடன் கூடவே இருந்த சிலர், காசுக்கு ஆசைப்பட்டு இவர்களைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள்! ஆகையால், வெள்ளைக்காரர்கள் இவர்களைச் சுலபமாகப் பிடித்துவிட்டார்கள்.

பெரிய மருது, சின்ன மருது இருவரையும் வெள்ளைக்காரர்கள் திருப்பத்தூர்க் கோட்டையிலே தூக்கிலிட்டுக் கொன்றார்கள். , தூக்கு மேடை ஏறும்போது கடைசி விருப்பமாக இவர்கள் தெரிவித்தவை:

''எங்கள் உடல்களை இங்கே புதையுங்கள். ஆனால், எங்கள் தலைகளைக் காளையார் கோயில் சந்நிதிக்கு எதிரே சமாதி வையுங்கள்.''

மானாமதுரைக்குப் பக்கத்திலே காளையார் கோயில் என்ற ஊர் இருக்கிறது. அங்குள்ள மிகப் பெரிய கோயிலின் பெயரே அந்த ஊரின் பெயராகிவிட்டது. அக்கோயிலின் கோபுரத்தைக் கட்டியவர்கள் மருது சகோதரர்களே. இன்றும் அக்கோயிலுக்கு முன், அவர்களது தலைகள் புதைக்கப்பட்ட சமாதியைக் காணலாம். திருப்பத்தூர் மிஷன் ஆஸ்பத்திரிச் சுற்றுச் சுவருக்குள் அவர்களது உடல்கள் புதைக்கப்பட்ட இடத்தையும் பார்க்கலாம்!

தண்ணீர்! தண்ணீர்! கீழே... கீழே இறங்குகிறது!

மேலே சிவப்பு வண்ணத்தில் வெந்நீர்! கீழே தண்ணீர்!


கீழ்ப்புட்டியின் சிவப்பு, தண்ணீரிலும் இலேசாகப் படரலாம்!

மேலே சிவப்பு வெந்நீரைத்தொட்டுப் பார்த்தால் தெரியும் சூடு!

எது உயர்ந்தது? தண்ணீரா, வெந்நீரா?

இன்னொரு விளையாட்டு

## திரவங்களின் பந்தயம்



திரவங்களின் பந்தயமா? ஏன் கூடாது? நமக்கு மட்டும் தான் பந்தயமா? ஒரே அளவிலான மூன்று புட்டிகள். ஒன்றில் தண்ணீர். இரண்டாவதில் ஆல்கஹால். மூன்றாவதில் டர்பென்டைன்! திரவங்களும் ஒரே அளவுதான்! மூன்று புட்டிகளையும் துளையுள்ள கார்க் அல்லது ரப்பர் அடைப்பானால் மூடிவிடுவோம். அந்தத் துளைகளின் வழியே திரவத்தைத் தொடும்படி தனித்தனியே மூன்று ஒரே அளவு உயரமான கண்ணாடிக் குழாய்களைச் செருகி விடுவோம். மூன்று திரவங்களும் பந்தயத்துக்குத் தயார்.

மூன்று புட்டிகளையும் ஒரு பிளாஸ்டிக் அல்லது கண்ணாடித் தொட்டிக்குள் வைப்போம்.

இவை அசையுமா? அசைக்க நாம் என்ன செய்வது?

சூடான வெந்நீரைத் தொட்டியில் ஊற்றிக் கொண்டே பார்ப்போமா வேடிக்கையை?

எது வேகமாக மேலே முன்னேறுகிறது? புட்டிகள் அல்ல... திரவங்கள் தாம்!

முதலிடம் ஆல்கஹாலுக்கு! ஆம், அதுதான் விரைந்து மேலே ஏறும்!


இரண்டாவது இடம் டர்பென்டைனுக்கு!

மூன்றாவது இடம்தான் தண்ணீருக்கு!

ஆல்கஹால் பள்ளி அறிவியல் ஆய்வுக் கூடத்தில் கிடைக்கும்.

வீட்டில் டர்பென்டைனுக்கும், தண்ணீருக்கும் மட்டும் பந்தயம் விட்டுப் பாருங்களேன்!

# பிருந்தாவனம்



## கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்

### யாருக்கு நன்றி?

சாப்பாட்டு மேஜையில் நாங்கள் எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தோம். அப்போது என் தங்கை, ''நான்தான் இன்று காய்கறிகளை அம்மாவுக்கு நறுக்கிக் கொடுத்தேன். அதனால் எனக்கு நன்றி கூறிவிட்டுத்தான் சாப்பிட ஆரம்பிக்க வேண்டும்'' என்றாள்.

'நான்தான் கஷ்டப்பட்டு உங்களுக்குச் சமையல் செய்தேன். அதனால் எனக்கு நன்றி கூறிவிட்டுத்தான் சாப்பிட ஆரம்பிக்க வேண்டும்'' என்றாள் அம்மா.

''இந்தக் காய்கறிகளையெல்லாம் கொத்தவால் சாவடியிலிருந்து காலை 4 மணிக்கே வாங்கி வந்துவிடும் அந்த உழைப்பாளிக்குத்தான் நன்றி'' என்றேன் நான்.

ஆனால், எங்கள் பாட்டியோ, ''அடி யாத்தே! நல்ல கதையா இருக்கே! விவசாயி வேர்க்க விறுவிறுக்க உழைச்சு, பயிர் நட்டு, அறுவடை செய்து நமக்கெல்லாம் தருகிறான். அதுக்கு உங்களுக்கு நன்றி கேக்குதோ?'' என்றாள்.

என் அத்தையும் விடவில்லை. ''என்னவாயிருந்தாலும், இந்த பூமாதேவிக்கு நன்றி சொல்லிட்டுத்தான் சாப்பிடணும்'' என்றாள்.

இவ்வளவு நேரமும் பேசாமல் இருந்த என் தாத்தா, ''உங்களை, என், இந்தப் பூமியையே படைச்ச அந்த ஆண்டவனுக்கு நன்றி சொல்லிவிட்டுத்தான் சாப்பிட ஆரம்பிக்கணும்'' என்றார்.


நாங்கள் எல்லோரும் அவர் சொன்னதை ஆமோதித்தோம். எங்களுக்கு இது சரியாகத்தான் படுகிறது. உங்களுக்கு எப்படியோ?

—எம். ஸ்ரீராம் (874)
சென்னை-4



### சிறுமிக்கு மதிப்பளித்த ஜனாதிபதி!


அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கனின் முகம் பார்ப்பதற்கு அவ்வளவு அழகாயிராது. அவர் ஜனாதிபதி தேர்தலில் நின்று பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, அவருக்கு ஒரு சிறுமி கடிதம் எழுதினாள். அந்தக் கடிதத்தில்



'மிஸ்டர் லிங்கன், நீங்கள் தாடி வைத்துக்கொண்டால், உங்கள் முகத்திற்கு மிக நன்றாக இருக்கும்' என்று குறிப்பிட்டிருந்தாள்.

சிறுமியின் யோசனையை லிங்கன் ஏற்றார். தாடி வைத்துக் கொண்டார். பிறகு தாடி நிரந்தரமாகி விட்டது!

—எஸ். ஜெயஸ்ரீ (1254)
திருச்சி-14



### தேளு! தேளு!

சிறுவன்: அப்பா, நான் நூறு எண்ணுறதுக்குள்ளே நிறையத் தேளு தேளாய் வருதப்பா!

அப்பா: என்ன! தேளா! எங்கே? எங்கே?

சிறுவன்: இருபத்'தேளு', முப்பத்'தேளு', 'நாற்பத் 'தேளு'...

—பழ. நாகப்பன் (721)
வேந்தன்பட்டி

### வழிகாட்டியின் விளக்கம்

ஒருவர் தேசிங்கு ராஜன் கோட்டையான செஞ்சிக்குப் போனார். அங்கு ஒரு வழிகாட்டி அவரைப் பல இடங்



களுக்கும் அழைத்துப் போய் விளக்கம் கொடுத்தார். ஓர் இடத்தில் பெரிதாக ஒன்றும், சிறிதாக ஒன்றும் இரு மண்டை ஓடுகள் வைக்கப்பட்டிருந்தன.

வழிகாட்டி, பெரிய ஓட்டைக் காட்டி ''இதுதான் தேசிங்கு ராஜனின் மண்டை ஓடு'' என்று சொன்னார்.

''அப்படியானால் இது...?'' என்று சிறிய மண்டை ஓட்டைக் காட்டிக் கேட்டார், பார்க்க வந்தவர்.

''இது தேசிங்கு ராஜனின் 14வது வயது மண்டை ஓடு'' என்று விளக்கிக் கூறினார் வழிகாட்டி!

—புலவர் சத்தியசீலன் கூறக் கேட்டவர்:
—க. சௌரிராஜன் (1078)
காரைமேடு.



**காது பிள்ளையார்!**

எங்கள் ஊரில் ஒரு பிள்ளையார் இருக்கிறார். அவர் பெயர் என்ன தெரியுமா? காது பிள்ளையார்! ஆம், காது கேட்காதவர்கள் இங்கு வந்து சாமி கும்பிட்டால் காது கேட்குமாம்!

—கோ சரவணன் (1609)
அம்மா சத்திரம்

**திருமண அழைப்பிதழ்**

சிலர் தங்களுக்கு வரும் அழைப்பிதழ்களைத் திருமணம் முடிவதற்கு முன்பே குப்பைக் கூடையில் போட்டு விடுகிறார்கள். அல்லது தெருவிலே எறிந்து விடுகிறார்கள். இது சரியென்று எனக்குத் தோன்றவில்லை.

—இரா. கீதா (30)
கோவை-37



**குஷியின் காரணம்...?**

பரமசிவன்: என்ன நம்ம மகன் பிள்ளையாரும், கண்ணனும் ரொம்ப குஷியாக இருக்கிறார்களே, என்ன காரணம்?



பார்வதி: 'கோகுலம்' பத்திரிகையின் முத்திரையில் அவர்கள் இருவரும் சேர்ந்து இருக்கிறார்களாம். அதனால் அவர்களைக் கையில் பிடிக்க முடியவில்லை!

—அ.பி. குமார் ராஜசேகர் (501)
கரந்தை

**ஏழு எழுத்துக்கள் சேர்ந்தால்...?**

G — Good
O — Original
K — Knowledge
U — Unique
L — Lovely
A — A-1
M — Marvellous



—தி. ந. ச. வேங்கடரங்கன் (35)
சென்னை-17.

**எத்தனை காக்கைகள்?**

''நம் நாட்டில் எத்தனை காக்கைகள் இருக்கின்றன?'' என்று கேட்டார் அக்பர் சக்கரவர்த்தி.

''33,03,420 காக்கைகள்'' என்று உடனே பதில் சொன்னார், பீர்பால்—அவரது சபையிலிருந்த நகைச்சுவைப் புலவர்.

''சரியாகவா? அப்படி இல்லையென்றால்....?''

''அதிகம் இருந்தால், வேறு நாடுகளிலிருந்து விருந்தாளிகளாக வந்திருக்கும். குறைந்தால், நம் நாட்டுக் காக்கைகள் வேறு நாடுகளுக்கு விருந்தாளிகளாகப் போயிருக்கும்.''

—மு. க. நெடுமாறன் (660)
காவேரிப்பட்டணம்





**வேடிக்கைப் புதுமொழிகள்**

பெட்ரோல் இல்லாத மோட்டார்-வண்டி பிடித்துத் தள்ளினால் 'ஸ்டார்ட்' ஆகுமா?

படிக்காமல் பரீட்சை எழுதியவன், பாஸாகத் தேங்காய் உடைத்தானாம்!

இரவிலே படுத்துக் காலையிலே எழுந்தவன் — ஆக, 'எட்டு மணி நேரம் உண்ணா விரதம்' என்றானாம்.

மஞ்சிவிரட்டுப் பார்க்கப் போனவன் மாட்டைப் பார்த்து மயங்கி விழுந்தானாம்!

—ஏ. பிரபு (641)
பரோட்டா



**பேனாவில் பெயர்!**

ஒருவன் தன்னுடைய பேனாவில் தன் முழுப் பெயரையும் வெட்டிக்கொள்ள ஆசைப்பட்டான்.

''தம்பி, உன் பெயர் என்ன?'' என்று கேட்டார் பெயர் வெட்டுபவர்.

''அனந்த ரெங்க ராமானுஜ ஸ்ரீனிவாச சடகோப சென்ன கேசவ பெருமான்.''

—எஸ். புவனேஸ்வரி (268)
நங்கவரம்

**தொழிலைச் செய்**

சிறுவயதில் திறமையுடன்
செயல்பட வேண்டும்.
சிறுதொழிலைச் செய்துபொருள்
சேர்த்திட வேண்டும்.



தொழில்செய்து உற்பத்தியைப்
பெருக்கிட வேண்டும்
தொழிலாலே நம்வாழ்வை
உயர்த்திட வேண்டும்.

ஏடெடுத்துப் படித்துச்சும்மா
இருந்து விடாதே!
எழிலான தொழில் இருக்கு:
மறந்து விடாதே!

சோம்பலாக இருந்துவிட்டால்
காசு வராது!
சோம்பல்உனக்குத் தூக்கம்தரும்;
சோறு தராது!

—ஜி. ஏகலைவன் (937)
திருப்பனையூர்

இன்ஸ்பெக்டர்: உங்களுடைய பணம், பொருள் எல்லாத்தையும் திருடன் திருடும்போது, நீங்க ஏன் உங்க துப்பாக்கியைக் காட்டி மிரட்டியிருக்கக் கூடாது?



புகார் கொடுத்தவர்: அது ஒண்ணாவது திருட்டுப் போகாமல் இருக்கணுமேன்னுதான் மறைச்சு வைச்சேன், சார்!

—ஆர். ராம்கோபால் (1659)
பாண்டிச்சேரி-4

**அறுவைகள் ஆறு!**

1. வேடந்தாங்கலில் உள்ள பறவைகளெல்லாம் எங்கிருந்து வந்தன?
—முட்டையிலிருந்து.

2. ஜிம்மி கார்ட்டரைப் பார்த்து 'உட்காருங்கள்' என்றால் அவர் உட்கார மாட்டார். ஏன்?
—அவருக்குத் தமிழ் தெரியாது!

3. நீங்கள் என்னை எவ்வளவு திட்டினாலும் நான் சட்டை செய்ய மாட்டேன். காரணம்?
—நான் ஒரு தையற்காரனல்ல!

4. எவரெஸ்ட் சிகரத்தில் இரண்டாவது முறை ஏறியவர் யார்?
—இலவன் சிங் (11), முதலாவதாக ஏறியவர் டென்சிங் (10)!

5. ஊசியிலே கனமான ஊசி எது?
—குண்டு ஊசி!

6. நாங்கள் பள்ளிக்கூடத்திற்கு ஏன் போகிறோம், தெரியுமாங்க சார்?
—பள்ளிக்கூடம் எங்க கிட்ட வராதே!

—ஜி. ஸ்ரீதர் (1128)
சேலம்-7.



**முதன் முதல் தொடர்கதை எழுதியவர்**

சுமார் 120 வருடங்களுக்கு முன்னால், புகழ் பெற்ற எழுத்தாளரான சார்லஸ் டிக்கன்ஸ் என்பவர்தான் தொடர்கதை எழுதும் முறையை முதன் முதலில் ஆரம்பித்தார். அதற்குப் பிறகுதான் தொடர் கதை எழுதும் வழக்கம் உலகமெங்கும் பரவியது.

—இரா. உமாசத்தியன் (1089)
நாகர்கோயில்-1



**என்ன வாகியிருக்கும்?**

ஆசிரியர்: மின்சாரம் கண்டு பிடிக்கப்படாமல் இருந்தால் இப்போது என்னவாகி யிருக்கும்?
மாணவன்: நாம் அனைவரும் டி.வி.யை மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் பார்க்க வேண்டியிருக்கும்.

—வி. ரமேஷ் (196)
சென்னை-18

**அரிது! அரிது!**

அரிது, அரிது, பஸ் வருதல் அரிது!
வந்தாலும் ஸ்டாப்பில் நிற்பது அரிது!
நின்றாலும் இடம் கிடைப்பது அரிது!
இடம் கிடைத்தாலும் பஸ் நகர்தல் அரிது!



நகர்ந்தாலும் நிற்காமல் ஓடுதல் அரிது!
ஓடினாலும் நேரத்தோடு போவது அரிது!
நேரத்தோடு போனாலோ, அடடா,
அரசாங்க பஸ்ஸாக இருத்தல் அரிது!

-எஸ். நாகராஜன் (1576)
நாகர்கோவில்

**புரிந்திருக்குமே!**

டாடாடாடாடாடா தோட்டத்திலே 555555 பறிக்கிறது? டாடா வருகிறேன்.

இது என்ன புரிந்திருக்குமே!

''ஆறுடா தோட்டத்திலே ஆரஞ்சு பறிக்கிறது? இருடா வருகிறேன்'' என்பதைத்தான் அப்படி எழுதியிருக்கிறது!

—சி. சந்திரசேகர் (7)
திருச்சி-6






**'கு'**

கும்பகோணத்தில்
குடியிருந்த
குப்புசாமியின்
குழந்தை
குருமூர்த்தி
குறும்புடன்
குரங்கைக்
குச்சியால்
குத்த
குரங்கு
குபீரென்று
குளத்தில்
குதிக்க,
குளமே
குழம்பியது!

—கோ. சரவணன் (1609)
அம்மா சத்திரம்

# ரோஜாச் செடி



## அழ. வள்ளியப்பா

### காட்சி 1

இடம்: மீராவின் வீடு.
பாத்திரங்கள்: பணக்காரப்பெண் மீரா, அவளது தோழி கமலா.
(மீரா கவலையுடன் கன்னத்தில் கை வைத்தபடி நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாள். கமலா வருகிறாள்.)

கமலா: மீரா, மீரா, உன்னைத்தானே! ஏன் இப்படி ஒரு மாதிரியா இருக்கிறே? என்ன விஷயம்?

மீரா: நாளைக்குச் சாயங்காலம், நம்ம பாரதி சிறுவர் சங்கத்திலே மலர்க் காட்சி....

கமலா: ஒவ்வொரு வருஷமும்தான் மலர்க் காட்சி நடக்கிறது. ஒவ்வொருவரும் அவரவர் வளர்த்த மலர்ச் செடியை அப்படியே தொட்டியோடே கொண்டுவந்து காட்சியிலே வைக்கிறாங்க. அதுக்கென்ன இப்போ?

மீரா: ஒவ்வொரு வருஷமும் ஊர்ப் பெரிய மனுஷங்க வருவாங்க. அல்லது கல்வி அதிகாரிங்க வருவாங்க. ஆனால், இந்த வருஷம் கல்வி மந்திரியே வருகிறாரே!

கமலா: அதுக்கென்ன, கவர்னரே வரட்டுமே!

மீரா: இத்தனை வருஷமும், யார் நல்லா செடி வளர்த்திருக்காங்களோ, அவங்களுக்கு 25 ரூபாய் தான் பரிசாய்க் கொடுப்பாங்க. இந்த வருஷம் 50 ரூபாய் கொடுக்கப் போறாங்களாம்!

கமலா: என்ன மீரா, பணத்திலே பிறந்து, பணத்திலே வளர்ந்து, பணத்திலே புரளும் உனக்கு இந்த ஐம்பது ரூபாய்க் காசு ஒரு பெரிசா?

மீரா: போடி கமலா, இந்த வருஷம், கற்பகம் கனகாம்பரம் வளர்த்திருக்கிறாளாம்: மாதவி மல்லிகை வளர்த்திருக்கிறாளாம். சுந்தரி சூரிய காந்தி, அலமு அந்தி மல்லி, வனஜா வாடா மல்லி — இப்படி ஒவ்வொருத்தியும் ஒவ்வொரு செடி வளர்த்திருக்காங்களாம். நான்தான் ஒண்ணுமே வளர்க்கல்லே. கல்வி மந்திரியின் கையாலே பரிசு வாங்க எனக்குக் கொடுத்து வைக்கல்லே... உம், யாருக்கு இருக்குதோ அதிர்ஷ்டம்?

கமலா: கல்வி மந்திரி கையாலே பரிசு வாங்க முடியல்லியேன்னு வருத்தப்படறியா?

மீரா:... ஆமா, ஏண்டி கமலா, கல்வி மந்திரி பரிசு கொடுக்கிறபோது போட்டோ எடுப்பாங்க, இல்லியா?

கமலா: பருப்பில்லாமல் கல்யாணமா? நிச்சயம் எடுப்பாங்க.

மீரா: எனக்கு மட்டும் பரிசு கிடைச்சா நான் பரிசு வாங்கறதை போட்டோ எடுத்தா, அந்தப் போட்டோவிலே ஒரு காப்பியில்லே, ஒன்பது காப்பி வாங்குவேன்.

கமலா: ஒன்பது காப்பியா?

மீரா: ஆமாண்டி. ஒரு காப்பியைக் கண்ணாடி போட்டு வீட்டிலே மாட்டி வைப்பேன். மற்ற எட்டையும் கிராமத்திலே இருக்கிற என்னுடைய பாட்டி, டில்லியிலே யிருக்கிற மாமா, அமெரிக்காவிலே இருக்கிற அண்ணா, ஆலந்தூர்லே இருக்கிற பெரியக்கா, மதுரையிலே இருக்கிற சின்ன அக்கா — இப்படி எல்லாருக்கும் அனுப்பி வைப்பேன். ஆனால்... நான்தான் செடியே வளர்க்கல்லியே! எனக்கு எப்படிப் பரிசு கிடைக்கும்? என்னை எப்படிப் போட்டோ எடுப்பாங்க?

கமலா (யோசனை செய்கிறாள்): மீரா, நீ கவலைப்படாதே! எனக்கு ஒரு யோசனை தோணுது. நிச்சயம் உனக்குத்தான் பரிசு! நான் சொல்கிறபடி செய்.

மீரா: என்ன! பரிசு எனக்கா! என்ன சொல்கிறாய் கமலா?

கமலா: மீரா, உன் காதை இப்படிக் கொண்டு வா.
(மீரா கமலாவின் வாய்க்கு நேராகக் காதை வைத்துக் கொள்கிறாள்.)



மீரா, நாலாவது தெருவிலே ஒரு பிள்ளையார் கோயில் இருக்குதே, அதுக்குப் பக்கத்திலே ஒரு குடிசை இருக்குது. அந்தக் குடிசையிலே நம் பாரதி சிறுவர் சங்கத்தைச் சேர்ந்த ஒரு பொண்ணு இருக்கிறாள். நீகூட அவளைப் பார்த்திருப்பாய். எப்பவும் கிழிஞ்ச சட்டை பாவாடையோடே அவள் வருவாள்.

மீரா: அவள் பேரு?

கமலா: அவள் பேரு பார்வதி. அவளை எனக்கு நல்லாத் தெரியும். நேத்துக் கூட அவள் வீட்டுப் பக்கம் போயிருந்தேன். அவள் ஒரு ரோஜாச் செடி வளர்த்திருக்கிறாள். அட, அடா! எவ்வளவு அழகான செடி! அதில் எத்தனை ரோஜாப் பூக்கள்!

மீரா: சரி, அவள் செடி வளர்த்தால் நமக்கென்ன லாபம்?

கமலா; சொல்றதைக் கேளு, மீரா. அந்தப் பார்வதி வீட்டுக்கு நாம் இப்பவே போவோம். ஏதேனும் துட்டுக் கொடுத்தால், அவள் அந்தச் செடியைத் தந்துடுவாள்.

மீரா: நிஜமாகவா! எவ்வளவு ரூபாய் கேட்பாள்? பத்து ரூபாய் கேட்பாளா?

கமலா: பத்து ரூபாயா? அம்மாடியோவ்! அவ்வளவு எதுக்கு? ஒரு ரூபாய், ரெண்டு ரூபாய் கொடுத்தாலே போதும்.

மீரா: சரி கமலா, எதுக்கும் நான் சேர்த்து வச்சிருக்கிற பணத்திலேயிருந்து அஞ்சு ரூபாய் எடுத்து வருகிறேன்.

## காட்சி 2

இடம்: பார்வதியின் குடிசை
பாத்திரங்கள்: மீரா, கமலா, பார்வதி, பார்வதியின் அம்மா.

(மீராவும் கமலாவும் குடிசையைச் சுற்றி யுள்ள வேலியின் அருகே நின்று பேசுகிறார்கள்.)

கமலா: மீரா, மீரா, அதோ பார். அந்தச் செடிதான்! எவ்வளவு அழகாயிருக்கிறது, பார்த்தாயா?

மீரா: ஆகா! எவ்வளவு அழகாயிருக்குது! அது எனக்குக் கிடைச்சால், நிச்சயம் பரிசும் எனக்குத்தான்!

(வேலிக் கதவைத் திறக்கிறாள் மீரா. குடிசைக்குள்ளிருந்து பார்வதியின் அம்மா வருகிறாள்.)

பார்வதியின் அம்மா: யாரது?

கமலா: ஏம்மா, நாங்கதான். பார்வதி இல்லையா?

அம்மா: இப்பத்தான் கடை வீதிக்கு மண்ணெண்ணெய் வாங்கப்போனாள். என்ன விஷயம்?

கமலா: ஒண்ணுமில்லே. இந்தப் பொண்ணு யாருன்னு தெரியுமா?

அம்மா: தெரியாதே! சொன்னால் தெரிஞ்சுக்குவேன்.

கமலா: இந்த ஊருக்கே பெரிய மனிதர் அரியநாயகம் இருக்கிறாரே, அவ

ருடைய மகள்தான் இவள். பெயர் மீரா.

அம்மா: அடடே, அப்படியா! ஆமாம், பார்வதியை எதுக்காகத் தேடி வந்தீங்க?

கமலா: நீங்க இந்த மீராவுக்கு ஒரு சின்ன உதவி செய்யணும்.

அம்மா: நாங்களோ பரம ஏழை. எங்களாலே செல்வச் சீமான் வீட்டுப் பொண்ணுக்கு என்ன உதவி செய்ய முடியும்?

கமலா: அம்மா, உங்களாலே நிச்சயம் முடியும். மீரா ஒரு ரோஜாச் செடி வளர்த்தாள். அது ரொம்ப நல்லா வளர்ந்திருந்தது. நிறைய நிறையப் பூத்திருந்தது. அதை நாளைக்கு பாரதி சிறுவர் சங்கத்திலே நடக்கப் போகுதே மலர்க் காட்சி, அதிலே வைக்கணும்னு இவளுடைய அப்பா ஆசைப்பட்டாரு. ஆனால், எதிர் பாராமே ஒண்ணு நடந்திடுச்சு...

அம்மா: என்ன நடந்தது? ஆடு மாடு ஏதாவது அதைக் கடிச்சிடுச்சா?

கமலா: ஆடு மாடு கடிச்சிருந்தால் மீரா கவலைப்பட மாட்டாள். இவளுக்கு ஒரு தம்பி இருக்கிறான். அவன் படு சுட்டி. அவன் இன்னிக்குக் காலையிலே விளையாட்டா அந்தச் செடியைப் பிடுங்கி ஒடிச்சுப் போட்டுட்டான். இவளுடைய அப்பாவுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா, பாவம், அந்தச் சின்னப் பையனைப் போட்டு அடி அடின்னு அடிச்சு நொறுக்கிடுவாரு. அப்பா பார்க்கிறதுக்கு முன்னாலே வேறே ஒரு ரோஜாச் செடியை அந்தத் தொட்டியிலே வச்சிடணும். உங்க வீட்டிலே ரோஜாச் செடி இருக்கிறது இவளுடைய அம்மாவுக்கு எப்படியோ தெரிஞ்சிருக்கு. அவங்கதான் எங்களை இங்கே அனுப்பி வச்சாங்க.

அம்மா: என்ன! பார்வதி ஆசையா வளர்த்திருக்கிற ரோஜாச் செடியையா கேட்கிறீங்க!... ஐயையோ! வேணும், வேணும். எதைக் கேட்டாலும் தந்திடலாம். பார்வதி கண்ணைப் போல இந்தச் செடியை வளர்த்து வருகிறா. இதை மட்டும் கேட்காதீங்க.

மீரா: என்னம்மா நீங்க இப்படிச் சொல்லலாமா? நாங்க என்ன சும்மாவா கேட்கிறோம்? பணம் தர்றோம் அம்மா.

அம்மா: பணம் இருக்கட்டும். பார்வதியின் மனம் நோகுமே!

கமலா: பணம்னு 25 காசு, 50 காசு இல்லேம்மா. எவ்வளவு வேணுமானாலும் கேளுங்க. ரெண்டு ரூபாய் வேணுமா? இல்லே, மூணு ரூபாய்.. அதுவும் இல்லே, நாலு ரூபாய்... சரி, உங்கள் திருப்திக்காக இருக்கட்டும். அஞ்சு ரூபாய் தாரோம். (மீரா பக்கம் திரும்பி)

மீரா, இந்த அம்மா ரொம்ப நல்லவங்க. அந்த அஞ்சுரூபாய் நோட்டை எடு. கொடுத்துட்டு ரோஜாச் செடியை வாங்கிப் போகலாம். உங்க அம்மா காத்திருப்பாங்க; நேர மாகுது.

(மீரா மணிபர்ஸிலிருந்து 5 ரூபாய் நோட்டை எடுத்துப் பார்வதியின் அம்மாவிடம் நீட்டுகிறாள்.)

மீரா: அம்மா, இதை வாங்கிக்கங்க.

அம்மா: வேண்டாம்மா, நான் வாங்க மாட்டேன்.

கமலா: சும்மா வாங்கிக்கங்க அம்மா. ஒரு சின்னப் பையனைக் காப்பாத்தின புண்ணியம் உங்களுக்குக் கிடைக்கும். இன்னொண்ணையும் சொல்லிடணும். இந்தச் செடியைக் காட்டிப் பரிசு வாங்கணும்கிறது எங்க ஆசை இல்லே. கல்வி மந்திரி வருகிற போது, இவள் கட்டாயம் கலந்து கொள்ளணுமாம். இப்படி இவள் அப்பாதான் ஆசைப்படுறார்... இந்த அஞ்சு ரூபாய் இருந்தால் உங்களுக்கு எவ்வளவோ உதவியாக இருக்கும். பார்வதிக்கு வேண்டியதை வாங்கிக் கொடுக்கலாம். சும்மா வாங்கிக்கங்க அம்மா.

(மீரா கையிலிருந்த 5 ரூபாய் நோட்டைக் கமலா வாங்கி, பார்வதியின் அம்மா கையில் திணிக்கிறாள். அம்மா நோட்டைக் கையில் வைத்தபடி யோசிக்கிறாள்.)

கமலா: என்ன அம்மா யோசனை? போட்டியிலே இந்த ரோஜாச் செடிக்குப் பரிசு கிடைக்குதோ, இல்லையோ! ஆனால், நிச்சயம் இந்த அஞ்சு ரூபாய் உங்களுக்கு இப்போதே கிடைக்குதே! பார்வதியோ படிப்பில் கெட்டிக்காரி. ஆனாலும், கிழிஞ்ச பாவாடை, சட்டையோட தான் எப்பவும் வருவா. அவளுக்கு இந்த அஞ்சு ரூபாயிலே பாவாடை சட்டை வாங்கலாமில்லையா?

மீரா: ஆமாம்மா. உங்க மகளுக்குப் புதுச் சட்டை வாங்கிக் கொடுத்தால் எவ்வளவு சந்தோஷப்படுவா! இன்னிக்கே வாங்கிக் கொடுங்கோ. நாளைக்கு மலர்க் காட்சிக்குப் புதுச் சட்டையோடே ஜம்முன்னு வரட்டும்.

அம்மா (சிறிது தயக்கத்துடனும் கவலையுடனும்): பார்வதிதான் வருத்தப் படுவாளேன்னு பார்த்தேன்... சரி, நடக்கிறபடி நடக்கட்டும். ரோஜாச் செடியை எப்போ எடுத்துக்கிட்டுப் போறீங்க?

மீரா: இதோ, இப்பவே எடுத்துப் போறோம்.

(கமலா ரோஜாச் செடி இருக்கும் தொட்டியைத் தூக்குகிறாள். வேலியைத் தாண்டி வெளியே இருவரும் வருகிறார்கள்.)

கமலா: மீரா, அஞ்சு ரூபாய்க்கு ஐம்பது ரூபாய் கிடைக்கப் போகுது. அப்போ என்னை மறந்துடாதே!

மீரா: உன்னையும் மறக்க மாட்டேன், உன் அருமையான யோசனையையும் மறக்க மாட்டேன்.

(கமலாவும் மீராவும் போன பிறகு பார்வதி மண்ணெண்ணெய்ப் புட்டியுடன் திரும்பி வருகிறாள்.)

**கோடை வெய்யில் ஆதலால் குல்லாய் போட்டிருக்கிறேன். சூடு நிலையைத் தாக்கினால் தொல்லை யாதும் அல்லவா?**

வண்ணப்படம்: திலீப் பானர்ஜி

அட்டைப்படம்



பார்வதி (ரோஜாச் செடி இருந்த இடத்தைப் பார்த்ததும் திடுக்கிடு கிறாள்): அம்மா, அம்மா, எங்கேம்மா என் ரோஜாச் செடி? எங்கேம்மா?

அம்மா: பார்வதி, ஒண்ணும் ஆபத்து வந்துடல்லே. பதறாதே! நான் சொல்றதைக் கேள். உங்க சங்கத்தைச் சேர்ந்த 'மீரா, கமலான்னு ரெண்டு பொண்ணுகள் வந்தாங்க. அந்த மீரா ஒரு ரோஜாச் செடியை அருமையா வளர்த்தாளாம். அதைப் போட்டிக்கு அனுப்பணும்னு அவ அப்பா ஆசைப்பட்டாராம். ஆனால், அவ தம்பி இன்னிக்குக் காலையிலே அந்தச் செடியை விளையாட்டா ஒடிச்சுப் போட்டுட்டானாம். அவள் அப்பாவுக்கு இது தெரிஞ்சா, அடி அடின்னு அவனை அடிச்சு நொறுக்கிடுவாராம். அந்தச் சின்னஞ் சிறு பிள்ளையைக் காப்பாத்துறதுக்காக, கெஞ்சிக் கேட்டு உன் செடியை வாங்கிப் போனாங்க.

பார்வதி: என்ன! என் செடியை வாங்கிப் போயிட்டாங்களா?

அம்மா: ஆனால், பார்வதி, அவங்க சும்மா வாங்கிப் போகல்லே. அஞ்சு ரூபாய் தந்துட்டுத்தான் வாங்கிப் போனாங்க.

பார்வதி (கண்கலங்க): என்ன அம்மா, இப்படிச் செய்திட்டீங்களே! நான் எவ்வளவு பாடுபட்டு அந்த ரோஜாச் செடியை வளர்த்தேன்? பணம்-தானா பெரிசு! அப்படிப் பார்த்தால் கூட நாளைக்கு எனக்கே பரிசு கிடைச்சாலும் கிடைக்குமே அம்மா?


அம்மா: பார்வதி, நிச்சயமாய்க் கிடைக்கும்னு எப்படியம்மா சொல்றது? பரிசு கிடைக்காத போனால், இந்த அஞ்சு ரூபாயும் போயிடுமே! இப்போ இந்தப் பணத்திலே உனக்கு ஒரு சாதாரணச் சட்டையாவது வாங்கலாமே!

பார்வதி: போம்மா, நான் அருமையா வளர்த்த ரோஜாச் செடியே போயிடுத்து. எனக்குப் புதுச் சட்டையும் வேண்டாம், பாவாடையும் வேண்டாம்.

## காட்சி 3

இடம்: பாரதி சிறுவர் சங்கம்
பாத்திரங்கள்: கல்வி மந்திரி, சங்க அமைப்பாளர், மீரா, கமலா குழந்தைகள், பெற்றோர்கள், பார்வதி.

[சிறுவர் சிறுமியர் தொட்டிகளிலே பூச்செடிகளைக் கொண்டு வந்து



வரிசையாக வைக்கிறார்கள். ரோஜாச் செடியை ஒரு எவர் சில்வர் தொட்டியிலே வைத்து, மீரா வீட்டு வேலைக்காரன் தலையிலே தூக்கி வர, மீராவும் கமலாவும் தலை நிமிர்ந்து வருகின்றனர். வேலைக்காரன் தலையிலிருந்து தொட்டியை இறக்கி மற்றத் தொட்டிகளுடன் வைக்கிறான்.]

சங்க அமைப்பாளர் (கல்வி அமைச்சருடன் வருகிறார்): எங்க சங்கத்திலே ஒவ்வோராண்டும் இப்படிப் போட்டி நடத்துகிறோம். சங்கச் சிறுவர்களும் சிறுமிகளும் ஆர்வமாகக் கலந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு செடியிலும் அதை வளர்த்த குழந்தையின் பெயர், வயது, விலாசம் எல்லாம் அட்டையிலே எழுதிக் கட்டி வைத்திருக்கிறார்கள். எல்லாச் செடிகளையும் நீங்களே பார்த்து, எது சிறப்பாக இருக்கிறதோ அதற்கு முதல் பரிசாக ரூபாய் ஐம்பதைக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி அமைச்சர்: ஓ! தேர்ந்தெடுக்கிற பொறுப்பையும் என்னிடத்திலேயே கொடுத்து விட்டீர்களா? சரி.
(ஒவ்வொரு செடியாகப் பார்க்கிறார். மீரா கொண்டு வந்த செடியின் அருகிலே சிறிது நேரம் நிற்கிறார். பிறகு, இடத்தில் வந்து உட்காருகிறார்.)

அமைப்பாளர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே, பெரியோர்களே, அருமைச் சிறுவர் சிறுமிகளே, மலர்ச் செடிகளில் சிறந்தது எது என்பதை நம் கல்வி அமைச்சர் அவர்கள் இப்போது அறிவிக்கப் போகிறார். அறிவிக்கும்படியாக அவரைக் கேட்டுக் கொள்கிறேன். அந்தச் செடியை வளர்த்த குழந்தைக்கும் கல்வி அமைச்சர் அவர்களே, தமது திருக் கரத்தால் பரிசு ரூபாய் ஐம்பதையும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்: குழந்தைகள் எல்லோரும் மிக நன்றாகத்தான் மலர்ச் செடிகளை வளர்த்திருக்கிறார்கள். எனவே, எல்லாருக்கும் என் மனமார்ந்த பாராட்டுக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும், எல்லாவற்றிலும் சிறந்த ஒன்றைப் பரிசுக்காகத் தேர்ந்தெடுக்க வேண்டுமே! அதையும் சங்க அமைப்பாளர் கேட்டுக் கொண்டபடி மிகவும் கவனமாகச் செய்திருக்கிறேன். முதல் பரிசு எந்தச் செடிக்கு, தெரியுமா? அதோ அங்கு எவர்சில்வர் தொட்டியில் இருக்கிறதே, அந்த ரோஜாச் செடிக்குத்தான்!
(எல்லாரும் கைதட்டுகிறார்கள். மீராவும் கமலாவும் துள்ளிக் குதிக்கிறார்கள். கமலா மீராவின் கையைப் பிடித்துக் குலுக்குகிறாள்.)

அமைப்பாளர் (ரோஜாச் செடியைக் கொண்டு வந்து கல்வி அமைச்சரின் எதிரே வைக்கிறார்.): இதோ, இந்தச் செடியைத்தான் நமது மதிப்புக்குரிய கல்வி அமைச்சர் அவர்கள், முதல் பரிசுக்கு உரியதெனத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதை

### விரலின் நீளம் 8 அடி!

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் ஒரு சிலை இருக்கிறது. அந்தச் சிலையின் ஆள் காட்டி விரல் மட்டும் 2½ மீட்டர் (8 அடி) நீளம் இருக்கிறது! அப்படியானால் அந்தச் சிலை எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும்!

சிலையின் உயரம் 45 மீட்டர். அந்தச் சிலை நிற்கும் பீடத்தின் உயரமும் 45 மீட்டர்! சிலையின் உட்புறம் கூடாக இருப்பதால், சிலையின் உச்சி வரை செல்ல லிஃப்ட் இருக்கிறது. பீடத்திலிருந்து சிலையின் உச்சிவரை செல்லச் சுழல் படிக்கட்டுகள் இருக்கின்றன.

சிலையின் தலையில் கிரீடம் இருக்கிறது. அந்தக் கிரீடத்தைச் சுற்றி 25 ஜன்னல்கள் இருக்கின்றன. ஜன்னல்களின் வழியாகப் பார்த்தால் நியூயார்க் நகரமும், துறைமுகமும் நன்றாகத் தெரியும்.

சிலையின் வலது கையிலே மிகப் பிரகாசமான ஒரு விளக்கு இருக்கிறது. அது கப்பல்களுக்குக் கலங்கரை விளக்கமாகவும், விமானங்களுக்கு எச்சரிக்கை விளக்காகவும் பயன்படுகிறது.

இந்தச் சிலைதான் உலகப் புகழ்பெற்ற சுதந்திரச் சிலை! இதன் எடை இரண்டு லட்சம் கிலோகிராம்!



வளர்த்த சிறுமியின் பெயர் — ஏ. மீரா, வயது பன்னிரண்டு, 5, புவனேஸ்வரி தெரு,. மீரா, உடனே வந்து பரிசைப் பெற்றுக் கொள்ளவும்.

(மீரா, துள்ளிக் குதித்து வந்து கல்வி அமைச்சர் முன்னால் நின்று வணக்கம் செலுத்துகிறாள்.)

அமைச்சர் (மீராவைத் தலை முதல் கால் வரை ஒரு முறை பார்த்து விட்டு): ஏனம்மா, உன் பெயர் தான் மீராவா?

மீரா: ஆம். என் பெயர் தான் மீரா. இந்தச் செடியை வளர்த்தது நான்தான்!

அமைச்சர்: ஏன் மீரா, நீ எவர்சில்வர் தொட்டியிலே செடியை வளர்த்திருக்கிறாயே, தொட்டியை உங்கள் வீட்டுத் தோட்டத்திலே வைத்தால், யாராவது தூக்கிக் கொண்டு போய் விடமாட்டார்களா?

மீரா: தோட்டத்திலே நான் இதை வைக்கவே மாட்டேன். எப்பவும் என் அறைக்குள்ளே பத்திரமா வச்சிருப்பேன்.

அமைச்சர் (புன்சிரிப்புடன்): சரி, ஒரு நாளைக்கு எத்தனை தடவை இதற்குத் தண்ணீர் ஊற்றுவாய்?

மீரா: பத்துப் பதினைஞ்சு தடவைக்குக் குறையாமே ஊத்துவேன். இல்லாத போனால் இவ்வளவு ஜோரா வளருமா?

அமைச்சர்: ஓஹோ! அப்படியா! சரி, இந்த எவர்சில்வர் தொட்டியிலே ஓட்டை ஏதாவது இருக்குமா?

மீரா: ஐயையோ! ஓட்டையா! ஓட்டைச் சாமான்களை எங்க வீட்டிலே உபயோகப்படுத்தவே மாட்டோம். தூக்கி எறிஞ்சிடுவோம். ஒரு சின்ன ஓட்டை கூட இதிலே இருக்காது. நல்ல தொட்டி.

அமைச்சர் (சிரித்துக் கொண்டே): அப்படியானால், இந்தப் பரிசு உனக்கு..

மீரா: (கையை ஆவலாக நீட்டிக் கொண்டு): ரொம்ப தாங்க்ஸ்.

அமைச்சர்: இந்தப் பரிசு உனக்கு... இல்லை!

மீரா (திடுக்கிட்டு): என்ன! பரிசு எனக்கு இல்லையா!

அமைச்சர்: ஆமாம். உனக்குப் பரிசு இல்லை. இல்லவே இல்லை. காரணம் என்ன தெரியுமா? நீ சொன்னமாதிரி அறைக்குள்ளேயே இதை வைத்திருந்தால், சூரிய வெளிச்சம் இல்லாமல் கெட்டுப் போயிருக்கும். அத்துடன், நீ தினமும் பத்துப் பதினைந்து தடவை தண்ணீர் ஊற்றினதாகச் சொன்னாயே, அப்படி ஊற்றியிருந்தால், அழுகிப் போயிருக்கும்.

**மணிவாசகக் கட்டம்!**

'இது என்ன அலங்காரச் சட்டம்? உள்ளே ஒன்றுமில்லையே!' என்கிறீர்களா? எல்லாம் உங்களுக்காகத்தான் விட்டு வைத்திருக்கிறது.

'ஆட்டோகிராப்' புத்தகம் போல, ஒரு சிறு நோட்டுப் புத்தகம் வைத்துக் கொள்ளுங்கள். எழுதாத பழைய டைரிகூடப் போதுமே இதற்கு? அவ்வப்போது நல்ல பொன்மொழியை எங்கேயாவது கேட்டாலோ படித்தாலோ உடனே மறக்காமல் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். போட்டோ ஆல்பம் போல் இந்த 'மணிவாக்கு'ப் புத்தகம் மெல்ல மெல்ல அழகான ஆல்பமாகத் தயாராகட்டும். பக்கத்துக்கு ஒரு நல்ல வாக்காக எழுதி வைத்தால் கூட எத்தனை அரிய பொக்கிஷமாக இந்தப் புத்தகம் உருவாகும், தெரியுமா? வண்ணக் கட்டம் கட்டி அக்கறையுடன் வாசகம் ஒவ்வொன்றையும் எழுதி வைக்கலாம்.

புதிய மணிவாசகக் கட்டத்துக்கு ஆரம்ப வாசகம் ஒன்று சொல்லட்டுமா?

''சாதனைகள் புரிய, முதலில் எங்காவது தொடங்கு!'' —டி.எஸ்.வி.

நீ மண் தொட்டியைப் பார்த்திருக்கிறாயா?

(மீரா பார்த்திருப்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டுகிறாள்.)

அமைச்சர்: மண் தொட்டியிலே இரண்டு மூன்று துவாரங்கள் போட்டு வைத்திருப்பார்கள். துவாரங்கள் இருந்தால்தான் தொட்டியிலே அதிகமாக நீர் தங்காது. அதனாலே செடி கெடாது. மண் தொட்டிக்கே துவாரம் தேவையாயிருக்கிறபோது, இந்த எவர்சில்வர் தொட்டிக்குத் தேவையில்லையா? ஆகையால், நீ சொன்னது எல்லாமே சுத்தப் பொய்... உண்மையைச் சொல்... இதை வளர்த்துக் கொடுத்தது யார்?

மீரா: (தலை சுற்றுகிறது. கமலா இருக்கும் பக்கமாகப் பார்க்கிறாள். கமலா வேறு பக்கம் தலையைத் திருப்பிக்கொள்கிறாள்.)

அமைச்சர்: மீரா, உள்ளதைச் சொல்.

மீரா: என்னை மன்னிச்சுடுங்க. நான் சொன்னது எல்லாமே பொய் தான். இந்தச் செடியை நான் வளர்க்கல்லே. நாலாவது தெருவிலே, பிள்ளையார் கோயிலுக்குப் பக்கத்திலே ஒரு குடிசை இருக்கிறது. அதிலே இருக்கிற ஏழைப் பொண்ணு பார்வதிதான் வளர்த்தாள். அவள் இல்லாதபோது, அவளுடைய அம்மாவிடத்திலே நானும் அதோ இருக்கிறாளே கமலா, அவளுமாகச் சேர்ந்து அஞ்சு ரூபாய் கொடுத்து ரோஜாச் செடியை வாங்கினோம். அதை எவர்சில்வர் தொட்டியிலே வச்சு இங்கே கொண்டாந்தோம். இந்தக் கெட்ட யோசனையை எனக்குச்-சொன்னவளே அந்தக் கமலாதான்.

அமைப்பாளர்: ஏ கமலா, இங்கே வா, எல்லாரும் உன்னையும் பார்க்கட்டும். (கமலா தலை குனிந்தபடி வந்து அமைச்சரின் முன் நிற்கிறாள்.)

அமைச்சர்: நான் சந்தேகப்பட்டது சரிதான். மீரா, கமலா, பிறருடைய உழைப்பிலே பெருமை தேட நினைக்கலாமா? நீங்கள் செய்தது பெரிய தவறு. இனிமேல் இப்படிச் செய்யாதீர்கள். —செய்யமாட்டீர்களே?

மீரா, கமலா: நாங்க செஞ்சது தப்புத் தான். இனிமேல் இப்படிச் செய்ய மாட்டோம்.

அமைச்சர்: சரி, பார்வதி என்ற பெண் இங்கே இருக்கிறாளா?

அமைப்பாளர்: (சுற்றிலும் பார்த்து விட்டு): பார்வதியைக் காணுமே! வரவில்லை போலிருக்கிறது.

ஒரு சிறுவன்: எனக்குத் தெரியும் சார் பார்வதி வீடு. ஓடிப்போய்க் கூட்டி வரட்டுமா?

அமைச்சர்: தம்பி, என் காரை எடுத்துக்கொண்டு போ. அந்தப் பெண்ணைக் கையோடு அழைத்து வா.

சிறுவன்: இதோ போகிறேன்.

அமைப்பாளர்: நம் சங்கத்தைச் சேர்ந்த இரு சிறுமிகள் இப்படிச் செய்தது மிகவும் வருந்தத் தக்கது. நம் கல்வி அமைச்சர் அவர்கள் மிகவும் மதி நுட்பம் வாய்ந்தவர்கள். இல்லாத போனால், மீராவும் கமலாவும் நம் எல்லோருடைய கண்களிலும் மண்ணைத் தூவி யிருப்பார்கள்.


சிறுவன் (பார்வதியை அழைத்துக் கொண்டு வந்து): இதோ பார்வதி வந்து விட்டாள்.
(எல்லோரும் கை தட்டி ஆரவாரம் செய்கிறார்கள்.)

அமைச்சர்: அம்மா, பார்வதி, நீ அரும் பாடுபட்டு வளர்த்த ரோஜாச் செடிக்குத்தான் முதல் பரிசு. இந்தா, இதோ ஐம்பது ரூபாய். பெற்றுக் கொள்.
(பத்து 5 ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்து முதுகிலும் தட்டிக் கொடுக்கிறார்.)

பார்வதி: வணக்கம் ஐயா, (கீழே விழுந்து கும்பிடுகிறாள்.) நான் இந்த ரோஜாச் செடிக்கு நிச்சயம் பரிசு கிடைக்கும்னு எதிர் பார்த்தேன். ஆனால், அந்தப் பரிசு இப்படி எனக்கு வரும்னு எதிர்பார்க்கவே இல்லே. உண்மையே வெல்லும்னு சொல்லுவாங்க. உங்களாலே இந்தப் பரிசு கிடைச்சது.
(மீராவின் அருகில் போகிறாள்.)
மீரா, இந்தா நீ என் அம்மாவிடம் நேத்துக் கொடுத்த அஞ்சு ரூபாய்.

மீரா: வேண்டாம், பார்வதி. நீயே வச்சுக்கோ.

பார்வதி: இல்லே, இல்லே. உன் பணத்தை நீ எடுத்துக்கோ. என் செடியை நான் எடுத்துக்கிறேன். வீட்டுக்குப் போனதும், செடியை மண் தொட்டிக்கு மாத்தி வச்சுட்டு, எவர் சில்வர் தொட்டியோடே உங்க வீட்டுக்கு வர்றேன்.
(தொட்டியுடன் செடியைத் தூக்கிக் கொண்டு)
மீரா, நான் வரட்டுமா?



''உங்க அத்திம்பேர் கரும்பைக் கடிச்சுத் தின்னுக்கிட்டே கம்பி மத்தாப்பும் கொளுத்துறாரே?''

''துபாய்லே வேலை பார்க்கிற எங்க அத்திம்பேருக்கு தீபாவளிக்கு வர லீவு கிடைக்கல்லே... அதனாலே இப்பப் பொங்கலோடு தீபாவளியையும் சேர்த்துக் கொண்டாடுறார்!''

—விஜயா கண்ணன்




'வேண்டாம் விரோதம்' கதையைப் படித்துவிட்டு, கடந்த 9 மாதங்களாக என்னோடு 'டூ' விட்டிருந்த நண்பன் ஜார்ஜிடம் இன்று நானே வலியச் சென்று பகையை முறித்து, நட்பைப் புதுப்பித்துக் கொண்டேன்.

—ஜி. சதீஷ்குமார் (1119)
நாகர்கோயில்-2

நான் இந்நாள்வரை வண்ணப் படங்கள் நிறைந்ததுதான் சிறுவர் வார, மாத மலர் என்று நினைத்தேன். ஆனால், கோகுலம் வெளிவந்ததிலிருந்து என் எண்ணத்தை மாற்றிக்கொண்டேன்.

—வி. பி. அந்தோணிராஜ் (246)
கோவை-18

'உழைப்பும் மதிப்பும்' கதையிலிருந்து செய்யும் தொழில் எதுவாயினும் அதை நல்ல முறையில் செய்வதில் எந்த அவமானமுமில்லை; ஆனால், வீண் ஜம்பம் காட்டுவது தான் அவமானம் என்பதை உணர்ந்தேன்.

—எஸ். ராமச்சந்திரன் (1592)
சின்னமனூர்

சென்ற இதழ் அட்டைப் படக் குழந்தைக்கும் அதைப் படம் பிடித்தவருக்கும் திருஷ்டி சுற்றிப் போட வேண்டும், அவ்வளவு ஜோராக இருந்தது.

—பி. சிவகுமார் (235)
காங்கயம்

'முடியைத் தந்தோம்: முகத்தைச் சொல்லுங்கள்' மிகவும் அருமை.

—ஆர். யஷ்வந்த் (1603)
சென்னை–106

குழந்தைகளின் அறிவையும் பண்பையும் வளர்க்கும் 'கோகுலம்' பூஜை அறை வரைக்கும் கொண்டுபோகக்கூடிய புனித இதழாக இருக்கிறது.

—ஆர். சுந்தர் (644)
விக்கிரபாண்டியம்

'பிருந்தாவனம்' பகுதியைக் கண்டு மகிழ்ந்தேன், சிறுவர்களிடம் இவ்வளவு ஆற்றல் புதைந்திருக்கிறதே! மிக ஆச்சரியமாக இருக்கிறது.

—பணவை இதயன், பணகுடி

'குப்புசாமி அப்புசாமி' தொடர்ந்து வெளியிடுங்கள்.

— ஜி. வரதராஜன் (322)
தர்மபுரி.

அன்னை தெரசா பிறந்தது யூகோஸ்லோவியா. ஆனால் அல்பேனியா என்று போட்டிருக்கிறீர்களே!

—ஜெ. முத்துக்குமார் (468)
இராசபாளையம்

(அல்பேனியாவிலுள்ள செகாப்ஜி என்னும் கிராமத்தில்தான் அவர் பிறந்ததாகச் சில புத்தகங்களில் காணப்படுகிறது..
—ஆசிரியர்)

மரகதச் சிலையைக் காக்க, தன் உயிரையே பணயமாக வைத்துப் போராடி, வெற்றி கண்ட ஜெயமணியை நானும் பாராட்டுகிறேன்.

—எம். முகம்மது இப்ராஹிம்,
குளச்சல்

என் பெண் இன்று மார்ச் 25ம் தேதி பரீட்சை ஆரம்பமாவதையும் நினைக்காமல் நேற்றிரவு முழுவதும் 'கோகுல'த்தைப் படித்து முடித்தாள். இன்று காலை தமிழ்த் தேர்வு. பொதுக் கட்டுரை ஒன்றை எழுத வேண்டும். 'தசரதர் சாபம் பெற்ற வரலாறு' எழுதியதாகக் கூறினாள். 'அது உனக்குத் தெரியுமா?' என்று கேட்டேன். உடனே 'கோகுல'த்தைக் காட்டினாள். எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி.

—பி. இந்திரா, திருச்சி-21

'கேள்வி நேரம்' சுவையாகவும் விளக்கமாகவும் இருக்கிறது. எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது.

—டி. ரவிசந்திரன், திருக்கோவிலூர்

நாடோடிப் பாடல் பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்களில் பல என் தங்கையை என் தாய் சீராட்டும்போது பாடுகையில் நான் கேட்டவை. என் தாய்க்கு மட்டற்ற மகிழ்ச்சி.

—ஜி. சுரேஷ்குமார், நாகர்கோவில்-2

'அக்காவின் கல்யாணம்' கதையில் நேர்மையின் பயன், வரதட்சணை என்னும் வரட்டுக் கௌரவம் ஆகியவற்றைஅனுவிலிருப்பது வரவேற்கத் தக்கது.

—ப. அசோக், புதுவை

'கோகுலம்' மாதம் ஒரு முறை என்பது மாறி, வாரம் ஒரு முறை வெளிவந்தால் என் மனம் எவ்வளவு குதூகலம் அடையும்!

—எஸ். சந்தியா, பம்பாய்-78

'பினக்கியோ' என்பதை 'பினோஷியா' என்றுகூட எழுதலாம். அது சரியான மொழி பெயர்ப்பும் கூட.

—என். மோகனசுந்தரம் (46)
பொள்ளாச்சி


COLLIERS' Encyclopedia (Vol 16-Page 64) வில் கண்டபடி 'பினக்கியோ' என்பது தான் சரியான உச்சரிப்பு. —ஆசிரியர்)

# புகைப்பட ஆல்பம்

கொள்ளை அழகுதான்
கோகுல கிருஷ்ணன்!

புகைப்படம்: புஷ்பத்துறை சுப்பிரமணியம்







சக்கரங்கள் நடுவிலே
தவழப் பார்க்கும் பாப்பா!

புகைப்படம்: என். ராமகிருஷ்ண, மாயூரம்

எதிர்கால எழுத்தாளர்,
இதோ இவர்தான்!

புகைப்பட உதவி: ரா. பொன்ராசன்
குன்றக்குடி





ஆடையைப் பார்த்தாலே தெரியல்லே,
அரசகுமாரன் நான் என்று?

புகைப்படம்: S. விஸ்வநாதன், கோவை



அம்மாவின் காலே
எனக்கு
ஆனந்த ஊஞ்சல்!



தலையைத் தலையை நீட்டாதே!
ஒரே சமயத்தில் இருவருக்குத்
தலைவார முடியுமா?



தங்கைப் பாப்பா தலைக்குமேலே
சிங்கப் பூருக் குடை இதோ!

புகைப்படங்கள்:
என். ராமகிருஷ்ணா
மாயூரம்.

குளிக்க வந்தோமா? – போஸ்
கொடுக்க வந்தோமா?





அம்மாடியோவ்! இவ்வளவு
பெரிய இளநீரை எப்படித்தான்
குடிக்கிறதோ!

புகைப்படங்கள்:
கோவி. சஞ்சீவி
நாகப்பட்டினம்



## வீண் பெருமை = வேதனை' நாடகத்தை முதல் முதலாக மேடை ஏற்றியவர்கள்!

மார்ச் இதழில் வெளிவந்த வீண் பெருமை = வேதனை' என்ற நாடகம் எங்கள் பள்ளி ஆண்டு விழாவில் நடிக்கப் பெற்றது. இந்நாடகத்தைப் பலரும் கண்டு களித்துப் பாராட்டினர். முதல் முதலாக இந்த நாடகத்தை மேடை ஏற்றிய பெருமை எங்கள் பள்ளிக்கு ஏற்பட்டது. இது வீண் பெருமையன்று, இந்நாடகம் அனைத்துப் பள்ளிகளிலும் நடிக்கப் பெறுவது மாணவர்களிடையே நற்குணங்கள் வளரப் பெரிதும் உதவும்.

**த. ரா. ராதாகிருஷ்ணன்**
முதல்வர், அழகப்பா மெட்ரிகுலேஷன்பள்ளி
சென்னை-84

## பாதி – பாதி – முடிவு

சென்ற மார்ச் இதழில் அறிவித்திருந்த இப்போட்டிக்கு மொத்தம் 636 பேர் ஆர்வமுடன் எழுதி அனுப்பி யிருந்தார்கள். ஆயினும், பெரும்பாலோர், ''எத்தனை சொற்களைத் **தொடர்ச்சியாக** அமைக்க முடியும்?'' என்று நாங்கள் கேட்டிருந்ததைச் சரியாகக் கவனிக்கவில்லை. மூன்று மூன்று சொற்களைக் கொண்ட தனித் தனி விடைகளை அனுப்பி யிருக்கிறார்கள். ஒரு சிறுவன் இப்படி 53 விடைகளை மிகுந்த முயற்சி எடுத்து அனுப்பி யிருக்கிறான்!

நாங்கள் கேட்டிருந்தபடி 8 சொற்களைத் தொடர்ச்சியாகவும் சரியாகவும் அமைத்த செல்வன் கு. கணேசனுக்கு முதற் பரிசும், 7 சொற்களைத் தொடர்ச்சியாகவும் சரியாகவும் அமைத்த செல்வன் வி. எஸ். விஸ்வநாத்திற்கு இரண்டாவது பரிசும் வழங்க முடிவு செய்துள்ளோம்.

**முதல் பரிசு:**

கு. கணேசன். (537)
1–2, அக்ரஹாரம்,
பேரையூர்-623708
முகவை மாவட்டம்.

**இரண்டாம் பரிசு:**

வி. எஸ். விஸ்வநாத் (303)
43, கோவில் தெரு,
திண்டுக்கல்-1.

முதல் பரிசு பெற்ற கணேசனுக்குத் தொடர்ந்து ஓராண்டுக்கும், இரண்டாவது பரிசு பெற்ற வி. எஸ். விஸ்வநாத்துக்குத் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கும் 'கோகுலம்' இதழ் அன்புப் பரிசாக அனுப்பி வைக்கப்பெறும்.

— **ஆசிரியர்**

# குரங்கு வித்தை

நெல்லை. ஆ. கணபதி

வீட்டு வாசலில் — குரங்கு
வித்தை காட்டுது!
ஆட்டம் ஆடுது! — துள்ளி
ஆடி ஓடுது!

சட்டை போடுது — சிறிய
டவுசர் மாட்டுது!
தட்டைத் தூக்குது! — காசு
தானே கேட்குது!

வயிற்றைக் காட்டுது! — நீண்ட
வாலை ஆட்டுது!
கயிற்றில் ஏறுது — குட்டிக்
கரணம் போடுது!

'கரணம் போடடா! — ராமா!'
காதில் கேட்டதும்
சரணம் செய்யுது! — நமக்குச்
சலாமும் வைக்குது!

தண்ணீர் சுமக்குது! — குடத்தைத்
தலையில் வைக்குது!
பெண்கள் போலவே — அழகாய்ப்
பேனும் பார்க்குது!

பண்டம் தின்னுது! — வாயில்
பதுக்கி வைக்குது!
கண்ட வர்யாவரும் — யாவும்
களிப்பில் மூழ்குது!



# மீன்கள்

வ. தேனப்பன்



"உயிர்களிடத்தில் அன்பு வேணும்" என்று பாடினார் பாரதியார். மணி எல்லா உயிர்களிடத்தும் அன்பாக இருப்பான்.

ஆனால், மணியின் அண்ணன் நாகப்பன் இதற்கு எதிர்மாறான பழக்கம் உடையவன். வண்ணத்துப் பூச்சியைப் பிடித்து, அதனுடைய இறக்கைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பிய்த்து விட்டு, அது துடிப்பதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பான். தட்டான் பூச்சியின் இறக்கையையும் வாலையும் வெட்டிவிட்டு வேடிக்கை பார்ப்பான்.

தீபாவளி வந்து விட்டால் போதும், நாகப்பன் கொட்டமடிக்க ஆரம்பித்து விடுவான். பெரிய பெரிய பட்டாகச் சரங்களைக் கழுதையின் வாலில் கட்டி, வெடிக்க விட்டு, அது பயந்து துள்ளி ஓடுவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைவான்.

ஒரு நாள், நாகப்பன், மணி ஆகியோரின் தங்கை மீனுவுக்குக் காய்ச்சலாக இருந்தது. மாலையில் டாக்டரிடம் காண்பிக்காமல் வீட்டில் இருந்த மருந்தையே அம்மா கொடுத்தார்கள்.

நடு இரவு மீனுவுக்குக் காய்ச்சல் அதிகமானது. மிக அதிகமான காய்ச்சல் வந்ததனால், ஜன்னி வந்து, கை காலெல்லாம் நடுங்கத் தொடங்கியது.

வீட்டில் யாரும் தூங்கவில்லை.

"மீனு! மீனு!" என்று கூப்பிட்டு அழுதபடி அவள் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தனர்.

மீனுவின் கை கால் நடுக்கம் நின்று விக் விக் கென்று காக்காய் வலிப்பைப் போல் இழுக்க ஆரம்பித்து விட்டது. கண்கள் மேலே செருகிக் கொண்டன.

"மீனு! மீனு!" என்று கூப்பிட்டுக் கத்தினாலும் பேசவில்லை. நினைவே இல்லாமல் விக் விக்கென்று இழுத்துக் கொண்டே இருந்தாள் மீனு.

"மீனு! எங்களை யெல்லாம் விட்டு விட்டுப் போயிடாதே அம்மா!" என்று கதறினாள் அம்மா.

அப்பா ஓடிப்போய் டாக்டரைக் கூட்டி வந்தார்.

டாக்டர் கடைசி நேரத்தில் வந்தாலும், மூன்று ஊசிகளைப் போட்டுக் காப்பாற்றி விட்டார். கொஞ்ச நேரத்தில் மீனு கண் விழித்தாள்.

"அம்மா!" என்று கூப்பிட்டாள்.

அந்த ஒரு சொல்லைக் கேட்டதும், ஏதோ பெரிய புதையலைக் கண்டவர்களைப் போல் அனைவரும் மகிழ்ந்து மீனுவைக் கட்டி அணைத்து முத்தம் கொஞ்சினார்கள்.

அடுத்த நாள் காலையில் நாகப்பன் வேகமாக வீட்டுக்குள் ஓடி வந்தான்.

''டேய் மணி! இங்கே வாடா. பாத்தியாடா? எவ்வளவு பெரிய மீன் பாத்தியா? எல்லாம் உயிரோட இருக்கு! என்னமாத் துள்ளுது பாத்தியா?'' என்று எல்லா மீன்களையும் தண்ணீர் வாளியிலிருந்து வெளியே போட்டான்.

அவை துள்ளித் துடிப்பதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தான்.

தண்ணீரிலேயே நீந்தி வாழும் மீன்கள் தரையில் வாழ முடியாமல் துள்ளிக் குதித்து ஆவ்...ஆவ்.. என்று வாயையும் செதில்களையும் திறந்து திறந்து மூடின.

''அண்ணே! பார்க்கப் பாவமா இருக்கு. மீனுகளைக் கொன்னுடாதே! தண்ணியில தூக்கிப் போட்டுடு!'' என்று கெஞ்சினான் மணி.

''அட போடா! என்னமா துடி துடிச்சுச் சாகப் போகுது! அதைப் போயிக் காப்பாத்தச் சொல்றியே!'' என்று கேட்டான் நாகப்பன்.

''அண்ணே! இந்த மீன்களெல்லாம் துடிக்கிறதைப் பார்த்தா எனக்கு.. நேத்து நம்ம மீனு துடிச்சதுதான் ஞாபகத்துக்கு வருது. அவள் துடி துடிச்சுச் சாகக் கூடாதுன்னு எவ்வளவு பாடுபட்டோம்! டாக்டர் நம்ம மீனுவை உயிர் பிழைக்கச் செய்த மாதிரி இந்த மீன்களைக் காப்பாத்து அண்ணே!'' என்று கெஞ்சி அழுதான்.

நாகப்பன் மீன்களைப் பார்த்தான்.

நேற்று தங்கை மீனுள் துடித்ததைப் போல ...விக் விக்கென்று இழுத்துக் கொண்டதைப் போல... மீன்களும் துடிதுடித்து இழுத்துக் கொண்டிருந்தன.

நாகப்பன் கண்களில் தங்கை மீனுவே துடித்துக் கொண்டு கிடப்பதைப்போல் தெரிந்தது.

அவ்வளவுதான். எல்லா மீன்களையும் கிணற்று வாளிக்குள் விட்டான். அந்த வாளியைக் கிணற்றுக்குள் இறக்கினான்.

### யோகம் அடிக்கப்போகுது!


சிறுவன்: நம் பள்ளிக்கும் புதிதாக வந்திருக்கிற தமிழ் டீச்சரம்மா பெயர் 'போகம்' என்றுதான் இருக்கணும்.

சிறுமி: அதெப்படி உனக்குத் தெரியும்?

சிறுவன்: என் கைரேகையை இன்று காலையில் பார்த்த ஜோஸியர் 'யோகம் அடிக்கப்போகுது' 'யோகம் அடிக்கப்போகுது' என்று சொன்னார். நான் தமிழ்க்கட்டுரை எழுதவில்லை. அதனாலே, என்னை அடிக்கப் போகிற அந்த டீச்சரம்மா பெயர் யோகம் என்றுதானே இருக்கணும்?

—ஸி. ஸ்ரீதர்





### குறைந்த எடை!

அம்மா: என்னங்க சின்னப் பையனை அனுப்பினால், இப்படியா எடையைக் குறைச்சுக் கொடுக்கிறது? 200 கிராம் வெண்ணெய்க்குப் பணத்தை வாங்கிக்கிட்டு, 100 கிராம் தானே கொடுத்திருக்கிறீங்க?

கடைக்காரர்: உங்கள் பையனை நிறுத்துப்பாருங்க. இதிலே குறைஞ்ச எடை அங்கே கூடியிருக்கும்!

# 8 வயதிலே பட்டம் பெற்ற ஈசுவரன்!


ஈசுவரன்


அலங்காரக் குடையின் கீழ் ஈசுவரன்

### (மாணவனைப் பற்றி ஆசிரியர் எழுதுகிறார்)

ஒரு பெரிய மண்டபம். அந்த மண்டபத்தில் பல அறிஞர்களும் பொது மக்களும் சிறுவர் சிறுமியரும் கூடியிருக்கிறார்கள். மேடையிலும் சில அறிஞர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அங்கு ஒலிபெருக்கியின் முன்னால் ஒரு சிறுவன் நிற்கிறான்.

சபையில் உள்ளவர்கள் அச்சிறுவனைப் பார்த்துப் பல வகையான கேள்விகளைக் கேட்கிறார்கள். அவன் கொஞ்சம் கூடத் தயங்கவில்லை. உடனுக்குடன் பதில் கூறுகிறான். சரியான பதிலைக் கூறுகிறான்!

''தம்பி, திருக்குறளில் 'கேள்வி' என்ற அதிகாரத்துக்கு முன்னால் உள்ள அதிகாரம் எது? பின்னால் உள்ள அதிகாரம் எது?''

''முன்னால் உள்ள அதிகாரம் 'கல்லாமை'. பின்னால் உள்ளது 'அறிவுடைமை.''

'''யாகாவார் ஆயினும் நா-காக்க' என்று தொடங்குகிறதே குறள், அது எந்த அதிகாரத்தில் உள்ளது?''

'' 'அடக்கமுடைமை' என்ற 13வது அதிகாரத்தில் உள்ளது.''

''அறிவுடைமை' என்ற அதிகாரத்தில் உள்ள 10 குறள்களையும் தலைகீழாகக் கூற முடியுமா?''

''கூறுகிறேன். ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என்று தொடங்கி அதிகாரம் முழுவதையும் தலைகீழாகக் கூறுகிறான்.

'''கூலிதரும்' என்று முடியும் குறள் எது? எந்த அதிகாரத்தில் உள்ளது?''

'' 'தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன் மெய் வருத்தக் கூலி தரும்' என்ற இக் குறள் 'ஆள்வினையுடைமை' என்ற அதிகாரத்தில் உள்ளது.''

''பழம் இருக்கும்போது காயைத் தின்பதை எதற்கு ஒப்பிடுகிறார், வள்ளுவர்? அந்தக் குறளைக் கூறுக.''

''இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.''

—இப்படிப் பலரும் பலவிதமான கேள்விகளைக் கேட்க, தவறு இல்லாமல்



ந. வேங்கடராமன்

தயக்கமில்லாமல் அவன் பதிலளிக்கிறான். அவனுடைய அபார ஞாபக சக்தியைக் கண்டு எல்லாரும் வியப்படைகிறார்கள். இப்படிச் செய்வதற்கு 'அவதானம்' என்று பெயர். சிறு வயதிலே இவ்வாறு அவதானம் செய்து பலரையும் வியப்பில் ஆழ்த்தி வரும் அச்சிறுவன்தான் 'திருக்குறள் செல்வன்' ஈசுவரன்!

திருக்குறளில் மட்டும்தானா? நாலடியார், சிவஞான போதம், அபிராமி அந்தாதி, கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், திருக்காவலூர்க் கலம்பகம், பாரதியாரின் 'கண்ணன் பாட்டு', 'ஞானப் பாடல்கள்' 'புதிய ஆத்திசூடி' முதலிய நூல்களிலும் ஈசுவரன் அவதானம் செய்து பேரும் புகழும் பெற்று வருகிறான்.

காரைக்குடியில் 'திருக்குறள் கழகம்' என்று ஒரு கழகம் இருக்கிறது. அங்கு ஆண்டுதோறும் மாணவர்களுக்காக 'நினைவாற்றல் போட்டி' நடத்துகிறார்கள்.

ஈசுவரனுக்கு அப்போது ஆறு வயது. இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். திருக்குறள் கழகப் போட்டியில் கலந்து கொள்வதற்காக உயர்நிலைப் பள்ளியில் உள்ள 6, 7, 8 வகுப்பு மாணவர்கள் தயார் செய்து கொண்டிருந்தார்கள். 50 பாடல்களை அவர்கள் ஒப்பிக்க வேண்டும்.

ஈசுவரன் அந்த மாணவர்களின் பக்கத்திலிருந்து அவர்கள் மனப்பாடம் செய்த பாடல்களைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். சில நாட்களில் அந்தப் பாடல்களை அவனும் மனப்பாடம் செய்து விட்டான்! அந்த ஆண்டு திருக்குறள் கழகம் நடத்திய போட்டிக்குச் சென்றான். 6, 7, 8 வகுப்பு மாணவர்க்கான போட்டியில் 6 வயதுச் சிறுவன் கலந்து கொள்வான் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை. விசேஷ அனுமதி பெற்று, அவனும் பாடல்களை ஒப்பித்தான். அனைவரும் அவனைப் பாராட்டினர். அவனுக்குச் சிறப்புப் பரிசு கிடைத்தது.

அடுத்த ஆண்டில், ஈசுவரன் மூன்றாம் வகுப்பில் படித்தான். அப்போது 4, 5 வகுப்பு மாணவர்கள் 30 பாடல்களையும், 6, 7, 8 வகுப்பு மாணவர்கள் 50 பாடல்களையும் போட்டிக்காக மனப்பாடம் செய்துகொண்டிருந்தார்கள். ஈசுவரனும் அவர்களுடன் சேர்ந்து கற்றான். முதல் ஆண்டைப் போலவே சிறப்புப் பரிசு பெற்றான்.

1975 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். ஈசுவரன் நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். நான்காம் வகுப்பில் படித்ததால் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியை அவன் பெற்று விட்டான். விசேஷ அனுமதி தேவைப்படவில்லை. ''முதல் பரிசு நிச்சயம் நமக்குத்தான்'' என்ற நம்பிக்கையோடு போட்டியில் கலந்து கொண்டான். ஆனால், முதல் பரிசு கிடைக்கவில்லை. ஆறுதல் பரிசுதான் கிடைத்தது!

ஈசுவரன் போட்டி நடந்த இடத்திலே அழத் தொடங்கினான். குறள் கழகத்தாரும் மற்றவர்களும் ஆறுதல் கூறினார்கள். ''இன்னும் இரண்டு மாதங்களில் 'குறள் விழா' நடக்கப் போகிறது. அப்போது நீ கலந்து கொள்ளலாம்'' என்றார்கள்.

பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில்...





ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளிடம் ஆசி பெறுகிறான்.

''அப்போது நான் 'அறத்துப் பால்' முழுவதையும் ஒப்பித்துக் காட்டுகிறேன்'' என்றான் ஈசுவரன்.

முழு மூச்சாக மனப்பாடம் செய்யத் தொடங்கினான். ஒவ்வோர் அதிகாரமும் (10 பாடல்கள்) ஒப்பிக்க, அவனுடைய அப்பா 'ஊக்க போனஸ்' கொடுத்தார். மொத்தம் 38 ஊக்க போனஸ்களைப் பெற்றான்! ஈசுவரனின் அப்பா பெயர் ம. இராமச்சந்திரன். அவர் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கண்டரமாணிக்கம் என்ற ஊரில் ஸ்ரீ தண்டாயுதபாணி உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர். 'நல்லாசிரியர்' விருது பெற்றவர். தமிழ்ப் பற்று மிக்க அவர், தம்முடைய மகனின் திறமை வளர மிகவும் உதவி வருகிறார்.

திருக்குறள் கழகம் நடத்திய 'குறள் விழா'விலே, தான் கூறியபடி 'அறத்துப் பா'லில் உள்ள 380 குறள் பாக்களையும் ஈசுவரன் ஒப்பித்தான்! அவனது ஞாபக சக்தியை மட்டுமன்றி, தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் எல்லாரும் பாராட்டினார்கள்.

தொடர்ந்து ஏழெட்டு மாதங்களில் திருக்குறள் முழுவதையும் மனப்பாடம் செய்து அவதானம் செய்யத் தயாரானான்.

கண்டரமாணிக்கம் ஸ்ரீ மாணிக்க-நாச்சி அம்பாள் கோயிலில் வார வழிபாட்டுக் கழகம் நடைபெற்று வருகிறது. அதன் ஆண்டு விழாவில் ஈசுவரனின் திருக்குறள் அவதானம் நிகழ்ந்தது. அன்று அவன் திறமையைப் பாராட்டி 'திருக்குறள் செல்வன்' என்ற பட்டத்தை அக்கழகத்தின் பொறுப்பாளன் என்ற முறையில் நான் வழங்கினேன்.

'திருக்குறள் செல்வன்' என்னுடைய மாணவன் என்பதில் எனக்குப்பெருமை. அவனது நிகழ்ச்சிகள் பலவற்றில் தலைமை தாங்கும் வாய்ப்பும் பெற்றேன். அவனைப் போன்ற திறமை மிக்க பலர் உருவாக வேண்டும் என நினைத்தேன். எனவே, அவனிடம் பல கேள்விகளைக் கேட்டுப் பதில்களையும் பெற்றேன். விடைகள் அவனுடைய மொழிகளிலேயே உள்ளன.

கேள்வி: முதல் முதலாக அவதானம் செய்தபோது உன் வயது என்ன? எந்த வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாய்?

பதில்: அப்பொழுது எனக்கு வயது 8. பிறந்த நாள் 26-2-1968. சிவராத்திரி. கண்டரமாணிக்கம் ப. சு. வித்தியாசாலையில் நாலாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன்.

கேள்வி: திருக்குறளைத் தவிர வேறு பல நூல்களிலும் அவதானம் செய்கிறாயே! அந்த நூல்களைக் கற்கச் சிறப்புக் காரணங்கள் உண்டா?

பதில்: காரைக்குடியில் இராமசாமி தமிழ்க் கல்லூரி முதல்வர், ''நாலடியாரும் திருக்குறளைப் போலவே உள்ளது. அதையும் படித்து அவதானம் செய்'' என்றார். நாலடியாரைக் கற்றேன். திருப்பத்தூரில் இந்து சமய மன்ற நீதி போதனை வகுப்புக்கள் நடந்தன. அதன் அமைப்பாளர், சமய நூலான 'அபிராமி அந்தாதி'யைப் படிக்கத் தூண்டினார்.

திருநெல்வேலி, சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத் தலைவர் சுப்பையா பிள்ளையவர்கள், 'சிவஞான போதம்' கற்று அவதானம் செய்யச் சொன்னார்.

கேள்வி: உனக்கு யார் யார் என்னென்ன பட்டங்கள் கொடுத்திருக்கிறார்கள்? அவற்றால் உனக்குத் தற்பெருமை உண்டா?

பதில்: நம் வார வழிபாட்டுக் கழகத்தில் 'திருக்குறள் செல்வன்' பட்டமும், பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியாரிடம் 'திருக்குறட் சீயம்' பட்டமும், காரைக்குடி திருக்குறள் கழகத்தில், 'திருக்குறள் பெட்டகம்' பட்டமும், பரமக்குடி சோவியல் சங்கத்தில் 'திருக்

குறள் முழக்கம்', பட்டமும் பெற்றேன். இன்னும் 'குறளரசு', 'திருக்காவலூர்க் கலம்பகச் செல்வன்' என்ற பட்டங்களையும் பெற்றிருக்கிறேன். இவற்றால் எனக்கு அடக்கமும், ஊக்கமுமே ஏற்பட்டன.

கேள்வி: இதுவரை எத்தனை அவதான நிகழ்ச்சிகள் செய்திருக்கிறாய்?

பதில்: பொது மேடைகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் என்று ஏறத்தாழ 300 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். வானொலியிலும், தொலைக் காட்சியிலும்கூட என் அவதான நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளேன்.

கேள்வி: உன் நினைவில் உள்ள மறக்க முடியாத சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள் யாவை?

பதில்: முதலாவதாக ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகள் முன்னிலையில் மதுரையில் நடந்த உலக சமய மகாநாட்டு நிகழ்ச்சி குறிப்பிடத் தக்கது. ஸ்ரீ சுவாமிகளே கேட்டு ஆசீர்வாதம் செய்தார்கள்.

தூத்துக்குடியில் திருமுருக கிருபானந்த வாரியார் தலைமையில் நடந்த சிவஞான போத அவதான நிகழ்ச்சியும் மறக்க முடியாதது.

கேள்வி: பாடல்களை மனனம் செய்யும் சமயம் நல்ல நினைவுக்காகக் கையாளும் உத்திகள் உண்டா?

பதில்: உத்திகள் என்று ஒன்றுமில்லை. அதிகாரப் பெயர், எண், பாடலின் முதல் சீர், கடைசிச் சீர் போன்றவற்றையும் எண்ணிப் பார்ப்பேன். அவ்வளவே!

கேள்வி: பல நூல்களிலும் அவதானம் நடத்துகிறாயே, சிரமம் தெரியவில்லையா?

பதில்: ஒரு குறிப்பிட்ட நூலில் மட்டும் அவதானம் செய்வது எளிது தான். ஆனாலும், பல நூல்களிலும் சேர்ந்து அவதானம் செய்வது அப்படி ஒன்றும் கடினமாகத் தோன்றவில்லை.

கேள்வி: உன்னைப் போல் இன்னொருவர் மனப்பாடம் செய்து, அவதானம் செய்வதற்கு உதவக் கூடிய நல்ல வழிகளைக் கூற முடியுமா?

பதில்: ஒரு நூலை எடுத்துக் கொண்டால், அதை முயற்சியுடன் கொஞ்சம் படிக்க வேண்டும். மறு நாள் இன்னும் சிறிது படிக்கும்போது, முன்னால் படித்ததையும் சேர்த்துப் படித்துவிட வேண்டும். இப்படி ஆர்வம் பெற்றுச் சிறிது சிறிதாக நூல் முழுவதையும் படித்து விடலாம். அப்படிப் படிக்கும்போது 'அவதானத்'தையும்கவனித்துக் கொள்ள வேண்டும். முயற்சி திருவினையாக்கும் அன்றோ?

கேள்வி: இவ்வாறு பல அவதான நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறாயே, இது உன் கல்வியைப் பாதிக்கிறதா?


பதில்: இது பாதிக்காது என்று எண்ணுகிறேன். தொடர்ந்து வகுப்பில் முதல் இடம் வகிக்கிறேன்.

கேள்வி: பள்ளி மாணவனாகிய உன்னை 'அவதானம்' செய்ய உன் வீட்டில் உள்ளவர்கள் முழுமையாக அனுமதிக்கிறார்களா? மற்ற உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் அதுபற்றி என்ன நினைக்கிறார்கள்?

பதில்: அனைவருமே ஊக்கமும், ஆக்கமும் தருகிறார்கள்.

திருக்குறள் செல்வன் ஈசுவரன் தற்போது சென்னை, பழவந்தாங்கலில் வாழ்கிறான். ஒரு மேல் நிலைப் பள்ளியில் 'ப்ளஸ்-டூ'வில் பயிலுகிறான். இப்போது இவன் வயது 15. துடிதுடிப்பானவன். அழகான தோற்றமும், அறிவுக் கூர்மையும் உடையவன்.

திருக்குறள் செல்வன் ஈசுவரனின் புகழ் திக்கெட்டும் பரவட்டும்!



**ராஜாசர் முத்தையா செட்டியார் அவர்கள் பொன்னாடை போர்த்துகிறார்.**



# "கல் ஒன்று மாங்காய் இரண்டு"

மஹாரமுத்து

மகேந்திரபுரி நாட்டு மன்னர் ஜெயசீலரிடம் ''என் தம்பி குணவர்மனுக்கு அரண்மனையில் ஒரு கௌரவமான உத்தியோகம்பார்த்துக்கொடுத்தாலென்ன?'' என்று அவரது மனைவி கேட்டாள். மன்னர் திடுக்கிட்டுப் போனார். ஏனெனில் குணவர்மனுக்கு அரண்மனையில் உத்தியோகம் கொடுப்பது ஆபத்தை வலிய வரவழைத்துக் கொள்வதற்குச் சமம். குணவர்மன் ஒரு உளறுவாயன். எந்த நேரத்தில் எதை எதை எப்படி எப்படிச் செய்ய வேண்டும் என்ற பக்குவம் தெரியாதவன். மூளையென்ற ஒன்று இருந்தும் அதை உபயோகிக்கும் எண்ணமே இல்லாதவன். அவனுக்கு அரண்மனை உத்தியோகம் கொடுப்பதா? ஜெயசீலர் யோசித்தார். ஆனால், குணசுந்தரி அவரை யோசிக்க விடவில்லை.

''அரண்மனையில் வேளாவேளைக்குச் சாப்பிட்டுவிட்டு வெட்டித்தனமாகச் சுற்றிக் கொண்டு திரிகிறான் என்று அரண்மனையில் உள்ளவர்கள் என்னைக் கண்டும் காணாமல் பேசிக் கேலி செய்கிறார்கள். இது என் மனத்தை மிகவும் சங்கடப்பட வைக்கிறது. நீங்கள் என்னடாவென்றால்....'' என்று கூறிவிட்டு மூக்கைச் சிந்தியபடி அழத் தொடங்கினாள்.

ஜெயசீலர் உடனே, ''சேச்சே! இதற்கெல்லாம் போய் அழலாமா? நான்தான் இப்படிப் பல பொறுப்புக்களை இழுத்துப் போட்டுக்கொண்டு தடுமாறிக் கொண்டிருக்கிறேன். அவனாவது இந்தக் குழப்பங்களெல்லாம் இல்லாமல் நிம்மதியாகத் திரியட்டும் என்றுதான் இதுவரை அவனுக்கு உத்தியோகம் ஏதும் கொடுக்காமல் இருந்தேன். இப்போது உன் மனம் எனக்குப் புரிந்து விட்டது. இனிமேலும் நான் அவனுக்கு அரசாங்க உத்தியோகம் கொடுக்கத் தாமதிப்பேனா?'' என்று கூறிவிட்டு அவள் கண்களைத் துடைத்தார். ஆனால், உள்ளூற அவருக்கு ஒரே பதை பதைப்பு. குணசுந்தரியோ அதையெல்லாம் அறியாமல் மகிழ்ச்சியடைந்தாள்.

மறுநாளே ஜெயசீலர் குணவர்மனுக்குப் பத்துச் சிப்பாய்களை மேற்பார்க்கும் 'கௌரவமான' பொறுப்பைக் கொடுத்தார். ஆனால், உண்மையில் அப்படியொரு பதவி கிடையாது. குணசுந்தரியின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் அப்படியொரு பதவியை உண்டாக்கிக் குணவர்மனுக்குக் கொடுத்திருந்தார் அவர்.

சில நாட்கள் சென்றன. குணவர்மனின் மேற்பார்வையிலிருந்த பத்துச் சிப்பாய்களும் ஜெயசீலரிடம் தனித்தனியே வந்து குணவர்மனைப் பற்றி முறையிட ஆரம்பித்தார்கள். ''அரசே! அவர் எங்களை வாளேந்திய சிப்பாய்கள் என்றே நினைப்பதில்லை. வெற்றிலை மடித்துக் கொடுப்பதும், பழரசம் வாங்கி வருவதும், உடம்பு பிடித்து விடுவதுமா எங்கள் வேலை? சிறுசிறு வேலைகளுக்கெல்லாம் எங்களை ஏவி, எங்கள் வாளையும் வீரத்தையும் மழுங்கடிக்கச் செய்து கொண்டிருக்கிறார். எங்களுக்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறது. நீங்கள்தான் இதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள். ஆக, தான் பயந்தது நடந்தே விட்டது என்பதை உணர்ந்து கொண்ட ஜெயசீலர், ஆவன செய்வதாகக் கூறி அவர்களை அனுப்பி வைத்தார்.

குணசுந்தரியிடம், குணவர்மன் சிப்பாய்களிடம் நடந்து கொள்ளும் விதத்தைப் பற்றி ஜெயசீலர் எடுத்துரைத்த போது, அவள் அலட்சியமாக ''க்கும்! உங்கள் சிப்பாய்களுக்கெல்லாம் என் தம்பி மேல் பொறாமை. அதனால்தான் அவனைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கோள் மூட்டிவிடுகிறார்கள். அது போகட்டும். என் தம்பிக்கும் இந்த உத்தியோகம் பிடிக்கவில்லையாம். ஊர் சுற்றிப் பார்க்க ஆசைப்படுகிறான். அதனால் நமது அண்டை நாடுகளின் கௌரவத் தூதுவனாக அவனை நியமித்தால் என்ன?'' என்று சாவதானமாகக் கேட்டதும் ஜெயசீலர் அசந்து போனார்.

''சுந்தரி! அதெல்லாம் நீ நினைப்பது போல அவ்வளவு எளிதான உத்தியோகமில்லை. அபாயகரமான உத்தியோகம். வழியோடு போகும்போது பகைவர் தொந்தரவும் கள்ளர் தொந்தரவும் ஏற்படலாம். அதனால் உயிரைப் பணயம் வைத்துத்தான் அதிலெல்லாம் ஈடுபட முடியும். உல்லாசப் பறவை




யாக ஊர் சுற்ற விரும்புபவன் அதில் ஈடுபட முடியாது. அனுபவத்தால் அறிந்து சொல்கிறேன். தயவு செய்து கேள்!'' என்று கெஞ்சினார். ஆனால், குணசுந்தரி அதைப் பொருட்படுத்தவில்லை. ''என் தம்பிக்கு இருக்கும் உடல் வலுவுக்குப் பத்துப் பேரை ஒரே சமயத்தில் அவனால் சமாளிக்க முடியும். உங்களுக்கு அவனை ராஜாங்கத் தூதுவனாக நியமிக்க விருப்பமில்லாவிட்டால் சொல்லி விடுங்கள். சாக்குப் போக்குச் சொல்லி மழுப்ப வேண்டாம்'' என்று கோபத்தோடு கூறினாள். அவளை அடக்க ஜெயசீலருக்குத் துணிவில்லை. எனவே, வேறு வழியின்றிக் குணவர்மனை இராஜாங்கத் தூதுவனாக்கினார்.

குணவர்மனுக்கு இந்த வேலையில் முன்பின் அனுபவம் இல்லாததால், மற்றத் தூதுவர்கள் தூது செல்லும் போது அவர்களுடன் சென்று அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும்படி ஜெயசீலர் கூறினார். ஆனால், அவனோ மூர்க்கத்தனமாக, ''எனக்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தெரியும். மற்றவர்களிடம் போய்க் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற அவசியம் எனக்கில்லை. வேண்டுமென்றால் என் திறமையைப் பரீட்சித்துப் பாருங்கள்'' என்று கூறி ஜெயசீலரது அறிவுரையைப் புறக்கணித்து விட்டான்.

ஜெயசீலரும் அவனது விருப்பப்படியே அவனைத் தனியாகத் தூதனுப்ப ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அதற்கேற்றாற்போல், சொர்ணபுரி மன்னரும் ஜெயசீலரின் நெடுநாள் நண்பருமான வீரசிம்மனின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளும்படி ஜெயசீலருக்கு அழைப்பு வந்தது. ஜெயசீலர் அந்த விழாவில் கலந்துகொள்ள விரும்பினாலும் அவரது அரசியல் சூழ்நிலைகள் அதற்கு இடம் தராமல் போயின. அதனால் ஓர்ஓலையில், தான் கலந்து கொள்ள முடியாமல் போனதற்கு வருந்துவதாகவும் வீரசிம்மன் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதாகவும் எழுதிக் குணவர்மனிடம் கொடுத்து அனுப்பினார். குணவர்மனுக்குத் தலை-கால் புரியவில்லை. தமக்கையிடம் மகிழ்ச்சியோடு விடை பெற்றுக் குதிரை மீதேறிப் புறப்பட்டான்.

குதிரை சண்டித்தனம் பண்ணவே, அவனால் எதிர்பார்த்தபடி சொர்ணபுரியை அன்றிரவே அடைய முடியவில்லை. எனவே அருகில் தென்பட்ட ஒரு சத்திரத்தில் இராப் பொழுதைக் கழிக்கலாமென்ற எண்ணத்தோடு அத

னுள் நுழைந்தான். அப்போது இன்னொரு குதிரை வீரனும் சத்திரத்தினுள் நுழைந்தான். அவனது ஆட்டுக்கடா மீசையும், மூக்கருகே இருந்த கட்டியும் கனல் தெறிக்கும் கண்களும் உடம்பிலிருந்த தழும்புகளும் குணவர்மனைக் கதிகலங்க வைத்தன. இருந்தாலும் அதையெல்லாம் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனோடு ஒன்றாக அமர்ந்து உணவருந்தினான். பின் இருவரும் வெற்றிலை போட்டுக் கொள்ளத் தொடங்கினர்.

''உங்கள் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று குணவர்மன் அப்போது பேச்சோடு பேச்சாகக் கேட்க, வந்தவன் அலட்சியமாக, ''வீரமல்லன்'' என்றான். ஆளுக்குப் பொருத்தமான பெயர்தான் என்று எண்ணிக் கொண்டான் குணவர்மன். பின் ''உங்களுக்கு எந்த நாடோ?'' என்றான். ''சொர்ணபுரி'' என்றான் வீரமல்லன்.

உடனே, ''அப்படியா? உங்கள் அரசருக்குத்தான் ஓலை கொண்டு போகிறேன்!'' என்று உளறிவிட்டான் குணவர்மன். வழியில் யாரிடமும் எதுவும் பேசக் கூடாது என்று ஜெயசீலர் படித்துப் படித்துச் சொல்லியனுப்பியதெல்லாம் அப்போது மறந்தே போய்விட்டது அவனுக்கு. அவன் ஓலையென்றதும் வீரமல்லனின் புருவங்கள் உயர்ந்தன. ''என்ன? ஓலையா!'' என்று உறுமினான். அப்போது அவன் முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது குணவர்மனுக்கு. ''ஹி... ஹி... ஓலையாவது ஒன்றாவது... அதெல்லாம் ஒன்றுமில்லை. சும்மா ஹி... ஹி...'' என்று அசடு வழிந்தான்.

''இப்போது உண்மையைச் சொல்லப் போகிறாயா இல்லையா?'' என்று கேட்டுவிட்டு உறைவாளை உருவினான் வீரமல்லன். குணவர்மனுக்குத் திகில் பிடித்துக் கொண்டது. கை கால்கள் உதற ஆரம்பித்தன. வீரமல்லனின் உறைவாள் வேறு கழுத்தை உராய்ந்து நிற்கவும் கதிகலங்கிப் போனான் அவன்.

''சத்தம் கித்தம் போட்டால் கொன்று விடுவேன். முதலில் ஓலையை எடு!'' என்று வீரமல்லன் மிரட்டினான். அரசாங்கத் தூதுவன் வேலை எவ்வளவு ஆபத்தானது என்பதை அப்போது தான் உணர்ந்து கொண்ட குணவர்மன் தனது உயிரைக் காத்துக் கொள்ளும் பொருட்டு ஓலையை எடுத்து நீட்டினான். ஓலை கைக்கு வந்ததும் விகாரமாகச் சிரித்தான் வீரமல்லன்.

பின், ''நான் சொர்ணபுரி நாட்டைச் சேர்ந்தவன் இல்லை. நீ சத்திரக்காரனிடம் சொர்ணபுரி இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று கேட்டவுடனேயே நீ சொர்ணபுரிக்குத்தான் போகிறாய் என்று ஊகித்துக் கொண்டேன். அதனால்தான் உன்னிடம் எனது நாடு சொர்ணபுரி என்று சொன்னேன். ஆனால், உண்மையில் நான் செண்பகபுரி நாட்டு ஒற்றன். தற்சமயத்துக்கு அரசர்களுக்குள் போர் ஏதாவது நடக்கப் போவதாக இருந்து அதைப் பற்றிய செய்தி இந்த ஓலையில் இருந்தால் என் அரசர் எனக்குப் பரிசு கொடுப்பார். எனவே, நான் என் அரசரைப் பார்க்கச் செல்கிறேன்'' என்று கூறிவிட்டு வாளை மீண்டும் உறையில் செருகிய வண்ணம் கிளம்பினான். அந்த இருட்டிலும் அவன் தனது குதிரையை அனாயாசமாகச் செலுத்திக் கொண்டு போவதைக்கூடக் கவனிக்கத் திராணி இல்லாதவனாகப் பேயறைந்தவன் போல் நின்றுகொண்டிருந்தான் குணவர்மன்.


மறுநாள்.

அலறியடித்துக் கொண்டு ஜெயசீலரிடம் ஓடிவந்தான் குணவர்மன்.

**கால்வாய் சாலையானது!**

இப்போது சென்னையில் பிரகாசம் சாலை என்று வழங்கப்படுவது ஒரு காலத்தில் கால்வாயாக இருந்தது. கால்வாயின் இரண்டு பக்கங்களிலும் முத்தியாலுப் பேட்டை, பெத்து நாயக்கன் பேட்டை ஆகிய இரு பகுதிகள் இருந்தன. இந்தக் கால்வாயைத் தூர்த்துச் சாலையாக்கியவருடைய பெயர் **பாபம்ஸ்** என்பது, அதனால்தான் இந்தச் சாலைக்கு 'பாபம்ஸ் பிராட்வே' என்ற பெயர் வந்தது. பிறகு 'பிரகாசம் சாலை'யாக மாறியது.

—இ. பொ. நடராசன்.




வாள் முனையில் ஓலை பறிபோனதைச் சொல்லாமல், வேகமாகச் செல்லும் போது ஓலை எங்கோ கீழே நழுவி விழுந்து விட்டதாகச் சொன்னான். பின், ''இந்நேரம் அது யாராவது ஒற்றர் கையில் சிக்கியிருந்தால் என்ன ஆகும்?'' என்று பதறியவன் போல நடித்தான்.

ஜெயசீலர் உடனே, ''கவலைப் படாதே. அது பிறந்த நாளுக்காக எழுதப்பட்ட வாழ்த்து ஓலையாக இருந்ததால் நாம் தப்பித்தோம். அதுவே நாம் யாரையாவது எதிர்க்க எண்ணி, சொர்ணபுரி நாட்டு மன்னன் ஆதரவைக் கோரி எழுதிய ஓலையாக இருந்தால், நம் நிலைமை விபரீதமாகியிருக்கும்!'' என்று சமாதானப்படுத்தினார்.

குணவர்மனும் ''இனிமேல் நான் தூது செல்லவெல்லாம் ஆசைப்பட வில்லை. முன்போல் அரண்மனையிலேயே இருக்கிறேன்!'' என்று கூறி விட்டு, குணசுந்தரியைப் பார்க்கச் சென்றான். அவளிடம் வழியில் நடந்ததை அப்படியே கூறவும், அவள் பயந்து போனாள். ''நல்ல வேளை, நம் தாய் தந்தையர் செய்த புண்ணியத்தால் நீ பிழைத்தாய். இனிமேல் இந்த மாதிரி வேலைகளில் எல்லாம் நீ ஈடுபட வேண்டாம். முன் போலவே என்னோடு அரண்மனையிலேயே இரு. யார் வேண்டுமானாலும் எது வேண்டு மானாலும் சொல்லிவிட்டுப் போகட்டும்!'' என்றாள்.


அதே சமயம் ஜெயசீலர் தனது தளபதியைப் பாராட்டிக் கொண்டிருந்தார். ''பலே தளபதி! நான் சொன்னது போலவே குணவர்மனை மாறு வேடத்தில் விரட்டிச் சென்று, வாள் முனையில் ஓலையைக் கவர்ந்ததோடு அவனையும் ஒரு வழக்குக் கொண்டு வந்து விட்டாய். ஆமாம், அந்த ஓலையை வீரசிம்மனிடம் சேர்ப்பித்து விட்டுத்தானே வருகிறாய்?'' என்று கேட்க, தளபதியும் பணிவோடு, ''ஆம் அரசே!'' என்றான்.


''பலே! உன்னைப் போல ஒரு தளபதியை அடைய நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும். இந்தா இந்தப் பொன் முடிப்பை என் பரிசாக வைத்துக்கொள்!'' என்று கூறிய வண்ணம் தளபதியிடம் ஒரு பொன்முடிப்பை நீட்டினார், ஒரே ஓலையின் மூலம் இரண்டு காரியங்களைச் சாதித்துக் கொண்ட ஜெயசீலர்!










# நாடோடிப் பாடல்கள்



### சேனை பலம்:கோடி பலம்

காலையிலே பெருமாள்
தேரின் மேலே வருவார்.
அந்திக்கு வருவார்
ஆனை மேலே ஏறி

சேவிச்சோ மானால்
சேனை பலம் உண்டு.
கும்பிட்டோ மானால்
கோடி பலன் உண்டு.

### காசா லட்டு

காசா லட்டு
கைமேலே துட்டு
போனால் வராது
பொழுதுபட்டால் தங்காது!

### பூப்பறி

எட்டிப் பறி பூவை.
விட்டு விடு அரும்பை.

தாவிப் பறி பூவை.
தள்ளி விடு அரும்பை.


ஓடிப் பறி பூவை.
ஒதுக்கி விடு அரும்பை.

தள்ளி விட்ட அரும்பு
தானாய் மலராதா?

ஒதுக்கி விட்ட அரும்பு
உடனே மலராதா?

### என்ன என்ன படைப்போம்?

எங்களது பிள்ளையார்க்கு
என்னென்ன நாம் படைப்போம்!
பச்சரிசி தேங்காய்,
  பயறு பணியாரம்,
கொள்ளுடன் துவரை,
  கோதுமை கடலை,
முள்ளுடன் பலாக்காய்,
  முறித்த இளங்கரும்பு,
ஆனை அடிபோல
  அதிரசங்கள் நூறு,





குதிரை முகம் போலக்
கொழுக்கட்டை நூறு,
பன்றி அடி போலப்
பயத்துருண்டை நூறு,
எள்ளுருண்டை நூறு,
இத்தனையும் சேர்த்து
வடக்கு மலை ஏறி,
வாழை இலை நறுக்கி,
தெற்கு மலை ஏறி,
தேக்கு இலை பறிச்சு
செல்லப் பிள்ளையார்க்கு,
சீருடனே நாம் தருவோம்.

## வந்தவர் சொன்னது...?

யாரு வந்தாங்க?
மாமன் வந்தாங்க.
என்ன சொன்னாங்க?


ஆத்திலே இருக்கிற பாகற்காயை
அறுக்கச் சொன்னாங்க.
அறுத்துவந்த பாகற்காயைப்
பொரிக்கச் சொன்னாங்க.
அதுக்குக் கொஞ்சம் நெய்யை
ஊற்றி
வறுக்கச் சொன்னாங்க.
தின்னுப்பிட்டுப் போகையிலே
திருப்தி யின்னாங்க.


## மகாராஜ ராஜஸ்ரீ

மகாராஜ ராஜஸ்ரீ
மண்டையிலே பிளாஸ்திரி
மதுரையிலே ஆஸ்பத்திரி

## ஆகட்டும், போகட்டும்

ஆகட்டும் போகட்டும்
அவரைக்காய் காய்க்கட்டும்
தம்பி பிறக்கட்டும்:
தம்பட்டங்காய் காய்க்கட்டும்
அவனுக்கும் கல்யாணம் ஆகட்டும்.
உன்னைக் கூப்பிடுகிறேனா, பார்!





# பசு மிக நல்லதடி பாப்பா

- ஜமதக்னி -

நான்காம் வகுப்பில் படிக்கும் கோபு அப்பொழுதுதான் வீட்டுக்குத் திரும்பினான். காலணிகளை வாசலில் கழற்றிவிட்டுப் புத்தகப் பையை அலமாரியில் வைத்து விட்டுக் கொல்லைப் புறம் சென்று கால்களைக் கழுவிக்கொண்டான். வெளியே போய் வந்தால் வீட்டிற்கு வந்தவுடன் கால்களைச் சுத்தம் செய்யும் நற்பழக்கம் உடையவன் அவன்.

அவனைக் கண்டதும் மாட்டுக் கொட்டிலில் கட்டியிருக்கும் கன்றுக்குட்டி குதித்தது. கோபு அதற்கு 'அப்பு' என்று பெயர் சூட்டியிருந்தான். அப்புவின் அம்மா பெயர் சரஸ்வதி. அதற்கும் அம்மா லட்சுமி. லட்சுமி மாடு வயதான மாடுதான். அது இப்போது பால் கறப்பதில்லை. எல்லா மாடுகளுக்கும் கொஞ்சம் வைக்கோலை எடுத்துப் போட்டான் கோபு. வாலை ஆட்டிக்கொண்டு அவை சாப்பிட்டன. அப்பு பார்ப்பதற்கு நன்றாக, அழகாக இருக்கும். அப்பு பிறந்தபொழுது ஒல்லியாக, குள்ளமாக இருந்தது. ஆனால், அதற்குள் நன்றாக வளர்ந்து விட்டது.

கோபு நல்ல சூட்டிகையான பையன். அவனுடைய வகுப்பில் அவன்தான் முதல் மாணவன். விளையாட்டிலும் சூரன். பெரியவர்களிடம் பண்பாய், அடக்கமாய் நடந்து கொள்ளுவான். கோபு வீட்டுக்கு நாலு வீடு தள்ளி வசித்து வரும் குருவும் அவன் பள்ளியில்தான் படிக்கிறான். அவன் ஆறாவது வகுப்பில் படிக்கிறான். கோபுவும் குருவும் பள்ளிக்குச்சேர்ந்தேபோவார்கள். கோபு, குருவிடம், அவனுக்குத் தெரியாத விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுவான்.

மாட்டுக் கொட்டிலிலிருந்து வெளியே வந்த கோபு, அம்மா கொடுத்த டிபனை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு விளையாடப் போய் விட்டான். சரியாக ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்து விடுவான் அவன். பிறகு கால்களை அலம்பிக் கொண்டு, சுவாமியை வணங்கிவிட்டுப் பாடங்கள் படிப்பான். இரவு சாப்பிட்டுவிட்டுப் பாட்டி அருகில் படுத்துக் கொள்வான். அவன் பாட்டி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கதை சொல்லுவாள். அன்று இரவு அவன் பாட்டி திலீப ராஜா கதை சொன்னாள். கோபுவுக்குத் திலீப ராஜாவை ரொம்பவும் பிடித்து விட்டது. ஒரு பெரிய மகாராஜா. மாடுகளுடன் தம் பொழுதைப் போக்கி யிருந்தார் எனக் கேட்க அவனுக்கு ரொம்பவும் மகிழ்ச்சியாக இருந்தது.

மறுநாள்.

ஹாலில் உட்கார்ந்துகொண்டு பாடங்களைப் படித்துக் கொண்டிருந்தான் கோபு.

''தம்பி, அப்பா இருக்காரா?''—வாசலில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். பரட்டைத் தலை. லுங்கி கட்டிக்கொண்டிருந்தான். யார் இவன்? இவனுக்கு அப்பாவிடம் என்ன வேலை? உள்ளே




போய் அப்பாவைக் கூட்டிக் கொண்டு வந்தான்.

''வணக்கம் சாமி... அப்ப நாளைக்கு வந்து மாட்டை ஓட்டிக் கிட்டுப் போயிடவா?'' என்றான்.

''நாளைக்கு வேண்டாம்பா. ஞாயிற்றுக் கிழமை காலையில் வா'' என்றார் கோபுவின் அப்பா. ''இதை அட்வான்ஸாக வெச்சுக்குங்க'' என்று சொல்லிவிட்டு லுங்கியின் அடியில் இருந்த டிராயரிலிருந்து கொஞ்சம் பணம் எடுத்துக் கொடுத்தான். ''அப்ப வரேனுங்க'' என்று சொல்லிவிட்டுப் போனான்.

எந்த மாட்டை விற்கப் போகிறார்... அப்புவை விற்க மாட்டார். லட்சுமி



கழுதை-1: அண்ணே, எங்கே போறீங்க?

கழுதை-2: நாமும்தான் மாடு மாதிரி உழைக்கிறோம். மாட்டுப்பொங்கல் மாதிரி நமக்கும் கழுதைப் பொங்கல் கொண்டாடணும்னு மந்திரிக் கிட்டே மனுக் கொடுக்கப் போறேன்!

—எம். ஆர். ராஜன்

மாட்டைத்தான் விற்பார். 'நம்ம வீட்டிலேயே இருந்தால் என்ன? காலையில் வந்தவன் வீடு எங்கிருக்கிறதோ தெரியவில்லை. நம் லட்சுமியை அவன் நன்றாகக் கவனித்துக் கொள்வானா?...'

சாப்பிடும்பொழுது அம்மாவிடம் கேட்டான். ''அப்பா எந்த மாட்டை விற்கப் போகிறார்?'' ''லட்சுமி மாட்டைத்தான்'' — அம்மா சொன்னாள். டக்கென அம்மாவின் முகத்தைப் பார்த்தான். புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். அழுகிறாளோ?....

''அம்மா ஏன் அழறே?'' — கோபு.

''அழலேடா. கண்ணிலே தூசி விழுந்துடுத்து'' — அம்மா எதையோ மறைக்கிறாள். அம்மா மறைப்பதற்கு ஏதேனும் காரணம் இருக்கும். தூண்டித் துருவிக் கேட்பது பண்பாடல்ல.

சாயந்திரம் பள்ளியிலிருந்து வந்தான் கோபு.

''அம்மா, நீங்களாவது அவர்கிட்டச் சொல்லக் கூடாதா?... நான் எவ்வளவு தடவை சொல்லியும் மாட்டை விக்கறதில் பிடிவாதமா இருக்கார்''—கோபுவின் தாய்.

''நான்என்னம்மாசெய்வேன்?நானும் சொன்னேன். கேட்டாத்தானே...?'' -பாட்டி.

''வேற யார் கிட்டயாவது விக்கலாமே?'' — கோபுவின் தாய்.

''பெரிய பாவம்டான்னு சொன்னேன். 'நான் அவன் கிட்டே விற்கிறேன். அப்புறம் அது அவனுடைய சொத்து.அவன் இஷ்டம். அவன் என்ன செய்தாலும் பாவமோ, புண்ணியமோ அவனுக்குத்தான் சேரும்' என்கிறான்''— கோபுவின் பாட்டி.

ஒட்டுக் கேட்கும் பழக்கம் அவனுக்கு இல்லை. இருந்தாலும், யதேச்சையாகக் காதில் விழுந்தது. இரண்டு பேரும் மாட்டை விற்பதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இருவருக்கும் மாட்டை விற்பதில் இஷ்டமில்லை. அதுவும் இந்த லுங்கி ஆசாமியிடம். அம்மாவும் பாட்டியும் சொல்லியே கேட்கவில்லை. அம்மாவும் பாட்டியும் நம்மிடம் சொல்லவில்லை. இதில் ஏதோ இருக்கிறது....

சாயந்திரம் நேராகக் குருவின் வீட்டுக்குப் போனான். ''டேய் குரு, உன்கிட்ட ஒரு விஷயம்!'' என்று சொல்லிவிட்டு அவனிடம் விவரத்தைத் தெரிவித்தான்.

''அவனா... அவன்தான் கசாப்புக் காரன். அவனை உனக்குத் தெரியாது? நம்ம ஸ்கூல் தாண்டியவுடனே அவன் கடை இருக்கு....'

''கசாப்புக்காரன்னா என்னடா அர்த்தம்?''

கோபுவின் காதில் மெதுவாகச் சொன்னான் குரு: ''அவன் ஆட்டுக் கறி, மாட்டுக் கறி விக்கறவன்.''

''அப்படின்னா எங்க லட்சுமியைக் கொன்னுடுவானா?''

''ஆமான்டா...''

நேராக வீட்டுக்கு வந்தான் கோபு. அவனுக்கு ரொம்பவும் பயமாக இருந்தது. சாமியிடம் வேண்டிக் கொண்



## வெறி நாய்!

''நீங்க வளர்க்கிற நாய் வெறி நாயாய் மாறிடுத்தாமே?''

''அது வெறிநாயாய் மாறினதும் முதுகிலே ரெண்டு போட்டேன். வெரி குட் நாயா மாறிடுச்சு!''

—சு. கிருஷ்ணராஜ்

டான். பிரணவ மந்திரத்தைத் தந்தைக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கும் முருகனின் படம்... அன்று இரவு சீக்கிரமே படுத்துக் கொண்டான். ஆனால் தூங்கவில்லை.

'புலால் உண்ணுவது தவறு... ஓர் உயிரைக் கொன்று மற்றொரு உயிரை வளர்க்கலாமா?. அது பாவம்' என்று வகுப்பாசிரியர் காந்தியடிகள் பாடம் நடத்தும்போது சொல்லியிருக்கிறாரே.. பசுமாடு தெய்வம் என்று மத போதனை ஆசிரியர் சொல்லியிருக்கிறாரே... பகவான் கிருஷ்ணன் மாடுகளிடம் எவ்வளவு பிரியமாக இருந்தார்! மத போதனை ஆசிரியர் அறுபத்து மூவரில் ஒருவரான சண்டேசுவர நாயனாரைப் பற்றிச் சொல்லும்போது 'பசுவை எவ்வளவு புகழ்ந்து சொல்லியிருக்கிறார்!' நேற்று பாட்டி சொன்ன திலீபன் கதை ஞாபகத்துக்கு வந்தது.

அன்று இரவு அவன் தூங்கிவிட்டான் என்று நினைத்துக்கொண்டு அவன் அம்மா அவன் தந்தையிடம், ''நம்ம மாட்டை அவன்கிட்ட விக்காதீங்க.'' என்றாள்.

''திரும்பத் திரும்பச் சொல்லாதே. நான் விக்கத்தான் போறேன். அட்வான்ஸ் கூட வாங்கியாச்சு.''

''டேய் அது மகா பாவம்டா...''—பாட்டி.

''அம்மா... பாவம் புண்ணியம் அவனுக்கு. நமக்கு உபயோகம் இல்லாததை நாம விக்கிறோம். பழைய பேப்பரைக் கடையிலே போடலியா.. அதைப் போல. உபயோகம் இல்லாத வஸ்து. கசாப்புக் கடைக்காரனைத் தவிர வேறு யார் வாங்கிப்பா?''

சட்டென்று எழுந்தான் கோபு.

''டேய், நீ தூங்கலியா?'' என்றார்.

''இல்லேப்பா. நீங்க பேசியதைக் கேட்டேன்...ஆமா, இப்போ நம்ம பாட்டிக்கு எவ்வளவு வயசாறது அப்பா?''

''என்னடா நடு ராத்திரிலே ஏதாவது கேட்கிறே? எனக்கு 70 வயது''—. பாட்டி.

''இப்பப் பாட்டி ஒரு வேலையும் செய்யறதில்லே. சாப்பிட்டுட்டுக் கதைதான் சொல்றா.— இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு அதுகூடச் சொல்ல முடியாது.''

''டேய், உனக்கு என்ன ஆச்சு?''—அப்பா.

''நம்ம பாட்டி உபயோகம் இல்லேன்னு வித்துடுவியா அப்பா?''

''டேய்....'' கோபத்துடன் வந்த அப்பா சட்டென நின்று விட்டார்.

அந்தப் பிஞ்சு உள்ளத்திலே, தாம் செய்ய இருந்த காரியம் எந்த அளவுக்குப் பாதித்திருக்கிறது!'... பாட்டியும் அம்மாவும் ஸ்தம்பித்து விட்டனர்.

''டேய் கோபு...நான் அந்த மாட்டை விக்கலேடா'' என்று சொல்லிவிட்டு அவனை அணைத்துக் கொண்டார்.

சுவரில் தந்தைக்கு உபதேசம் செய்த முருகனின் படம் காற்றில் ஆடியது.

''நான் இப்பவே போய் அட்வான்ஸை அவன் கிட்டத் திருப்பிக் கொடுத்துட்டு வந்துடறேன்'' என்று அப்பா கிளம்பினார்.

நம்மால் சாதிக்க முடியாததைக் கோபு சாதித்ததில் அம்மாவுக்கும், பாட்டிக்கும் ரொம்ப சந்தோஷம்.... அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துத் தந்தையை நல்வழிப் படுத்திய கோபுவின் புத்திசாலித்தனத்தை நினைத்து ரொம்ப மகிழ்ச்சி.

''கோபுவுக்கு நாளைக்கு ஏதாவது பட்சணம் செய்து கொடுடி.... புத்திசாலிப் பையன்'' என்றாள் பாட்டி.

''நிச்சயம் பண்ணித் தரேன்'' என்றாள் அம்மா.

கோபு கொட்டிலுக்குப் போய் லட்சுமி மாட்டைத் தடவிக் கொடுத்தான். அதுவும் தன்னைக் காப்பாற்றியவன் என்று புரிந்து கொண்டது போல மகிழ்ச்சியுடன் தலையை ஆட்ட ''டிங் டிங்'' என்ற மணியோசை கேட்டது. தூரத்திலிருந்து ''பாலைப் பொழிந்து தரும் பாப்பா — அந்தப் பசு மிக நல்லதடி பாப்பா'' என்ற பாடல் காற்றில் மிதந்து வந்தது.

கல்யாண வீடு.

வந்திருந்தவர்கள் சாப்பாட்டுக்காகக் கல்யாணச் சத்திரத்துக்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள். வாசலில் போடப் பட்டிருந்த நாற்காலிகளில் ஒன்றில் உட்கார்ந்தவாறு ஒவ்வொருவரின் கால்களையும் கவனித்துக் கொண்டிருந்தான் தியாகு.

மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த ஒருவர் இவனது தோளைத் தட்டி ''சாப்பிடப் போகலையா சார்?'' என்று கேட்டபோது, ''கூட்டம் அதிகமாக இருக்கே! இனி இரண்டாவது பந்திக்குத் தான்!'' என்று சிரித்தான்.

ஒவ்வொருவராய்ச் செருப்பைக் கழற்றி விட்டு நகர்ந்தார்கள்.

ஊஹூம்!

இதுவரை அவனது மனத்துக்குப் பிடித்தமானதாகவும், கால்களுக்குப் பொருத்தமாகவும் ஒருங்கே அமைந்த செருப்பு வரவில்லை.

இடையிடையே தன்னைப் போலவே நாற்காலிகளில் ஆங்காங்கே அமர்ந்திருந்த மற்றவர்களையும் பார்த்துக் கொண்டான். அவர்கள்—

பெண் வீட்டுக்காரர்களோ, மாப்பிள்ளை வீட்டுக்காரர்களோ தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்.

அவர்கள் அனைவரும் இவனுக்குப் பழக்கமில்லாதவர்கள்!

தியாகுவின் முகம் மலர்ந்தது.

அதோ! ஒருவர் செருப்பைக் கழற்றிக் கொண்டிருக்கிறார். புத்தம் புதியது. தியாகுவின் எதிர்பார்த்த அத்தனை அம்சங்களும் அதில் அமைந்திருந்தன.

அவர் இவனது மன ஓட்டத்தை அறியாதவராய் வேகமாய் உள்ளே போய்விட்டார்.

பத்து நிமிடம் கழிந்ததும்—

யாரும் சந்தேகிக்காதபடி மெதுவாக எழுந்து, செருப்புக் கும்பலிடம் சென்றான்.

வெறும் காலோடு வந்தவன் செருப்புக் கால்களோடு கிளம்பி விட்டான்!

முதல் நாள் ஒன்றும் தெரியவில்லை.

இரண்டாம் நாளில் இடது கால் புண்ணாகி விட்டது.

புதிய செருப்புக் கடித்ததால் வந்த வினை!

பக்கத்து வீட்டுக்காரர் சொன்ன யோசனையின்படி இரவில் செருப்பின் குறுக்குப் பட்டை வாரில் தேங்காய் எண்ணெயைச் சொத சொதவென்று தடவி ஒரு மூலையில் வைத்தான். இப்படி இரண்டு நாட்களுக்குத் தடவினால் தோல் மிருதுவாகி உராய்வு குறைந்து காலில் புண் ஏற்படாதாம்!

மறுநாள்.

அலுவலகம் செல்லும் போது, செருப்பை அணிந்து கொள்வதற்காக மூலையை நோக்கிச் சென்றான்.

அங்கே—

எண்ணெய் தடவப்பட்ட அந்தப் பரிதாபத்துக்குரிய இடதுகால்செருப்பு அலங்கோலமாகக்கடிக்கப் பட்டு, பிய்த்துக் குதறப் பட்டிருந்தது!

எண்ணெய் வாசனையில் கவரப்பட்ட எலி செய்த வேலை!

மீதியுள்ள எண்ணெய்க்காக, நிறைய எறும்புகள் சூழ்ந்து மொய்த்துக்கொண்டிருந்தன அந்தச் செருப்பை. அது தன்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக் கொண்டிருப்பதைப் போல் தியாகுவுக்குத் தோன்றியது!



# செருப்பின் கதி

மு. திருஞானம்

# ருஷ்யா தேசத்துக் குட்டிக் கதைகள்

ஸ்ரீதேவி

முன்னொரு காலத்தில் ஏழை ஒருவன் மிகவும் பாடுபட்டு ஆயிரம் வெள்ளிக் காசுகளைச் சேர்த்தான். அவற்றை அவன் அந்நகரில் இருந்த காஸி என்பவரிடம் கொடுத்துச் சிறிது காலம் சென்ற பிறகு திரும்பப் பெற்றுக்கொள்வதாகக் கூறினான்.

சிறிது காலம் சென்ற பின், அந்த ஏழை காஸியிடம் சென்று, தான் கொடுத்து வைத்த பணத்தைக் கேட்டான். ஆனால் காஸியோ, ''நீ யார் என்றே எனக்குத் தெரியாது. என்னிடம் நீ பணம் கொடுத்ததாக வேறு பொய் சொல்கிறாய். உனக்கென்ன பைத்தியமா?'' என்று கூறி விரட்டி அடித்தார்.

அந்த ஏழை வேறு வழியின்றித் தெருவில் நின்று அழுது கொண்டிருந்தான். அந்த வழியில் சென்ற பெண் ஒருத்தி என்ன விஷயம் என்று கேட்டாள். அவன் காஸி தனக்குச் செய்த கொடுமையைக் கூறினான்.

அப்பெண், ''வருந்த வேண்டாம். என்னுடன் வாருங்கள். நான் உங்களுக்குப் பணம் கிடைக்க வழி செய்கிறேன்'' என்று கூறித் தன்னுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

ஒரு கனமான பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு, அந்த ஏழையையும், தன் மகனையும் அழைத்துக் கொண்டாள் அந்தப் பெண். காஸியின் வீட்டிற்குச் சிறிது தூரத்தில் இருவரையும் நிற்கச் சொல்லி, ஒவ்வொருவரும் என்ன என்ன செய்ய வேண்டும், என்ன என்ன பேசவேண்டும் என்று கூறினாள். பிறகு அவள் தனியாக அந்தக் கனமான பெட்டியைத் தலையில் வைத்துக் கொண்டு காஸியின் வீட்டிற்குள் நுழைந்தாள். பெட்டியுடன் வந்த பெண்ணைக் கண்டு காஸி பலமாக வரவேற்றார்.

அந்தப் பெண், ''நான் வணிகர் ரஹீமின் மனைவி. என் கணவர் வியாபாரம் செய்வதற்காக வெளிநாடு போயிருக்கிறார். வீட்டில் பொன்னையும் பொருளையும் வைத்துக் கொண்டிருக்கப் பயமாக இருக்கிறது. திருடர்கள் வேறு எங்கள் வீட்டை வட்டமிடுகின்றனர். எனவே, இதை உங்களிடம் கொடுத்து வைத்தால் பத்திரமாக இருக்குமே என்று கொண்டு வந்தேன்'' என்றாள்.

''அதிலென்ன சந்தேகம்? உரிய இடத்திற்குத்தான் கொண்டு வந்திருக்கிறாய். என்னிடம் நிறையப் பேர் கொடுத்து வைத்திருக்கிறார்கள். அவற்றைப் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறேன். அவர்களைக் கேட்டால் என் நேர்மை புரியும்'' என்றார் காஸி.

அந்தச் சமயத்தில், அப்பெண்மணி சொல்லிக் கொடுத்தபடி ஏழை அங்கு வந்தான். ''நான் கொடுத்த ஆயிரம் வெள்ளிக்காசுகளைக் கொடுங்கள்'' என்று கேட்டான். 'இப்போது இவனிடம் தகராறு செய்தால், விலையுயர்ந்த இந்தப் பெட்டியை நம்மிடம் தரமாட்டாள்.' என்று நினைத்த காஸி உடனே



ஆயிரம் காசுகளையும் எண்ணிக் கொடுத்தார்.

பிறகு அப்பெண்ணிடம், ''பார்த்தாயா? இது மாதிரிதான் என்னிடம் பணம் கொடுத்தவர்கள் வந்து கேட்டவுடன், கொடுத்த தொகையில் ஒரு காசு குறையாது கொடுத்து விடுவேன்'' எனக் கூறிப் பெட்டியை வாங்கக் கையை நீட்டினார். அந்தச் சமயத்தில் அப்பெண்ணின் மகன் ஓடிவந்து, ''அம்மா, வீட்டுக்கு வாம்மா. அப்பா சரக்குகளுடனும், ஒட்டகத்துடனும் வந்து விட்டார்' என்று அம்மா ஏற்கெனவே

சொல்லிக் கொடுத்தபடி அங்கு வந்து சொன்னான். அவள், ''என் கணவர் வந்து விட்டார். இனி பயமில்லை'' என்று கூறிப் பெட்டியுடன் திரும்பி விட்டாள்.

அப்போது அந்தக் காளியின் முகத்தைப் பார்க்க வேண்டுமே!

## வேலை மாற்றம்

''நான் தினந்தோறும் வயலிலே உழுதுவிட்டு வருகிறேன். நீ சுகமாக வீட்டிலே இருக்கிறாய்'' என்று தினந்தோறும் மனைவியைத் திட்டுவான் ஓர் உழவன்.

மனைவி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். ஒருநாள் அவள், ''சரி, நாளை முதல் நான் வயலுக்குப் போய் உழுகிறேன். நீங்கள் வீட்டு வேலைகளைக் கவனியுங்கள். ரொட்டி சுடுவது, தயிர் கடைவது, கோழிகளையும் குஞ்சுகளையும் கவனிப்பது — இந்த மூன்று வேலைகளையும் பார்த்தால் போதும்'' என்றாள்.

மறுநாள் காலை மனைவி வயலுக்குப் புறப்பட்டு விட்டாள்.

'இந்த ஐந்து கோழிக் குஞ்சுகளையும் தனித் தனியாக விட்டால் பருந்து தூக்கிப் போய்விடும். அதனால், தாய்க் கோழியுடன் சேர்த்துக் கட்டிப் போடலாம்' என்று அந்த ஐந்து கோழிக் குஞ்சுகளையும் ஒரே கயிற்றில் கொஞ்சம் கொஞ்சம் இடைவெளி விட்டுக் கட்டி, அந்தக் கயிற்றின் நுனியைத் தாய்க் கோழியின் காலில் பலமாய்க் கட்டினான்.

பிறகு அடுப்பிலே தீயை மூட்டி, கல்லிலே ரொட்டிகளைத் தட்டிப் போட்டுவிட்டுத் தயிர் கடைந்து கொண்டிருந்தான். அப்போது கோழியும் குஞ்சுகளும் கத்துகின்ற சத்தம் கேட்டது. தயிர்ப் பாத்திரத்துடன் வெளியில் வந்து பார்த்தான். ஒரு பெரிய பருந்து, தாய்க் கோழியையும் குஞ்சுகளையும் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறந்து செல்வதைக் கண்டான். உடனே முதுகில் தயிர்ப் பாத்திரத்தைக் கட்டிக் கொண்டான். ஓடும்போது தயிர் ஆடி ஆடி வெண்ணெய் திரண்டு வரும் என்பதே அவன் நினைப்பு! பருந்தைத் துரத்திக் கொண்டே அவன் ஓடினான்.



வழியில் கால் தடுக்கிக் கீழே விழுந்தான். அப்போது முதுகிலிருந்த பாத்திரத்திலிருந்த தயிர் முழுதும் கீழே கொட்டி வீணானது! பருந்தோ கண்ணுக்குத் தெரியாத தூரத்தில் சென்று மறைந்து விட்டது.

''தயிரும் போச்சு! கோழியும் போச்சு! குஞ்சுகளும் போச்சு!'' என்று கூறிக்கொண்டே உழவன் ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

அப்போது கல்லிலே போட்ட ரொட்டிகள் எல்லாம் நன்றாகக் கருகிப் போய்த் தீசல் வாசனை வீசியது. ''ஐயோ! ரொட்டிகளும் போச்சே!'' என்று கத்தினான்.

இதற்குள் மாலை நேரம் வந்து விட்டது. மனைவி வயலிலிருந்து திரும்பி வந்தாள். அவள் வந்ததும் வராததுமாக ''நாளையிலிருந்து நான் வயலுக்கே போகிறேன். நீ வீட்டு வேலையைப் பார்'' என்றான் உழவன்.

நடந்ததைக் கேட்டு அவள் சிரித்தாள். அதற்குப் பிறகு, அவன் மனைவியைத் திட்டுவதே இல்லை!

## சுவையான கூழ்

போர்வீரன் ஒருவன் மிகக் களைப்புடனும், நல்ல பசியுடனும் வந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு குடிசையைக் கண்டான். அங்கிருந்த கிழவியிடம் ''ஏதாவது இருந்தால் சாப்பிடக் கொடுங்கள்'' என்று கேட்டான்.

கிழவி ஒரு கருமி. ''அட பாவமே, என்னிடமும் ஒன்றுமில்லையே! நான் கூட இன்று காலைமுதல் பட்டினிதான்'' என்று பொய் சொன்னாள்.

இதை அறிந்த போர் வீரன் அருகில் இருந்த கைப்பிடி இல்லாத கோடரி ஒன்றை எடுத்துக் கொண்டு, ''வேறு எதுவும் இல்லையானாலும் பரவாயில்லை. ஒரு சட்டி மட்டும் கொடுங்கள். இந்



தக் கோடரியைக் கொண்டு கூழ் செய்ய லாம்'' என்றான்.

''கோடரிக் கூழா? அதிசயமாக உள்ளதே!'' என்று கூறிக் கொண்டு ஒரு சட்டியைக் கொண்டு வந்து கொடுத்தாள், கிழவி.

போர் வீரன் கோடரியைக் கழுவி, சட்டியில் போட்டு, சிறிது நீர் ஊற்றி அதை அடுப்பில் வைத்துக் காய்ச்சினான். சிறிது நேரம் கழித்து அதில் சிறி தளவை எடுத்து வாயில் ஊற்றிப் பார்த்தான். கிழவி இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

''இன்னும் சிறிது நேரத்தில் கூழ் தயாராகி விடும். ஆனால், உப்புத்தான் இல்லை'' என்றான்.

கிழவி, ''என்னிடம் உப்பு இருக்-கிறது'' என்று கூறிக் கொஞ்சம் உப்புக் கொண்டு வந்து கொடுத்தாள். போர் வீரன் உப்பைப் போட்டுக் கிளறி அதில் சிறிதளவு வாயில் விட்டு ருசி பார்த்த பின், ''இதில் கொஞ்சம் கேப்பையும் போட்டால் மிகவும் ருசி யாக இருக்கும்'' என்றான்.

கிழவி அறைக்குள் போய், ஒரு பையில் கேப்பையைக் கொண்டுவந்து கொடுத்தாள். போர்வீரன், அதையும் அடுப்பில் உள்ள நீரில் போட்டுக் கலக்கினான்.

''கூழ் தயாராகி விட்டது. இதில் சிறிது வெண்ணெய் விட்டால் இதை விடச் சிறந்த உணவு வேறு எதுவும் இருக்க முடியாது'' என்றான் போர் வீரன். கிழவி வெண்ணெயும் கொடுத்தாள்.

கூழ் தயாரானதும் இருவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். ''கோடரிக் கூழ் இவ்வளவு சுவையாக இருக்கும் என்று நான் நினைக்கவே யில்லை'' என்றாள் கிழவி.

போர்வீரன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

## நரி கற்ற பாடம்!

கரடியும் நரியும் ஓநாயும், ஒன்று பட்டு வாழ்வதென முடிவு செய்தன. தங்களுக்குக் கிடைக்கும் உணவைப் பங்கிட்டு உண்பது எனவும் முடிவு செய்தன.

ஒரு நாள் அவை மூன்றும் காயப் பட்டுக் கிடந்த ஒரு மானைக் கண்டன. அதை உடனே அடித்துக் கொன்றன. பிறகு கரடி ஓநாயிடம், ''இந்த மானை நம் மூவருக்கும் பங்கிட்டுக் கொடு'' என்றது.

ஓநாய், ''எங்களுக்குத் தலைவராய் விளங்கும் கரடியாரே, நீங்கள் இந்த மானின் தலையை எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு உடல்; வேகமாக ஓடும் நரிக்கு மானின் கால்கள்.'' என்றது. அது கூறி வாய் மூடுவதற்குள் கரடி ஓநாயின் தலையில் ஓங்கி அடித்தது. ஓநாய் மயங்கிச் சுருண்டு விழுந்தது. பிறகு கரடி, நரியைப் பார்த்து, ''எங்கே இந்த மானை நீ பங்கிடு, பார்க்கலாம்'' என்றது. ''எமது தலைவரான உமக்கு மானின் தலை உரியது. உடலும் உமக்கே உரியது. ஏன் எனில் நீங்கள் எங்களுக்குத் தந்தை யாகவும் விளங்குகிறீர்கள். எந்த நேரமும் எங்கள் நலனுக்காகப் பாடு படுவதால் கால்களும் உமக்கே உரியன'' என்று கூறியது நரி.

'' நரியே, உண்மையில் நீ புத்தி சாலிதான். உணவை இவ்வாறு பங் கிடும் முறையை நீ எப்படிக் கற்றுக் கொண்டாய்?'' என்று கேட்டது கரடி.

''எஜமானே, எப்படி நான் கற்கா மல் இருக்க முடியும்? ஓநாய்க்குச் சற்று முன் நீங்கள் கற்பித்த பாடத் தைப் பார்த்துக் கொண்டுதானே இருந் தேன்!'' என்று கூறியது நரி.



# அந்தப் பேனா

பூதலூர் முத்து

"எந்தத் தேர்வையும் நான் இந்தப் பேனாவால்தான் எழுதுவேன். இது என்னுடைய ராசிப் பேனா. நான் என்னதான் படித்திருந்தாலும் எழுதுவதற்கு வேண்டிய தெம்பைக் கொடுப்பதே இந்தப் பேனாதான். இந்தப் பேனாவால் நான் எழுதி விட்டால், நிச்சயம் முதலாவதாக வந்து விடுவேன். இந்தப் பேனா இல்லாவிட்டால் அவ்வளவுதான். அதற்கப்புறம் என்னால் தேர்வு எழுத முடியாது" என்றான் அரவிந்தன்.


அவன் பாலுவிடம் சொல்லிக் கொண்டிருந்த சொற்களை மிகவும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் சங்கர். ஆனால், அவர்களுடைய பேச்சில் அக்கறை காட்டாதது போல் பாவனை செய்து கொண்டிருந்தான்.

அரவிந்தன் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அதே வகுப்பில்தான் சங்கரும் படித்தான்.

அரவிந்தன் படிப்பில் எப்போதும் அக்கறை உள்ள மாணவன். அவனுடைய புத்தகங்கள் கொஞ்சமும் அழுக்குப் படாமல் அழகிய உறைகளோடு 'பளிச்'சென்று இருக்கும். கேள்வி — பதில் நோட்டைப் பார்த்தாலே கண்ணைப் பறிக்கும். முத்து முத்தாக எழுதி வைத்திருப்பான். விடைகளிலிருந்து வினாக்களை வேறுபடுத்தச் சிவப்பு வண்ணத்தில் எழுதி வைத்திருப்பான்.

மலர்ந்த முகத்தோடு தூய உடையோடு அவன் பள்ளிக்கு வருவதே ஓர் அழகாக இருக்கும். அவனும் படித்து, மற்றவர்களையும் படிக்குமாறு தூண்டி, ஆசிரியர்களிடம் பணிவோடு நடந்து பள்ளியிலேயே அவன் ஒரு மாணவ மணியாகத் திகழ்ந்து வந்தான். காலத்தைப் பொன்னாகப் போற்றிக் கடமை ஆற்றி வந்தான்.

சங்கர் அவனுக்கு நேர் எதிராக இருந்தான். படிப்பு என்றாலே வேப்பங்காயாக இருந்தது அவனுக்கு. அது மட்டுமல்ல. அடுத்தவனுடைய முன்னேற்றம் கண்டு பொறாமைப்படுபவனாகவும் விளங்கினான். வகுப்பில் கடைசிப் பலகையில் போய் உட்கார்ந்து கொள்வான். தேர்விலும் மிகக் குறைந்த மதிப்பெண்களையே பெற்று வந்தான். கண்டவர்களோடு சேர்ந்து கொண்டு ஊர் சுற்றுவான். சினிமாத் தியேட்டர்



வாசலில் தவம் கிடப்பான். கையில் கிடைக்கும் காசைக் கரியாக்குவதில் அவனுக்கு நிகர் அவனே!

அரவிந்தனைக் கண்டால் அவனுக்கு மிகவும் பொறுமையாக இருக்கும். ஆனால், அதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டான். எந்த வழியைப் பின்பற்றியாவது அவன் வகுப்பில் முதலாவதாக வருவதைத் தடுக்க வேண்டும் என்பது அவனுடைய எண்ணம்; ஆசை.

அரவிந்தன் தன்னுடைய ராசிப் பேனாவைப் பற்றிப் பாலுவிடம் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டதும் சங்கருடைய மூளை வேகமாக வேலை செய்தது.

அரவிந்தனிடம் சென்று, ''அரவிந்தா, உன்னுடைய ராசிப் பேனாவைக் கொடு, பார்க்கலாம்'' என்றான்.

அரவிந்தன் தன்னுடைய பைலட் பேனாவைக் கைக்குட்டையால் நன்றாகத் துடைத்துச் சங்கரிடம் நீட்டினான்.

சங்கர் அதைத் திருப்பிப் பார்த்துவிட்டு, ''அரவிந்தா... இந்தப் பேனாவால் கேள்வி - பதில் எழுதிவிட்டு இரண்டே நாட்களில் திருப்பிக்கொடுத்து விடுகிறேன், தருகிறாயா? இந்த ராசிப் பேனாவால் எழுதினாலாவது நான். நல்ல மதிப்பெண் வாங்கலாமில்லையா?'' என்றான்.

அரவிந்தனால் அந்த வேண்டுகோளைத் தட்ட முடியவில்லை.

''சங்கர்... பேனா பத்திரம். சொன்னபடி இரண்டு நாட்களில் கொடுத்துவிடு'' என்றான்.

''இப்போதே போய் எழுதத் தொடங்கி விடுகிறேன். அப்போது தானே குறிப்பிட்டபடி திருப்பித் தர முடியும்?'' என்று சாமர்த்தியமாகப் பதில் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான் சங்கர்.

வீட்டுக்குச் சென்றதும், முதல் வேலையாகச் சமையற்கட்டிற்குச் சென்று, அங்கிருந்த அலமாரியின் மேல் தட்டில் டப்பாக்களுக்குப் பின் அந்த பைலட் பேனாவை ஒளித்து வைத்தான் அவன்.

''இந்தப் பேனா இருந்தால்தானே அவனால் எழுத முடியும்? ஒரு வழியாகப் பறித்துக் கொண்டு வந்துவிட்டோம் என்று நிம்மதியாக மூச்சு விட்டான்.

* * *

இரண்டு நாட்கள் ஓடிவிட்டன.

மூன்றாவது நாள் பள்ளிக்கே போகாமல் மட்டம் போட்டு விட்டான், சங்கர்.

அதற்குப் பின் இரண்டு மூன்று நாட்கள் ஓடிவிட்டன. பள்ளிக்கு வந்த சங்கர், அரவிந்தனுடைய கண்ணில் படாதபடி நடமாடிக் கொண்டிருந்தான். எப்போதும் வலிய வந்து பேச்சுக் கொடுக்கும் அவன், அரவிந்தன் இருக்கும் இடத்தை எட்டிப் பார்க்காமல் இருந்தான்.

சங்கருடைய செயல் அரவிந்தனுக்கு வியப்பை அளித்தது.

பள்ளி விளையாட்டுத் திடலில் நண்பர்களுடன் அரட்டை அடித்துக்கொண்டிருந்த சங்கரைப் போய்ப் பார்த்தான் அரவிந்தன்.

''சங்கர், என்னுடைய பேனா எங்கே?''

''அரவிந்தா, நாளைக்கு மறக்காமல் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்'' என்றான்.

அரவிந்தன் பதில் பேசாமல் வந்து விட்டான்.

மறுநாள் சங்கரே அரவிந்தனிடம் வந்தான். வரும்போதே ஒரு பொய்யைத் தயாரித்துக் கொண்டு வந்தான்.

''அரவிந்தா... நேற்று நெய்வேலியிலிருந்து வந்த என்னுடைய மாமா தவறுதலாக உன்னுடைய பேனாவை எடுத்துக் கொண்டு போய் விட்டார். அவருடைய பேனா வீட்டில் இருக்கிறது. கொண்டு வந்து தரட்டுமா? சீக்கிரம் உன் பேனாவை வாங்கி வந்து கொடுத்து விடுகிறேன்'' என்றான் அவன்.

''சங்கர், அவருடைய பேனா எனக்கு வேண்டாம். விரைவில் என்னுடைய பேனா கிடைக்கும்படி செய். ஆண்டுத் தேர்வுக்கு நாள் நெருங்கி விட்டதே. என் ராசிப் பேனா இல்லாமல் என்னால் தேர்வை எழுத முடியாது சங்கர்...'' என்று அழாத குறையாகச் சொன்னான் அரவிந்தன்.

**விடாத பிரார்த்தனை!**

''மழைக்காக விடாமல் பிரார்த்தனை செய்கிறாரே, யார் அவர்?

''நம்ம ஊர்ப் பால்காரர்தான்!''

—பி. மணிமாறன்



''ஆண்டுத் தேர்வுக்கு இன்னும் பத்து நாள் இருக்கிறது. நான் அதற்குள் உன் பேனாவை வாங்கிக்கொடுத்து விடுகிறேன். நம்பு...'' என்றான் சங்கர்.

* * *

அப்படி இப்படிச் சாக்குச் சொல்லி நாட்களைக் கடத்தி விட்டான் சங்கர்.

ராசிப் பேனாவால் அரவிந்தன் தேர்வு எழுத முடியாதபடி செய்ய வேண்டும் என்பதுதானே அவனுடைய திட்டம்?

அன்றுதான் ஆண்டுத் தேர்வு தொடங்கும் நாள். ராசிப் பேனா வந்து சேராததால் சோர்ந்து போயிருந்தான் அரவிந்தன். படிப்பில் அவனுக்கு மனம் செல்லவில்லை.

தெரு முனையில் இருந்த பிள்ளையார் கோவிலுக்குப் போய், ''பிள்ளையாரப்பா... என்னுடைய ராசிப் பேனா என் கைக்கு வரவேண்டும். என்னதான் நான் நன்றாகப் படித்திருந்தாலும், எனக்கு முழுத் தெம்பைத் தருவதே அந்தப் பேனாதான். எப்படியாவது அந்தப் பேனாவைக் கொண்டு வந்து சேர்'' என்று வேண்டிக் கொண்டான்.

* * *

தன் திட்டம் வெற்றி யடைந்து விட்ட மகிழ்ச்சியில் சங்கர் சமையற்கட்டில் உள்ள அலமாரியைத் திறந்து டப்பாக்களுக்குப் பின்னால் கையை விட்டான்; பேனா பத்திரமாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க விரும்பினான்.

கையை விட்டதுதான் தாமதம். ''ஐயோ... அம்மா!'' என்று அலறிக் கொண்டு கை விரலைப் பிடித்தபடி அங்குமிங்கும் ஓடினான் அவன்.

''என்னடா.. ஏன் அலறுகிறாய்? இன்றைக்குப் பரீட்சைன்னு சொன்னே. இங்கே அடுப்படியில் உனக்கு என்ன வேலை?'' என்று கேட்டாள் அவனுடைய அக்கா.

''என் பேனாவை இங்கு வைத்தேன். அதை எடுக்கப் போகும்போது தேள் கொட்டிவிட்டது'' என்று சொன்னான் அவன். அது அரவிந்தனுடைய பேனா என்று சொல்லவில்லை.

''பேனா வைக்கிற இடத்தைப் பார்'' என்று திட்டிய அவனுடைய அம்மா, தேள் கொட்டிய வலது கைப் பெருவிரலைச் சுற்றி மருந்து வைத்துக் கட்டுப் போட்டாள்.

தேள் எவ்வளவு அழுத்தமாகக் கொட்டிவிட்டது! அரவிந்தனுக்குத் தீங்கு செய்ய நினைத்ததால்தான் தனக்கு இந்தத் துன்பம் வந்தது என்பதைச்



**பெரிய சண்டை**

சரித்திர ஆசிரியர்: சண்டையிலே பெரிய சண்டை எது?

ஒரு மாணவன்: குழாயடிச் சண்டைதான் சார், இந்த வறட்சிக் காலத்திலே!

—லட்சுமி சிவம்

சங்கர் சற்று நேரத்திலேயே உணர்ந்து விட்டான்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்,' என்பது எவ்வளவு உண்மை?

அரவிந்தனுடைய பேனாவை எடுத்துக் கொண்டு பள்ளிக்கு ஓடினான் சங்கர்.

அரவிந்தன் பள்ளி விளையாட்டுத் திடலில், வேப்பமரத்தடியில் சோர்வாக அமர்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

''அரவிந்தா, இந்தா உன்னுடைய ராசிப் பேனா... என்னுடைய கெட்ட புத்திக்கு ஆண்டவன் சரியான பாடம் கற்பித்து விட்டார்.'' என்று கண் கலங்கியவாறே கூறினான் சங்கர்.

அரவிந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. சங்கர், தான் போட்ட திட்டத்தையும் அதன் விளைவுகளையும் அவனிடம் கூறினான்.

சங்கருடைய நிலைக்காக மிகவும் வருந்தினான் அரவிந்தன்.


''அரவிந்தா, என்னை மன்னித்து விடு'' என்றான் சங்கர்.

''நீ திருந்தி விட்டாய் என்று அறியும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால், உன்னுடைய துன்பத்தை உணரும்போது வருத்தமாக இருக்கிறது. இந்த விரலோடு எப்படி நீ தேர்வை எழுதுவாய்?'' என்றான் அரவிந்தன்.

''ஆண்டவன் எனக்கு நல்ல புத்தியைக் கொடுத்து விட்டான். நான் அடுத்த ஆண்டு நன்றாகப் படித்துத் தேர்வுகளை எழுதுகிறேன். உனக்குத் தேர்வு தொடங்கும் நேரமாகி விட்டது. போய்த் தெம்பாகத் தேர்வை எழுது'' என்றான் சங்கர்.

அவனுடைய உள்ளத்தில் இப்போது கறை இல்லை. ஏதோ ஒரு திருப்தியோடு வீட்டை நோக்கி நடந்தான் அவன்.

# நான் எறிந்த மாங்கொட்டை



அன்றொரு நாள் மாமா வந்தார்
மாம்பழம் தந்தார் — நான்
ஆவ லோடு பழம் முழுதும்
தின்று முடித்தேன்.

பழம் முழுதும்' தின்று விட்டுக்
கொட்டையை மட்டும்-கொல்லைப்
பக்க மாகத் தூரத் தூக்கி
வீசி எறிந்தேன்.

தூரத் தூக்கி எறிந்து விட்ட
கொட்டையைப் பற்றி — சிறு
துளி யளவும் நினைக்க வில்லை;
முற்றும் மறந்தேன்.

வாரம் சில சென்ற பின்னர்
கொல்லைப் புறத்தே — நன்கு
வளர்ந்து நின்ற மாங்கன் றினைக்
கண்டு வியந்தேன்!

என்றோ தூக்கி எறிந்து விட்ட
அந்தக் கொட்டையே — இதோ
இங்கே ஒரு கன்றாய் மாறி
வளர்ந்திடும் என்றால்—


இன்றே நன்கு இட்ட மிட்டு
இதய வயலிலே — நல்ல
எண்ணங் களைப் பதிய விட்டால்
பயன் விளையாதோ?

ரா. பொன்ராசன்



# கல்யாணத்தில் ஒரு வரவேற்பு

கமலா நடராஜன்



ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் அருளப்பர் மகளுக்குக் கல்யாணம்.

மாணவர்களுக்கு ரொம்பக் குஷி. கல்யாண வேலைகள் எல்லாவற்றிலும் தாங்களும் கலந்து கொள்ள வேண்டுமென்று அத்தனை பேருக்கும் ஆர்வம்.

ஆனால்—

அருளப்பர் எவ்வளவுக்கெவ்வளவு பையன்களிடம் பிரியம் வைத்திருக்கிறாரோ, அவ்வளவுக்கவ்வளவு கண்டிப்பானவரும்கூட.

பெண்ணின் கல்யாணம் சம்பந்தப்பட்ட எந்த வேலையையும் மாணவர்களிடம் சுமத்துவதில் அவருக்கு இஷ்டமில்லை. அப்படி அவர்களை வேலை வாங்குவது தவறு என்கிற அபிப்பிராயம் கொண்டவர்.

எனவே, முக்கிய வேலைகளுக்குத் தெரிந்த நண்பர்களையும், சில்லறை வேலைக்குச் சம்பள ஆட்களையும் நியமித்து விட்டார்.

மாணவர்கள் கல்யாணத்திற்குப் போய், சந்தோஷமாய் விருந்து சாப்பிட்டு வீட்டிற்குத் திரும்ப வேண்டியது தான்!

அன்பளிப்புக்கூட எதுவும் வழங்கக் கூடாது என்று சொல்லி விட்டார்.

காலை ஒன்பது மணிக்கு முகூர்த்தம். இப்போது மணி ஏழு.

பாலியஸ்டர், டெரிகாட்டன் சட்டைகள், விலை உயர்ந்த பேண்ட்டுகள், ஹாப் டிராயர்கள் அணிந்து ஆர்வத்தோடு பையன்கள் தனித் தனியாகவும் இருவர் மூவராகவும் கல்யாண வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

பழனி, கொடியில் உலர்ந்துகொண்டிருந்த தன் சட்டையைத் தொட்டுப் பார்த்தான்.

இன்னமும் ஈரம் இருந்தது.


மீண்டும் கொடியிலே சட்டையைப் புரட்டிப் போட்டான். தோள்பட்டையில் நேற்று அம்மா தைத்தது கோணலாகத் தெரிந்தது.

நல்லவேளை, மற்றொரு டிராயரை முதல்நாளே துவைத்து விட்டான். சட்டையைப் பொறுத்தவரை இருப்பதே ஒன்றுதான். என்ன செய்வது?

அவன் வீட்டைவிட்டுப் புறப்பட்டபோது எட்டு மணி.

வேகமாக நடந்தான்.

''நீ எங்கேடா வர்றே?'' — வழியில் சந்தித்த ரங்கமணி கேட்க —



''கல்யாண வீட்டுக்குத்தான்'' — சந்தோஷமாகப் பதில் சொன்னான் பழனி.

ரங்கமணியோடு வந்த அரவிந்தன் சிரித்தான்.

''ஏண்டா பள்ளிக்கூடத்துக்கும் இதே டிரஸ்.: பஜாருக்கும் இதே டிரஸ்.: கடைசியில் கல்யாண வீட்டுக்கும் இதே தானா!''

உண்மையிலேயே இதுவரை அதைப் பெரிதாகக் கருதாத பழனிக்கு, இப்போதுதான் தன் தோற்றத்தைப் பற்றிக் கவலை வந்தது.

அரவிந்தனும் ரங்கமணியும் சினிமாவில் வரும் பணக்காரச் சிறுவர்கள்போல் உடை அணிந்திருந்தனர்.

''அடேடே பழனி, நீ பேசாமே வீட்டுக்குப் போயிடு. கல்யாண வீட்டில் யாரும் உன்னை உள்ளே கூட விட மாட்டாங்க!''

அவர்கள் மீண்டும் ஒருமுறை சிரித்து விட்டு மேலே நடந்தார்கள்.

பழனிக்குப் பயம் வந்து விட்டது.

அவர்கள் சொல்வது உண்மையாகவே போய்விடுமோ?


இங்கே இவர்கள் சிரிப்பது போதாதென்று அங்கே மற்ற மாணவர்களும் தன்னைப் பார்த்துச் சிரிக்கும்படி ஆகி விட்டால்...?

### இப்போது பார்ப்பது?

ரேடியோ, சினிமா, டெலிவிஷன் முதலிய புதிய சாதனங்களைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்த விஞ்ஞான ஆசிரியர் கேட்டார்:

''15 ஆண்டுகளுக்கு முன்பு இல்லாத முக்கியமான ஒன்றை இப்போது நாம் காண்கிறோம். அது என்ன என்று தெரியுமா?''

பையன்: அது நானேதான்! எனக்கு வயது 12தான்!



திரும்பி விடலாமா?

ஆசிரியர் அருளப்பர் முகம் ஞாபகத்துக்கு வருகிறது.

ஐம்பது மாணவர்கள் உள்ள வகுப்பில் அட்டென்டென்ஸ் எடுக்காமலே யார் யார் வரவில்லை என்பதைக் கண்ணால் பார்த்துக் கண்டுபிடித்துவிடக் கூடியவர். அத்தனை பேர்களிடமும் அன்பும் பாசமும் கொண்டவர்.

இவன் கல்யாணத்துக்கு வராததைக் கண்டிப்பாய்த் தெரிந்து கொள்வார். ரொம்பவும் வருத்தப்படுவார். எப்படியாவது அவர் கண்ணில் இவன் பட்டு விட்டால், நிச்சயமாய் இவர்கள் சொல்வது போல் அவர் அலட்சியப்படுத்திவிட மாட்டார்.

நம்பிக்கை துணிவைத் தர அவன் கல்யாண வீடு நோக்கி விரைந்தான்.

திருமணம் ஆர்ப்பாட்டமில்லாமல் நடந்து கொண்டிருந்தது.

பழனி எதிர்பார்த்துப் பயந்தது போல், எதுவும் நடக்கவில்லை. யாரும் அவன் உள்ளே செல்வதைத் தடை செய்யவில்லை.

அருளப்பர் அங்கும் இங்குமாக ஓடிக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

காலைச் சிற்றுண்டி ஒருபுறம் நடந்து கொண்டிருந்தது.

ரங்கமணியும் அரவிந்தனும் மற்றும் சில மாணவர்களும் பந்தியில் சாப்பிட்டு விட்டு வெளியே வந்தனர்.

யாரும் பழனியை லட்சியம் செய்யாமலே அப்பால் போயினர்.

''எல்லோரும் சாப்பிட்டாச்சா?''— அத்தனை வேலைகளிலும் அருளப்பர் எதிரே வந்த இவர்களைக் கேட்டார்.

''ஆச்சு சார்'' — அரவிந்தனே பதில் சொல்லிவிட்டான்.

மாணவர்கள் மற்றவர்களோடு மணவறைக் கூடத்திற்கு எதிரே போய் அமர்ந்து கொள்ள, பழனியும் அவர்களோடு ஒரு பக்கமாய்ப் போய் உட்கார்ந்து விட்டான்.

முகூர்த்தம் முடிவடைந்தது.

மதியப் பந்தி தொடங்க இன்னும் சிறிது நேர அவகாசம் இருந்தது.

அந்த இடை நேரத்தில் கல்யாணத்திற்கு வந்திருந்த டிப்டி இன்ஸ்பெக்டரோடு அருளப்பர் உரையாடிக்கொண்டிருந்தார்.

பக்கத்தில் சின்னதாய் ஒரு மாணவர் கூட்டம். பழனியும் ஓர் ஓரமாய் நின்றிருந்தான்.

மாணவர் கல்வித் தரம் பற்றி ஏதோ பேச்சு வந்தது.

எத்தனையோ ஏழை மாணவர்களின் கல்வி அவர்கள் பசிக் கொடுமையால் பாதிக்கப்படுவதையும், சத்துணவுத்திட்டத்தால் அந்தக்குறை ஓரளவு சரி செய்யப்பட்டு வருவதையும் இருவரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது தான் யதேச்சையாய்ப் பழனி அருளப்பரின் கண்ணில் பட —

''அடே பழனி! வா இங்கே'' —அழைத்தார்.

பழனி அவர்கள் அருகே வந்தான்.

''இந்தப் பையன் ஓர் ஏழை மாணவன். ஆனால், படிப்பில் மகா கெட்டிக்காரன். எல்லாப் பரீட்சைகளிலும் தொண்ணூறுக்கு மேல்தான். கணக்கில் எப்போதும் நூற்றுக்கு நூறு!''

டிப்டி அவனைக் கிட்டே அழைத்தார்: அன்போடு தட்டிக் கொடுத்தார்.

''இப்படி நன்றாய்ப் படிக்கும் மாணவர்களால்தான் பள்ளிக்கூடத்துக்கே பெருமை சேர்கிறது'' — சொன்னவர் மற்ற மாணவர்களையும் அழைத்து, மார்க் விவரம் கேட்கத் தொடங்கினார்.

சட்டென்று அந்த மாணவர் கூட்டத்தில் சிலர் குறைந்து போயினர். குறிப்பாக ரங்கமணியும் அரவிந்தனும் எங்கு போனார்கள் என்றே தெரியவில்லை!


மதிய விருந்தின் போதும் டிப்டி பழனியைத் தம் பக்கத்திலேயே உட்கார வைத்துக் கொண்டு சாப்பிட்டார்.

ஒரு கல்வி அதிகாரியே தன்னை இவ்வளவு மதிக்கக் காரணம் தன்னுடைய நிலையோ உடையோ அல்ல: படிப்புத் தான் என்பதை அறிந்தபோது, அவன் மிக மகிழ்ந்து போனான்.

வெளியில் வந்து விடைபெறும்போது அந்த அதிகாரி மாணவர்களுக்குச் சொன்னார்: ''வெறும் உடை அலங்காரமும் வீண் பகட்டும் மனிதர்களை உயர்த்தி விடாது. கல்வித் தரம்தான் பிற்காலத்தில் எல்லோருக்கும் பெரிதும் உதவும்; தகப்பனார் சம்பாத்தியத்தில் டாம்பீகமாய் வாழ்வதைவிட சுய சம்பாத்தியத்தில் எளிமையாய் வாழ்வதே பெருமைக்கு உரியது!''

இவ்வளவு நேரமும், அவர் கண்ணிலேயே பட்டுவிடாமல் மறைந்து ஓடிக் கொண்டிருந்த அரவிந்தனுக்கும் ரங்கமணிக்கும் அந்த வார்த்தைகள் அவமானமாய்த் தெரிய —

பழனியின் தாழ்வு மனப்பான்மை அறவே நீங்கி — பெருமை எதில் இருக்கிறது என்று இப்போது எல்லோருக்கும் புரிந்தது!



## சீட்டிலே கேட்ட பாட்டு!

பக்கவாத்தியக்காரர்: அந்தச் சீட்டிலே என்ன பாட்டு பாடச்சொல்லி வந்திருக்குது?

பாகவதர்: தேசியகீதம் பாடச் சொல்லி வந்திருக்குது.

—காரைநகர் முருகு

## பைத்தியத்துடன் பழக்கம்!

கண்ணன்: முரளி, உனக்குப் பைத்தியத்துடன் பேசிப் பழக்கம் உண்டா?

முரளி: இதுவரை இல்லை. இப்போ அரைமணி நேரமாக உன்னோடே பேசினேனே, இதுதான் என் முதல் அனுபவம்.

—லலிதா செல்லப்பா



# அரசர் கேட்ட வரம்

அந்தச் சாமியார் அரண்மனைக்கு வந்ததிலிருந்து அரசன் சதாகாலமும் அவருடனேயே இருந்தான். காலையிலும் மாலையிலும் அவருடன் உலாவப் போவான். தர்பாரில் அரசன் அமர்ந்திருக்கும்போதுகூட அந்தச் சாமியாரும் அரசனுக்குச் சரியாக ஓர் ஆசனத்தில் அமர்ந்திருப்பார்.

ஒரு நாள் அரசன், ''சுவாமி, எனக்கு இத்தனை பெரிய ராஜ்யம் இருக்கிறது. அருமை மனைவி இருக்கிறாள். ஆசைக் குமாரன் இருக்கிறான். ஆனாலும் என் மனத்தில் ஒரு குறை இருக்கிறது!'' என்று ஏக்கத்துடன் கூறினான்.

''அது என்ன சொல். முடியுமானால் நான் அந்தக் குறையைத் தீர்த்து வைக்கிறேன்'' என்றார் சாமியார்.

உடனே, அரசன், ''சுவாமி, எல்லாருடைய மனத்தில் இருப்பதும் எனக்குத் தெளிவாய்த் தெரிய வேண்டும். இந்த வரம் எனக்குத் தாருங்கள்'' என்றான்.

சாமியார் சற்று நேரம் யோசித்துவிட்டு, ''அரசே, அந்த வரம் தருகிறேன். அதன்படி நாளைக் காலையிலிருந்து உனக்கு எல்லோருடைய மனசிலிருக்கும் எண்ணங்களும் தாமாகவே பளிச் பளிச்சென்று தெரியும். ஆனால், ஒரே ஒரு நாளைக்கு மட்டும்தான் இந்த வரம் தருவேன். முதலில் பரீட்சை செய்து பார். அந்த வரம் உனக்கு எப்பொழுதும் வேண்டும் என்றால் என்னிடம் தெரிவி. அப்படியே தருகின்றேன்'' என்று சொன்னார்.

அரசன் சந்தோஷத்தோடு சம்மதித்தான். சாமியார், அரசன் கேட்ட வரத்தைக் கொடுத்துவிட்டுத் தம் விடுதிக்குப் போனார்.

அரசன் தன் அரண்மனைக்குப் போய் மறுநாள் தனக்குக் கிடைக்கப்போகும் அதிசய வரத்தைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். விடியும்வரையில் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. கடைசியில் பொழுது விடிந்தது.

உடனே அரசன் தன் மந்திரியின் மனத்தில் இருக்கும் எண்ணத்தை அறிந்து கொள்ள விரும்பினான்.

என்ன ஆச்சரியம்! சாமியார் கொடுத்த வரத்தின் மகிமையினால் மந்திரியின் மனத்தில் இருக்கும் எண்ணம் அரசனுக்கு நன்றாகத் தெரிந்தது.

'இந்த ராஜா உயிருடன் இருப்பதனால் நமக்கு எவ்வளவு இடைஞ்சலாயிருக்கிறது! ஆகா! ராஜாவைத் தீர்த்து விட்டால் இந்த ராஜ்யம் நம் வசமாகி விடுமே! ராஜகுமாரன் சிறுவன். அவனுக்கு அரசாளும் வயது வரும்வரையில் இந்த ராஜ்யத்தை ஆளும் பொறுப்பு நம் கையில்தான் இருக்கும். தந்திரமாக ராஜகுமாரனைத் தீர்த்துக் கட்டி விட்டால் அப்புறம் நான்தான் இந்த ராஜ்யத்துக்கு ராஜா....!' இப்படித்தான் மந்திரியின் மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது.

அரசனுக்கு இதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. 'பரம யோக்கியன் என்று மந்திரியை நினைத்துக் கொண்டிருந்தோமே, அவன் இவ்வளவு அயோக்கியனா?' என்று நினைத்து அரசன் மிகவும் மனம் வருந்தினான்.

பொழுது நன்றாக விடிந்ததும் மங்கள வாத்திய கோஷங்களுடன் அரசனை எழுப்பும் வாத்தியக்காரன், வாத்தியம் முழங்கத் தொடங்கி விட்டான். மனத்தில் 'அரசன் இறந்து தொலைந்தால் பத்துப் பதினைந்து நாட்களுக்குக் காலையில் இந்த வாத்தியம் வாசிக்கும் தொல்லை இருக்காது. துக்க தினங்கள் முடியும் வரையில் மங்கள வாத்தியத்துக்கு அரண்மனையில் வேலை ஏது?' என்ற எண்ணம்தான் ஓடிக் கொண்டிருந்தது.

அரசனுடைய மனம் திடுக்கிட்டது. அவனுக்கு ஒன்றிலும் மனம் செல்லவில்லை.

சூரியன் உதயமாகி வெகு நேரம் ஆகியும் அரசன் எழுந்து வராததால் அரசனுக்கு உடல் நலம் சரியில்லை என்ற செய்தி அரண்மனை முழுவதும் பரவியது. அரண்மனையைச் சேர்ந்த முக்கியமான பிரமுகர்கள் அனைவரும் அரச அந்தப்புர வாசலில் பெருங் கூட்டமாகக் கூடிவிட்டனர்.

அரண்மனை வைத்தியர் வந்தார்.

''மகாராஜாவின் வைத்தியர் வந்துவிட்டார். அவருக்கு உள்ளே போக வழிவிடுங்கள்'' என்று மந்திரி கூட்டத்தினருக்கு உத்தரவிட்டான்.

''வைத்தியர் வந்திருக்கிறார்!'' என்ற குரல் கேட்டதும், அரசனின் மனம், தானாகவே அந்த வைத்தியரின் மனப்போக்கை அறிய முயன்றது.

அரண்மனை வைத்தியரின் மனத்தில் 'நல்லவேளைதான். அரசனுக்கு உடல் நலம் சரியில்லாமல் இருக்கிறது. மந்திரி மிகவும் ஆவலோடு எதிர்பார்த்த

தருணம் இதுதான். இப்பொழுது விஷ மருந்தைக் கொடுத்து விட்டால், அரசனின் மரணத்தைப் பற்றி யாருமே சந்தேகப்பட மாட்டார்கள். மந்திரியிடம் பரிசு பெறலாம்...' என்ற எண்ணம்தான் இடம் பெற்றிருந்தது.

அரண்மனை வைத்தியன் கொடிய விஷ மாத்திரைகளுடன் அரசனின் படுக்கை அறையை நெருங்கினான். மந்திரியும் மகா யோக்கியன் போல் அவனைப் பின்தொடர்ந்தான். அவர்கள் இருவரும் படுக்கை அறைக் கதவை இலேசாகத் தட்டியதும் அரசனுடைய பயம் அதிகமாகி விட்டது. 'வீல்' என்று கத்திவிட்டு அரசன் அப்படியே மூர்ச்சையாகி விட்டான்.


அப்பொழுது அங்கே வந்த சாமியார், கூட்டத்தை விலக்கிக் கொண்டு கதவைத் தட்டி, ''அரசே, கதவைத் திற. நான்தான்!'' என்று கம்பீரமாகக் குரல் கொடுத்தார்.


அரசன் எழுந்து வந்து கதவைத் திறந்து விட்டு, ''சுவாமி, என்னைக் காப்பாற்றுங்கள். இந்த அரண்மனையில் சேவகம் செய்யும் அனைவரும் வெளியில் நல்லவர்களைப் போல் நடிக்கிறார்கள். எல்லோரும் மிகப் பொல்லாதவர்கள். ஆகா! நினைக்கவே பயமாயிருக்கிறது!'' என்று கதறினான்.

''அரசே! பயப்பட வேண்டாம். ஒவ்வொருவர் மனத்திலும் என்ன எண்ணம் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும்தான் நான் கொடுத்த வரத்தின் மகிமையால் தெரிந்து கொண்டாய். ஆனால், மனிதர்களுக்கெல்லாம் மேலான வல்லமை உடைய கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் மனத்தில் இருக்கும் எண்ணம் என்ன என்பதை நீ அறியவில்லை. அதை யாராலும் அறிந்து கொள்ள முடியாது. கடவுளைத் திடமாக நம்பி, நேர்மையாக நடந்து கொள். ஒவ்வொருவனும் 'நான் அப்படிச் செய்து விடுவேன், இப்படிச் செய்து விடுவேன்' என்றுதான் நினைக்கிறான். ஆனால், நடப்பது வேறாயிருக்கிறது. அதுதான் கடவுளின் எண்ணம். அது இருக்கட்டும், நான் கொடுத்த வரம் உனக்கு எப்போதும் நிரந்தரமாக வேண்டுமா? அல்லது இத்துடன் போதுமா?'' என்று கேட்டார் சாமியார்.

''சுவாமி, எனக்கு அந்த வரம் வேண்டவே வேண்டாம். நீதியும் நேர்மையும் தவறாமல் அரசாண்டு வந்தால், யார் என்னை என்ன செய்து விட முடியும்? சுவாமி இந்த வரத்தின் 'கொடுமையிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று அரசன் சாமியாரை வணங்கினான்.

சாமியார் அவனை ஆசிர்வதித்ததும் அந்த வரத்தின் சக்தி மறைந்தது. அரசன் எப்போதும் போல் ஆனந்தமாயிருந்தான்.






# காற்றில் கற்ற பாடம்

— விஜயா கண்ணன் —

மணி பள்ளிக்கூடத்திற்குச் சைக்கிளில் கிளம்பி விட்டான். வீட்டை விட்டுச் சில அடி தூரம் சென்றவுடனேயே சைக்கிள் டயரில் காற்று இல்லை என்பது தெரிந்தது.

ஒருவேளை பஞ்சராகி இருக்குமோ என்ற சிந்தனையோடு ஆஞ்சநேயர் கோவிலுக்கு எதிரே இருந்த வாடகைச் சைக்கிள் கடைக்குச் சைக்கிளைத் தள்ளிக் கொண்டே சென்றான்.

பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிட்டதால் காற்றை நிறைய அடித்துக் கொண்டு போக முடிவு செய்தான்.

''என்னடா வேணும்?'' என்று சைக்கிள் கடை மீசைக்காரன் அதட்டினான்.

''காற்றடிக்கணும்'' — மணி மெல்லச் சொன்னான்.

''காலங்கார்த்தாலே காத்துக் கேசா? போடா போ... வேற எங்கேயாவது போய் அடிச்சுக்கோ'' மீசைக்காரன் இப்படிச் சொன்னவுடன் மணிக்குக் கோபம் வந்து விட்டது.

''வாடகைச் சைக்கிள் கடை.... காற்று அடிக்கப் பத்துப் பைசா''ன்னு போர்ட் மாட்டியிருக்கீங்க. இப்போ மாட்டேன்னு சொல்றீங்களே'' —மணி கேள்வி கேட்டதும் மீசைக்காரன் எரிமலை ஆகிவிட்டான்.

''டேய் பொடியா, கேவலம், போயும் போயும் உன் பத்துப் பைசா காசை வைச்சுத்தான் இப்ப நான் கட்டற சொந்த வீடு வளருதோ... போ..' போ'' — மீசைக்காரன் கூச்சல் போட்டு மணியை விரட்டினான்.

''இந்தாப் பாருங்கய்யா...காற்றைக் கேவலமாப் பேசாதீங்க. காற்று இல்லேன்னு அறுநூறு ரூபா சைக்கிள் ஓடாது தெரியுமா? காற்று மனுஷனுக்கு ரொம்ப முக்கியம்.'' — மணி தத்துவம் பேச ஆரம்பித்து விட்டான்.

மீசைக்காரன் மணியை அடிக்க வந்து விட்டான்.

ஆனால், மணியை அவன் நெருங்குவதற்குள்... பெரும் பேய்க்காற்று அடிக்க ஆரம்பித்து விட்டது. மணி பக்கத்தில் இருந்த ஒரு வீட்டுக்குள் சைக்கிளோடு தஞ்சம் புகுந்தான்.

சரியான சூறாவளி... நகரத்தையே சில நிமிடங்களில் அலங்கோலப்படுத்தி விட்டது.

சூறாவளி நின்றது. மீசைக்காரனின் கடைச் சைக்கிள் எல்லாம் ரோட்டில் சிதறிக் கிடப்பதையும், மீசைக்காரன் எரிச்சலோடு அவைகளை எடுத்து வைப்பதையும் மணி பார்த்தான்.

யாரோ ஓர் ஆள் மீசைக்காரனிடம் வேகமாக ஓடி வந்தான். வந்தவன் மூச்சு இரைக்கச் சொன்னான்:

''அண்ணே... நீங்க புதுசாக் கட்டுற வீட்டிலே ஒரு பக்கம் பேய்க்காற்றிலே இடிஞ்சு விழுந்திருச்சு!''


மீசைக்காரன், அந்த ஆள் சொன்ன செய்தியைக் கேட்டு அதிர்ச்சியால் சிலை ஆகிவிட்டான்.

மீசைக்காரன் காற்றைக் கேவலமாகப் பேசியதற்கு வாயு புத்திரர் —எதிரே இருக்கும் ஆஞ்சநேயர் அவனுக்குச் சரியான பாடம் கற்பித்து விட்டார்!

# பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்!



இங்கேயுள்ள 10 உயிரினங்களின் படங்களைக் கவனித்துக்கொள்ளுங்கள். கட்டங்களில் விடுபட்ட எழுத்துக்களைப் பூர்த்தி செய்யுங்கள், பார்க்கலாம்! உயிரினங்களின் பெயர்கள், மேலிருந்து கீழாக அல்லது, இடம் வலமாக வரலாம்.



# காணாமல்போன மிருகங்கள்

கீழ்க்கண்ட பழமொழிகள் ஒவ்வொன்றிலும் ஒரு மிருகத்தைக் காணோம்! அது எந்த மிருகம் எனக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து, அதற்காக ஒதுக்கப்பட்ட கோட்டின்மீது நிறுத்துங்கள்:

1. ——— பசித்தாலும் புல் தின்னாது.
2. ஆடு நனைகிறதென்று ——— அழுததாம்.
3. ———க்குத் தெரியுமா கற்பூர வாசனை?
4. பார்த்தால் ———: பாய்ந்தால் புலி!
5. ———இருந்தாலும் ஆயிரம் பொன்: இறந்தாலும் ஆயிரம் பொன்.
6. சூரியனைப் பார்த்து ——— குரைத்ததாம்.
7. ———க்கு இடம் கொடுத்தால், கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்.
8. புலிக்குப் பிறந்தது ——— ஆகுமா?
9. ——— கையில் பூமாலை கொடுத்தது போல்
10. சிவ பூஜையில் ——— புகுந்ததாம்.

இங்கே காணுமற்போன மிருகங்களை மிக எளிதிலே கண்டுபிடித்து விடுவீர்கள். அத்துடன் இன்னொன்றையும் நீங்கள் செய்ய வேண்டும்.

இதேபோல் மிருகங்கள் சம்பந்தப்பட்ட பழமொழிகள் பல நம் நாட்டிலே வழங்கி வருகின்றன. அந்தப் பழமொழிகளையும் எழுதி அனுப்புங்கள். யார் அதிகமாக எழுதி அனுப்புகிறீர்கள் என்று பார்ப்போம். எழுதி அனுப்புபவை பழமொழிகளாக இருக்கட்டும். புதுமொழிகளைப் புகுத்தி விடாதீர்கள்!

விடை: 1. புலி 2. ஓநாய் 3. கழுதை 4. பசு 5. யானை 6. நாய் 7. நரி
8. பூனை 9. குரங்கு 10. கரடி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | ள | வி | | | |
| ர | | | | | |
| ங் | | நா | | | |
| கு | தி | ரை | | | |
| | மி | ■ | ப | ன் | றி |
| க | ங் | கா | ரு | | |
| | கி | ■ | ங் | | |
| | ல | ■ | து | | |
| பா | ம் | பு | | | |
| | | லி | | | |

முன்பக்கப் புதிர் - விடை




**நியூஸ் என்ன?**

''பக்கத்து வீட்டுக்குப் போய் இன்றைய பேப்பர் வாங்கிட்டு வாடா!''

''பேப்பரை எங்கேயோ மறதியா வச்சுட்டாராம்!''

''சரி, சரி! இன்றைய நியூஸ் என்னவென்றாவது கேட்டுண்டு வா!''



லால்பகதூர் சாஸ்திரி



ஜெகதீஸ் சந்திரபோஸ்



மைக்கேல் பாரடே

# இளமையில் இவர்கள்

## அப்பா இல்லாத பிள்ளை

காந்தித் தாத்தா பிறந்த அக்டோபர் மாதம் 2-ஆம் தேதியில் பிறந்தவர் லால் பகதூர் சாஸ்திரி. நேரு மாமாவுக்குப் பிறகு பாரதப் பிரதமராக வந்து எல்லாருடைய பாராட்டையும் பெற்றவர் அவர்.

லால் பகதூர் பிறந்து, 18 மாதங்களானதும், தமது தந்தையை இழந்தார். பிரதமராகிப் பதினெட்டு மாதங்களானதும் பாரதம் இவரையே இழந்தது.

லால் பகதூருக்கு அப்போது ஏழு அல்லது எட்டு வயது இருக்கும். ஒரு நாள், சில பெரிய பையன்கள் சேர்ந்து ஒரு பழத் தோட்டத்துக்குச் சென்றார்கள். எல்லாரும் போகிறார்களே என்று லால் பகதூரும் அவர்களின் பின்னாலே சென்றார்.

அந்தப் பையன்கள் மரங்களில் ஏறிப் பழங்களைப் பறித்துத் தின்று கொண்டிருந்தார்கள். லால் பகதூர் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக்கூடக் கவனிக்கவில்லை. அங்கே ஒரு பக்கத்தில் பூத்திருந்த மலர்களைக் கண்டார். அவற்றின் அழகிலே மயங்கினார். பிறகு ஒரு



பூவைப் பறித்துக் கையில வைத்துக் கொண்டு அழகு பார்த்தார்.

அப்போது 'தொப்' 'தொப்' என்று மரத்திலிருந்து குதிக்கும் சப்தமும், 'தடதட'வென்று ஓடும் சப்தமும் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். தோட்டக்காரர் கையில் தடியுடன் அந்தப் பையன்களைத் துரத்துவதைக் கண்டார்.

எல்லாப் பையன்களும் தப்பி ஓடி விட்டனர். லால் பகதூர் மட்டும் தனியாக அங்கே நின்று கொண்டிருந்தார். அவரைத் தோட்டக்காரர் பிடித்துக் கொண்டார். கன்னத்திலே ஓர் அறை கொடுத்தார். ''பழங்களைத் திருடித் தின்னத்தானே வந்தீர்கள்?'' என்று கோபமாகக் கேட்டார்.

பாவம், லால் பகதூர் நடு நடுங்கினார். கண்களிலிருந்து நீர் வழிந்தது. ''ஐயா, நான் பழம் பறிக்கவில்லை. இந்த ஒரு பூவைத்தான் பறித்தேன்'' என்றார்.

''பொய் சொல்கிறாய்?''

''இல்லை ஐயா. நானோ ஏழை. நான் சின்னக் குழந்தையாக இருக்கும் போதே அப்பா இறந்து விட்டார். 'திருடக் கூடாது; பொய் சொல்லக் கூடாது' என்று என் அம்மா அடிக்கடி சொல்லுவார்கள். என் பேச்சை நம்புங்கள் ஐயா'' என்று கெஞ்சினார்.

தோட்டக்காரருக்கு லால் பகதூர் மீது இரக்கம் ஏற்பட்டது. ''அப்பா இல்லாத பிள்ளை தப்புத் தண்டா செய்யக் கூடாது. அப்பா இருந்தாலும் உனக்குப் புத்தி சொல்வார். தப்புப் பண்ணினால் தடுத்துத் திருத்துவார். உன் அம்மா மனம் கோணாமல் நடந்து கொள்ளணும், சரியா?'' என்று புத்திமதி கூறினார் தோட்டக்காரர். பிறகு, ஒரு மாமரத்திலிருந்து இரண்டு பழங்களைப் பறித்துக் கொடுத்தார்.

இந்த நிகழ்ச்சியை லால் பகதூர் எப்போதும் நினைவில் வைத்திருந்தார். 'எந்தச் சூழ்நிலையிலும் தவறு செய்யக் கூடாது; நல்லவனாகவே இருக்க வேண்டும்' என்ற மன உறுதியுடன் வாழ்ந்தார்.

## வாரத்துக்கு ஒரு ரொட்டி!

டைனமோ கருவியைக் கண்டுபிடித்த மைக்கேல் பாரடே, இங்கிலாந்தில் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்தவர். இவர் சிறுவனாயிருக்கும்போது இங்கிலாந்தில் பெரிய பஞ்சம் ஏற்பட்டது. அந்தப் பஞ்சத்தில் இவருடைய பெற்றோர் வேலை இழந்தனர். பிழைக்க வழியில்லை. பிச்சை எடுத்துப் பிழைத்து வந்தனர். அப்போது ஒரு சமயம் பாரடேக்கு ஒரு ரொட்டி கிடைத்தது. அதை அவர் வைத்துக் கொண்டு ஒரு வாரத்தை எப்படியோ ஓட்டிவிட்டார்!

13 வயதானதும், பாரடே வீடு விடாகச் சென்று பத்திரிகை போடும் வேலையைச் செய்து வந்தார். இவர் கெட்டிக்காரராகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும் இருந்ததால், இவரது எஜமானர் இவருக்குப் புத்தகம் 'பைண்ட்' செய்யும் வேலையைக் கொடுத்தார்.

இவர் வேலை பார்த்த கடையில் பழைய புத்தகங்களை பைண்ட் செய்வதற்காகப் பலர் கொண்டு வந்து கொடுப்பார்கள். அந்தப் புத்தகங்களில் விஞ்ஞானப் புத்தகங்கள் இருந்தால் உடனே இவர் ஆவலாகப் புரட்டிப் பார்ப்பார். இவருடைய எஜமானர் இவரது ஆர்வத்தை அறிந்



தார். ஓய்வு நேரத்தில் அந்த விஞ்ஞானப் புத்தகங்களைப் படிக்க அனுமதி கொடுத்தார்.

விஞ்ஞான அறிவை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டார், பாரடே. அந்த ஊரிலே எங்காவது விஞ்ஞானச் சொற்பொழிவு நடந்தால் உடனே அதற்குச் சென்று விடுவார். அப்படிச் செல்லும்போது வெறும் கையுடன் செல்ல மாட்டார்; ஒரு நோட்டுப் புத்தகத்தையும் எடுத்துச் செல்வார். அதில் அந்தச் சொற்பொழிவின் முக்கியமான விவரங்களைக் குறித்துக்கொள்வார்.

வீட்டுக்கு வந்ததும் விஞ்ஞானச் சொற்பொழிவிலே கேட்ட சில சோதனைகளைச் செய்து பார்ப்பார். அந்தச் சோதனைகளில் தெரிந்து கொண்டவற்றையும் அந்த நோட்டிலே குறித்து வைப்பார்.

ஒரு சமயம் லண்டன் நகரிலே பிரபல விஞ்ஞானி ஹம்ப்ரி டேவி என்பவர் நடத்திய சொற்பொழிவைக் கேட்டார். சுரங்கங்களிலே பயன்படுத்தப்படும் பாதுகாப்பு விளக்கைக் கண்டு பிடித்து, ஆயிரக் கணக்கான உயிர்களைக் காப்பாற்றியவர் அவர். சொற்பொழிவு முடிந்ததும் பாரடே டேவியைச் சந்தித்தார். தம்முடைய நோட்டைக் காட்டினார்.

பாரடேயின் ஆர்வத்தையும் விஞ்ஞான அறிவையும் கண்ட டேவி, பாரடேயைத் தம்முடன் அழைத்துச்சென்று தமக்கு உதவியாளராக வைத்துக் கொண்டார்.

## கேள்வி மேல் கேள்வி!

''பகலில் மட்டும்தான் சூரியன் தெரிகிறது. இரவில் தெரியவில்லையே, ஏன்?''

''விதையிலிருந்து செடி முளைக்கிறதே, எப்படி?''

—இந்த மாதிரி இரவு சாப்பிட்டபிறகு அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு கேள்வி மேல் கேள்வி போடுவார் சிறிய வயதில் ஜகதீச சந்திர போஸ்.

நம்மைப் போலவே செடி கொடிகளுக்கும் உயிருண்டு; உணர்ச்சி உண்டு என்ற உண்மையை உலகுக்கு அறிவித்து உலகப் புகழ் பெற்றவர் அவர்.

அவருடைய அப்பா வங்காளத்தில் பரித்பூர் என்னுமிடத்தில் நீதிபதியாக இருந்தார். அவர், பலவிதமான வழக்குகளையும் கேட்டுத் தீர்ப்பு வழங்கி, அலுத்துக் களைத்து வீட்டுக்கு வருவார். அவரை இரவிலே தூங்க விடாமல் கேள்வி மேல் கேள்வி கேட்பார் ஜகதீசர். ஆனாலும் அப்பா கோபப்பட மாட்டார். தன் பிள்ளை கேட்கும் கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் அளிப்பார். சில கேள்விகளுக்குப் பதில் தெரியா விட்டால், ''எனக்கும் தெரியவில்லை. நானே தெரிந்து வந்து சொல்கிறேன்'' என்பார். மறு நாள் மறக்காமல் நூலகத்துக்குச் சென்று அல்லது அதைப் பற்றி அறிந்த நண்பர்



களிடம் தெரிந்து கொண்டுவந்து, அன்று இரவு மகனுக்குக் கூறுவார்.

அந்தக் காலத்திலே வசதியுள்ளவர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிக்கே அனுப்பி வந்தார்கள். அதைப் பெரிய கௌரவம் என்று நினைந்தார்கள். ஆனால், ஜகதீசரின் அப்பா அவரை ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பவில்லை. தாய்மொழிப் பள்ளிக்கே அனுப்பினார். ''என்ன இது! நீதிபதியின் பிள்ளை இந்தப் பள்ளிக்குப் போகலாமா?'' என்று பலர் கேட்டனர்.

''ஆரம்ப காலத்தில் தாய் மொழி மூலமே கல்வி கற்க வேண்டும். பிறகு ஆங்கிலம் கற்கலாம்'' என்று அவர் உறுதியாகக் கூறிவிட்டார்.

ஜகதீசரின் பள்ளியிலே ஆசிரியராயிருந்த ஒருவர், ''பிள்ளைகள் படிப்பில்தான் கவனம் செலுத்த வேண்டும். விளையாட்டில் நேரத்தைச் செலவிடக் கூடாது. அது வீண்'' என்று அடிக்கடி கூறுவார். எந்தப் பையனாவது தெருவிலே விளையாடுவதைப் பார்த்தால், உடனே கூப்பிட்டுக் கண்டிப்பார்.

ஜகதீசரும் அவருடைய நண்பர்கள் சிலரும் கிரிக்கெட் விளையாட ஆசைப்பட்டார்கள். ஆகையால், அந்த ஆசிரியர் வராத இடமாகப் பார்த்து, அங்கே சென்று விளையாடுவார்கள். ''ஒருவேளை இங்கேயும் அவர் வந்து விட்டால்...?'' என்ற பயம் இருந்தது. அதனால் அவர்கள் நான்கு புறமும் மாணவர்களைக் காவல் வைத்துவிட்டு ஆடுவார்கள்.

ஒரு நாள் அந்த ஆசிரியர் அங்கும் வந்து விட்டார். ஆனால், அவர் தூரத்தில் வரும்போதே காவல் புரிந்த ஒரு மாணவன் பார்த்து விட்டான். உடனே ஓடிச் சென்று தகவல் கொடுத்தான். மறு விநாடி, அவர்கள் விளையாட்டுக் கருவிகளை எடுத்துக் கொண்டு எதிர்த் திசையில் ஓடினார்கள். அங்கிருந்த ஓர் ஓடைக் கரையில் மணலிலே புதைத்து விட்டு ஒளிந்து கொண்டார்கள்.

ஆசிரியரால் கண்டு பிடிக்க முடியவில்லை. பேசாமல் திரும்பிப் போய் விட்டார்.

மாணவர்கள் விளையாடுவது தவறு என்று அக்காலத்தில் அந்த ஆசிரியர் கருதினார். ஆனால் இக்காலத்திலோ....?

''எல்லா மாணவர்களும் படிப்போடு விளையாட்டிலும் ஈடுபட வேண்டும், சிறந்த விளையாட்டு வீரர்களாகத் திகழ வேண்டும்' என்று ஆசிரியர்கள் வற்புறுத்துகிறார்கள்.



## உலகிலுள்ள குழந்தைகள்

இந்த உலகில் 15 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று தெரியுமா?

சுமார் 150 கோடி!

ஆம், 1981ம் ஆண்டு எடுத்த கணக்குப்படி உலகில் உள்ள மொத்த மக்கள் தொகை 450 கோடியே 80 லட்சம். இவர்களில் 15 வயதுக்கு உட்பட்டவர்கள் மூன்றில் ஒரு பங்கு. 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் சுமார் 27 கோடி!

* * *


## சிங்கம் ஒரு சோம்பேறி

சிங்கத்திற்குப் பல சிறப்புக்கள் உண்டு. கம்பீரம், வலிமை, அஞ்சாமை, இப்படிப் பல குணங்கள் இருந்தாலும் அது ஒரு பெரிய சோம்பேறி! எப்போதும் படுத்துக் கொண்டே இருக்கும். சுறுசுறுப்பாக அது இருப்பது எப்போது தெரியுமா? இரை தேடும் சில மணி நேரத்தில்தான்!



# ஷட்டில் பாட்மிண்டன்

குண்டுமணி



பூப்பந்தாட்டம் என்றதும் பெண்களின் விளையாட்டுத்தானே என்று கருதுவீர்கள். ஆனால் ஆடவர்கள், இளைஞர்கள் பூப்பந்தை அடித்து, நொறுக்கி விளையாட்டுக்கு மவுசும், பெருமையும் தேடித் தருகிறார்கள். பூப்பந்தாட்டத்தில் தனியர், இரட்டையர், ஐவர் ஆட்டங்கள் உண்டு. தமிழ் நாட்டில் பூப்பந்தாட்டம் மிகப் பிரபலமாகி யிருக்கிறது. நீங்கள் பார்த்து ரசித்து மகிழ்ந்த விளையாட்டு பூப்பந்தாட்டம். ஷட்டில் பாட்மிண்டன் என்பது இன்று வட நாட்டிலும், சென்னையிலும் பிரபலமாகி வருகிறது. இந்த நூதன விளையாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ளலாமா?

ஷட்டில் பாட்மிண்டன் அவுட்டோரிலும் இண்டோரிலும் ஆடக் கூடிய விளையாட்டு. ஷட்டில் பாட்மிண்டனுக்குத் தரை மரப் பலகையிலானது. ஷட்டில் பாட்மிண்டன் மைதானத்துக்குக் கோடுகள் வெள்ளையிலோ, மஞ்சளிலோ போடப் பட்டிருக்கும். ஷட்டில் பாட்மிண்டன் மட்டையும், ஷட்டில் காக் பந்தும் இருந்தால் போதும். ஷட்டில் காக் பந்து துள்ளாது. ஷட்டில் காக் பந்து காற்றில் மிதந்து வரும்போது அதனைத் தாக்கி அடிக்க வேண்டும். ஆட்டம் விருவிருப்புடன் இருக்கும். ஷட்டில் காக் பந்திலுள்ள வால் பறக்க ஏதுவாக அமைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆட்டத்தினைச் சுறுசுறுப்புடனும் மிகுந்த கவனத்துடனும் ஆடவேண்டும்.

பாட்மிண்டன் இந்தியாவில் முதலில் ஆடப்பட்ட விளையாட்டு என்றும் இந்தியாவில் அதற்கு 'பூனா' என்ற பெயர் உண்டு என்றும் கூறுவார்கள். ஆங்கிலேய ராணுவ அதிகாரிகள் இந்த விளையாட்டை 1860ல் இங்கிலாந்து நாட்டுக்குக் குடியேற்றி யிருக்கிறார்கள். ப்யூபோர்ட் கோமகன் ஷட்டில்காக் பாட்மிண்டனை ஆங்கில சமூகத்துக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். க்ளொசெஸ்டரிலுள்ள பாட்மிண்டன் என்ற ஊரில் அறிமுகப் படுத்தப் பட்டதால் 'பாட்மிண்டன்' என்ற நாமகரணமாகிவிட்டது.

1887ம் வருஷம் இங்கிலாந்தில் உள்ள பாத் பாட்மிண்டன் கிளப் இந்த அற்புதமான ஆட்டத்துக்குரிய சட்ட திட்டங்களை உருவாக்கியது. ஷட்டில் பாட்மிண்டன் விளையாட்டில் தலை சிறந்த ஆட்டக்காரர்கள் இந்தியா, இந்தோனேஷியா, மலேஷியா, தாய்லாந்து, அமெரிக்கா நாடுகளில் இருக்கிறார்கள்.

1934ம் வருஷம் சர்வதேச பாட்மிண்டன் கழகம் தொடங்கப்பட்டு ஒன்பது தேசங்களில் தேசியப் போட்டிகள் நடைபெற்றன. ஆஸ்திரேலியா, டென்மார்க், இந்தியா, மலேயா, நார்வே, ஸ்வீடன், அமெரிக்கா, மெக்ஸிகோ, நெதர்லாண்ட்ஸ் ஆகிய ஒன்

பது நாடுகளே தேசியப் போட்டிகளை நடத்தின. 1960ம் வருஷத்துக்குள் நாற்பது தேசங்கள் ஷட்டில் பாட்மிண்டனில் சேர்ந்ததோடு, பெடரேஷனுடனும் இணைந்தன.

சர்வதேசக் குழுக்கள் மூன்று வருஷங்களுக்கொரு முறை ஆண்கள், பெண்களுக்கான சாம்பியன் பட்டங்களைப் பெறப் போட்டியிடத் தொடங்கின. ஒவ்வொரு தேசக் குழுவிலும் நாலு அல்லது ஆறு ஆட்டக்காரர்கள் இறுதிப் போட்டியில் பங்கேற்றார்கள்.

மலேயா தேசமே முதன் முதலில் உலக பாட்மிண்டன் போட்டியில் தாமஸ் கோப்பையைப் பெற்றது.

1956ம் வருஷம் ஆங்கிலேய பாட்மிண்டன் நட்சத்திரம் ஸ்ரீமதி எச். எஸ். உபர் பெண்களுக்கான போட்டிக்கு ஒரு கோப்பையைத் தர முன் வந்தார். 1957ம் வருஷம் நடைபெற்ற முதல் பெண்கள் போட்டியில் அமெரிக்காவே வெற்றி பெற்றது.

ஆட்டம் தொடங்கியதும் வலது பாதி மைதானத்திலிருந்து எதிர்க் குழுவின் கோணப் பக்கமாக பந்தை 'சர்வ்' செய்யவேண்டும். எதிர்க் குழு பந்தை எடுக்கத் தவறினால் பந்தை 'சர்வ்' செய்யும் குழு பாயிண்ட் எடுத்து சர்வீஸைத் தொடர்ந்து நடத்தும். சர்வீஸ் போடும் குழு தவறிழைத்தால், பாயிண்ட் சேர்க்கப்படாமல் எதிர்க் குழு 'சர்வீஸ்' போடும் தகுதியைப் பெறும். ஒவ்வொரு ஆட்ட முடிவிலும் குழுவினர் ஒரு பக்கமிருந்து மறு பக்கம் மாறிக் கொள்வர்.

ஷட்டில் பாட்மிண்டனில் எண்ணிக்கை 15தான். மூன்று பந்தயங்களில் இரண்டை வென்று விட்டால் அந்தக் குழு வெற்றிக் குழுவாகக் கருதப்படும். இரண்டு பந்தயங்களில் ஆளுக்கொரு ஆட்டம் வெற்றி பெற்றால் மூன்றாவது ஆட்டமே தலைவிதியை நிர்ணயிக்கும். பெண்களுக்கான போட்டியில் எண்ணிக்கை 11தான்.

பந்தை அடிக்கும்போது ஆட்டக்காரரின் பாதங்கள் மைதானக் கோட்டை மிதித்துக்கொண்டு இருக்கக் கூடாது.

ஷட்டில் பாட்மிண்டனில் அடிப்படை ஸ்ட்ரோக்குகள்: சர்வீஸ், 'ஸ்மாஷ்' டிராப் ஷாட், போர்ஹண்ட் டிரைவ், பேக்ஹாண்ட் டிரைவ் ஆகியவை.

ஷட்டில் பாட்மிண்டன் மைதானம் 20 அடி அகலமும், 44 அடி நீளமும் கொண்டது!

1975ம் வருஷம் இந்தோனேஷியா முதல் தடவையாக தாமஸ் கோப்பையையும், உபர் கோப்பையையும் வென்று தனிப் புகழ் பெற்றது. உலக ஆடவர் சாம்பியன், பெண்கள் சாம்பியன் பட்டங்கள் இரண்டுமே பெற்றது இந்தோனேஷியா.

ஷட்டில் பாட்மிண்டனில் அம்பயர் தான் ஆட்டத்தை நிர்வகிப்பவர். அம்பயர், சர்வீஸ் நீதிபதிகளையும் லைன்ஸ் மன்களையும் கொண்டு ஆட்டத்தைச் செவ்வனே நடத்திச் செல்வார்.

ஷட்டில் பாட்மிண்டன் வலை 5 அடி 1 அங்குலம் உயரத்தில் இருக்கும்.

1949-55 ஆண்டுகளில் மலேஷியா தாமஸ் கோப்பையைப் பெறுவதற்கு வங் பெங் ஸூனுக்குப் பெரும் பங்கு உண்டு.

வெம்ப்ளியில் நடைபெற்ற ஆல்-இங்கிலாந்து ஷட்டில் பாட்மிண்டன் போட்டியில் சீனாவைச் சேர்ந்த லூவான் ஜின் வெற்றி பெற்றிருக்கிறார். இவரிடம் தோல்வி பெற்றவர் டென்மார்க்கைச் சேர்ந்த மார்ட்டன்-ப்ராஸ்ட் ஹான்சன். சீனாவுக்குப் புகழ் தேடித் தந்த லூவான் ஜின் முதல் தடவையாக இந்த வெற்றியைச் சம்பாதித்து ஆயிரம் பவுன் பரிசாகப் பெற்றார்.





வெற்றிவேல் வீரவேல் 4
கதை: சுகிசிவம் படம்: வினு
ஓங்காரமான பிரணவப் பொருள் அறியாத பிரமனை, முருகன் சிறையிட்டார். சிவபெருமான் விடுதலை செய்து "நீ அதன் பொருளை அறிவாயா?" என்று முருகனைக் கேட்டார்.
ஆ! அதன் பொருளா? கேட்கும் முறையில் கேட்டால் சொல்லும் முறையில் சொல்லுவோம்.
அதென்ன... கேட்கும் முறை?
முன்பு ஒரு சமயம் ஒருவரும் அறியா வண்ணம் பார்வதி தேவிக்குத் தாங்கள் உபதேசம் செய்த போது அன்னை எப்படிக் கேட்டாரோ அப்படிக் கேளுங்கள்.
புரியவில்லையே!
நீர் சீடராக... நாம் குருவாக...
ஒருவரும் அறியாமல் பார்வதிக்குச் சிவன் உபதேசம் செய்தது முருகனுக்கு எப்படித் தெரிந்தது? தேவர்கள் திகைத்தனர். சிவனே முருகன். முருகனே சிவன் என்னும் உண்மையைச் சிலர் உணர்ந்தனர்.
சிவபெருமான் மனம் குளிர, பிரணவ உபதேசம் நிகழ்ந்தது.



எழுத்துக்களில் 'அ' என்றதும் வாய் திறக்கும். 'உ' என்றதும் குவியும். 'ம்' என்றதும் வாய் மூடிக்கொள்ளும். அ, உ, ம் என்ற மூன்று எழுத்துக்களின் சேர்க்கையான ஓம் என்னும் எழுத்து, படைத்தல், காத்தல், அழித்தல் இரகசியத்தை விளக்கும்.
காலம் கடந்தது. சூரபன்மன் என்ற அசுரனின் கொடுமை தாளாத தேவர்கள் சிவனை வேண்டினர்.
பெருமானே! குறை தீர்த்தருள வேண்டும்.
சக்தி! தேவர் குறை தீர்க்கு மகனுக்கு வேல் கொடு. சூரனை வீழ்த்தி வரட்டும்.
வெற்றி வேல்! வீரவேல்!
வெல்லுவது வேல். அறிவும் அப்படித்தான். அறிவு, கூர்மையாக, அகலமாக, ஆழமாக இருக்க வேண்டும். வேலைமட்டும் வணங்கலாம். ஆனால் வேல் இன்றி முருகனை வணங்கமாட்டார்கள்.
தேவர் படை கிளம்பியது. பூதகணங்கள் புறப்பட்டன. முருகனது மயில்வேகத் தேரைக் காற்றுக் கடவுள் செலுத்தினர்.
சூரபன்மன் ஒழிந்தான்.


நாரதர் எதிர்ப்பட்டு, தொலைவில் உள்ள மலைபற்றி கூறினார்.
சுவாமி! அது கிரவுஞ்ச மலை மாயையில் வல்லது. அதன் பின்புறம் சூரபன்மனது தம்பி தாரகாசுரன் இருப்பான்.
வீரபாகு! நீ போர்செய்து பார், ம்... புறப்படு.
வீரபாகு கடுமையாகப் போரிட்டார். தாங்க முடியாது ஓடிய தாரகாசுரன் கிரவுஞ்ச மலையின் மாயா வழியில் புகுந்தான்.
தாரகாசுரனைத் தொடர்ந்த வீரபாகுவும் இலட்சத்து ஒன்பது வீரர்களும் மலையின் மாயையால் மயங்கி வீழ்ந்தனர்.
விவரமறிந்து தாரகாசுரன் சினம் கொண்டான்.
ஆ! போரா? உலர்ந்த புற்காட்டில் தீயைப் போல அவர்கள் மீது பாய்வோம்.
முருகனே போர்க்களம் வந்தான். எதிரியையும் அவன் அழகு கவர்ந்தது.
குழந்தாய், இந்திரன் திருமால் இவர்கள் எம் பகைவர்கள். நமக்குள் பகையில்லையே!
அசுரனே! எனக்கு எவரும் பகையில்லை. ஆனால் என் பக்தர்களை யார் பகைத்தாலும், அவர்கள் என் பகைவர்களாகிறார்கள்.


ஆஹா! ஆறு நிலவு போன்ற ஆறு முகங்கள். அழகான குண்டலங்கள். விழிகளில் கருணை. தண்டை, சிலம்பு கொஞ்சும் மழலைத் திருவடி.. குழந்தாய், திரும்பிவிடு.
வீண் பேச்சு ஏன்? போரைத் தொடங்கு!
தாரகாசுரனின் நாண் ஒலிக்க தேவர்கள் பயந்தனர்!
ஆ! என்ன தைரியம். இந்த நாண் ஒலிக்கு முன் நிற்க முடியுமா உன்னால்.
சிரித்தபடி செலுத்திய அம்பு தாரகன் வில்லை இரு துண்டாக்க...
வில் இருப்பதால் தானே இந்த ஒலி! இனி என்ன செய்வாய்?



# எறும்பு கேட்ட வரம்

மைதிலி வேணுகோபால்

அடர்ந்த மரங்கள் சூழ்ந்த சோலையிலே தேன் சிந்தும் மாமரங்கள். அதன் கீழே ஒரு பெரிய பாம்புப் புற்று. கிளையில் உட்கார்ந்திருந்த ஒரு சிற்றெறும்பு, சிந்தியிருந்த தேனை, மெதுவாகக் குடித்துக் கொண்டிருந்தது. 'சரசர' வென்று ஏதோ சத்தம் கேட்கவே, குனிந்து பார்த்தது. புற்றுக்குள், நாகப்பாம்பு நுழைந்து கொண்டிருந்தது.

''நாகப்பாம்பே! சௌக்கியமா?''— என்று கேட்டது சிற்றெறும்பு.

''சௌக்கியத்துக்கு என்ன? இப்போது கூட, அங்கே வயலில் உழுது கொண்டிருந்த ஒரு குடியானவனைக் கடித்தேன். கதை முடிந்தது...'' என்றது கர்வமாக.

''ஐயையோ!'' என்று அலறியது எறும்பு.

''பார், எனக்கு எத்தனை சக்தி! 'பாம்பு என்றால், படையும் நடுங்கும்' என்று கேள்விப்பட்டிருக்கிறாயல்லவா?'' —குரலில் கர்வம் தொனித்தது. ''யானையைக் கடிப்பேன், புலியைக் கடிப்பேன், ஏன், சிங்கத்தைக்கூடக் கடிப்பேனே..!''

''அது சரி! உனக்கு எப்படி இவ்வளவு சக்தி கிடைத்தது? எனக்குக் கொஞ்சம் சொல்லேன்...'' என்று கெஞ்சியது எறும்பு.

''என் முன்னோர்கள், கணக்கில்லாத வருஷங்கள் தவம் செய்து, கடவுளிடம் இருந்து, இவ்வரத்தைப் பெற்றனர்.... உன்னைப் போலவா? சிந்தியதைச் சாப்பிட்டே நீயும் காலந்தள்ளுகிறாய்...'' என்று எறும்பைக் கேலி செய்தது.

எறும்பு, ஏகாந்தமான ஓர் இடத்தைத் தேடிச் சென்றது. நிஷ்டையில் அமர்ந்தது. எத்தனை வருஷங்கள், கழிந்தனவோ, தெரியவில்லை.

''பக்தனே! என்ன வரம் வேண்டும். கேள்''— என்று ஒரு குரல் கேட்டது. எறும்பு கண்ணைத் திறந்து பார்த்தது. பார்த்தால், படைப்புக் கடவுளாகிய பிரம்மாவும் அவரது துணைவியான கலைமகளும் நின்று கொண்டிருந்தனர்!

எறும்பு, அவர்களை வணங்கவில்லை. வரத்தைக் கேட்க, அத்தனை அவசரம்!

''ஐயனே! நான் கடித்தால், உடனே இறக்க வேண்டும்'' —

எறும்பு வரத்தைக் கேட்டதும் நான்முகன் திடுக்கிட்டார். ''என்ன! ஒரு சின்னஞ்சிறு எறும்புக்கு இப்படியொரு பேராசையா?'' சமாளித்துக்கொண்ட கலைமகள், நான்முகனைப் பார்த்துப் புன்னகையுடன் தலையசைத்தாள்.

உடனே பிரம்மாவும், ''தந்தோம் வரத்தை....,' என்றவாறு, மறைந்தனர். எறும்புக்கு நிலை கொள்ளாத மகிழ்ச்சி. தானும் இனி பாம்புக்குச் சமமாகி விட்டோம். சிங்கத்தைக் கூடக் கடிக்கலாம் – என்று அவசரமாக, பெற்ற வரத்தை, பரிசோதித்துப் பார்க்க எண்ணியது.

ஒரு வழிப்போக்கரின் குடும்பம், அந்த மரத்தடியில் உட்கார்ந்திருந்தது. ஸ்தல யாத்திரை போகிறார்கள் போலும்! எல்லோரும் மொட்டையடித்துக் கொண்டிருந்தனர். நடுத்தர வயதுக்காரர், அவரது வயதான பெற்றோர், அவரது மனைவி, குழந்தைகள். ''சரி! இவனைக் கடித்துப் பார்க்கலாம். எல்லோரும் கதறி அழுவார்கள். குடும்பமே நாசமாகிப் போகும்'' என்று, அவன் இடக்கையில் மெதுவாக ஏறி, 'சுருக்கென' நன்றாகக் கடித்தது.

''ஆஹா! மயங்கி விழப் போகிறான். கண்கள் சொருக, வாயில் நுரைதள்ள, உடம்பு நீலநிறமாகி, சில்லிட்டு...என்னவென்று புரிந்து கொள்வதற்குள் ஆள் யமலோகம் போய்விடுவான்...'' என்று காத்திருந்தது.

''ஹா!'' என்றவன், மெதுவாக வலக்கை, ஆட்காட்டி விரலால், அந்த எறும்பைத் தேய்த்தான். எறும்பு இறந்தது.

தன்னை இழுத்துச் சென்ற யமகிங்கரர்களைக் கெஞ்சிக் கேட்டு, விசேஷச் சலுகை பெற்று, பிரம்ம லோகத்துக்குள் நுழைந்தது எறும்பு.

''அநீதி அநீதி! அநியாயம்!'' என்று கத்தியது. கலைமகளின் வீணை இசையைக் கேட்டுக் கொண்டிருந்த பிரமன் நிமிர்ந்து பார்த்தார்.

''ஓ! நீயா! வா வா. என்ன விஷயம்? வரம் பெற்றுக் கொண்டாயே! நன்றாக வேலை செய்கிறதா, நீ பெற்ற வரம்?'' என்றார். குரலில், குறும்பு இழைந்தோடியது.

''அதைத்தான் அநீதி என்கிறேன். என்னை நன்றாக ஏமாற்றி விட்டீர்கள். நான் கேட்ட வரம் என்ன, நீங்கள் கொடுத்த வரமென்ன?''

''இல்லையே! எறும்பே! நன்றாகச் சிந்தித்துப் பார். நீ கேட்ட வரத்தைத் தான் கொடுத்தோம். நீ என்ன கேட்டாய்? ஞாபகப் படுத்திப் பார். நான் கடித்தால், இறக்க வேண்டும்... என்றாய்...'' என்றாள் கலைமகள்.

''நான் கடித்தால், நானா இறக்க வேண்டும்! நான் கடித்தால், உடனே கடிபட்டவனல்லவா இறக்க வேண்டும்? நான் ஒருவனைக் கடித்தேன். அவன், வெகு அலட்சியமாய், விரலால் தேய்த்து என்னைக் கொல்ல, யமதூதர்கள் என்னை இழுத்துச் செல்லும் வழியில், நியாயம் கேட்க வந்துள்ளேன். இந்த அநியாயத்துக்கு நீங்கள், பதில் சொல்லியே தீர வேணும்...'' மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க, எறும்பு இரைந்து முறையிட்டது.

''இத்தனூண்டு எறும்பு நீ. உனக்கு இத்தனை பேராசையா? மற்றவர்களை இம்சிக்க எண்ணலாமா? புலியைப் பார்த்து, பூனை சூடு போட்டுக் கொள்வதா? படைத்தவனையே, கேலி செய்வது போலல்லவா இருக்கிறது இந்தக் கூற்று? யார் யாருக்கு என்னென்ன சக்திகள் கொடுக்க வேண்டும், யார் யாருக்கு என்னென்ன வேலைகள், அவற்றின் பலாபலன்கள் போன்ற எல்லாவற்றையும், நன்றாகத்தீர ஆலோசித்துத்தான் படைக்கிறார், என் கணவர். இதை மாற்றவே முடியாது. உன் கர்வத்தையும், பேராசையையும் அழிக்க எண்ணி, வேண்டுமென்றே, நான்தான், இப்படியொரு வரம் — அதாவது தெளிவில்லாது கேட்க வைத்துக் குழப்பினேன். இனியாவது உன் இனத்தவர் புத்தியோடு பிழைத்துப் போகட்டும். எந்த எறும்பு யாரைக் கடித்தாலும், அதற்குத்தான் ஆபத்து! வேறு வழியே கிடையாது...'' என்று நிறுத்தினாள், கலைமகள்.

எறும்புக்கு அழுகை பீறிட்டுவர, கண்ணீருடன், ''என்னை மன்னித்து விடுங்கள்.. புத்தி கெட்டுப்போய், தவத்தை வீணாக்கி விட்டேன்...'' என்று, அவர்களை வணங்கிவிட்டு, யமகிங்கரர்களுடன் புறப்பட்டது.


### காரணம் என்ன?

அம்மா: குழந்தையை ஏன் இப்படிப் போட்டு அடிக்கிறீங்க?

அப்பா: ரெண்டாங்கிளாஸ் படிக்கிற பொடிப்பயல், ஏண்டா பெயில் ஆயிட்டாய்னு கேட்டால் 'கம்ப்யூட்டர் மிஸ்டேக்' என்கிறான்.

—கீழை அ. கதிர்வேல்





### என்ன தெரிகிறது?

ஆசிரியர்: அந்தக்காலத்துப்பெண்கள் புலியை முறத்தால் அடித்து விரட்டினார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது?

மாணவன்: அந்தக் காலத்து முறம் ரொம்ப வலுவுள்ளது என்பது தெரிகிறது, சார்.

—ஜி. சுந்தரராஜன்.

# கெட்டிக்காரக் குட்டித் தவளை

டாக்டர். என். ஸ்ரீதரன்



இனிமையான காலை நேரம். பூத்துக் குலுங்கும் மலர்த் தோட்டம். ஒரு குட்டித் தவளை தோட்டத்துக்குள் நுழைந்தது. அந்தத் தோட்டம் அதற்குப் பிடித்து விட்டது. நடுவேயிருந்த சிறு குளத்தில் குளித்துவிட்டுத் தவளை தோட்டத்தைச் சுற்றி வந்தது. ஒவ்வொரு பூவையும் உற்றுப் பார்த்து மகிழ்ந்தது.

திடீரென்று யாரோ அதன் பின்னங் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டது போலிருந்தது. ஒன்றும் புரியாமல் தவளை யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் தரையிலிருந்து நூறடி தூரத்துக்குமேல் வந்து விட்டதை அறிந்து கொண்டது.

தவளை தன் தலையைத் தூக்கிப் பார்த்தது. அதற்கு மூச்சு நின்றுவிடும் போலாகி விட்டது. ஏன் தெரியுமா? அதை ஒரு காகம் தூக்கிக் கொண்டு பறந்து கொண்டிருந்தது! தவளை மிகவும் பயந்து போய் விட்டது. காகம் தன்னை விழுங்கிவிடுமே என்று நடுங்கியது. அதற்கு அப்பாத் தவளையின் ஞாபகம் வந்தது. அப்பா கூறிய புத்திமதியும் ஞாபகத்துக்கு வந்தது.

அப்பாத்தவளை ஒரு முறை சொன்னது: ''எல்லாரும் நம்மைக் கஷ்டப் படுத்துகிறார்கள். இதனால், தவளைகளாகிய நாம் எல்லோரிடமும் பயந்து கொண்டே வாழ வேண்டியிருக்கிறது. ஆனால், நாம் கஷ்டம் வரும் போதுதான் கலங்காமல் இருக்க வேண்டும். அந்தச் சமயம்தான் தைரியம் தேவை. அப்போது தைரியமாக இருந்தால் மனத்தில் குழப்பம் ஏற்படாது. கஷ்டத்திலிருந்து தப்புவதற்கு வழி பிறக்கும்.''

தவளை தன்னுடைய அப்பா கூறிய படியே தைரியத்தை வரவழைத்துக் கொண்டது. காகத்திடமிருந்து எப்படித் தப்புவது என்று யோசிக்க ஆரம்பித்தது. இதற்குள் காகம் ஒரு வேப்பமரக் கிளையில் வந்து தங்கியது. உடனே தவளை சிரித்தது.

காகம் கேட்டது: ''அற்பத் தவளையே, சாகப் போகும் சமயத்தில் சிரிப்பு என்ன வேண்டியிருக்கிறது?''

தவளை பதில் கூறியது: ''உன் முட்டாள்தனத்தை எண்ணிச் சிரிக்கிறேன். இந்த மரத்தில்தான் என் தாத்தா இருக்கிறார். அவர் என்னைவிட நூறு மடங்கு பெரிய உருவம் உடையவர். உன்னைப் பிடித்துச் சட்னியாக்கி விடுவார்.''

காகம் பயந்து போய் விட்டது. அது மறுபடியும் தவளையைத் தூக்கிக் கொண்டு பறந்தது. சிறிது நேரம் கழிந்து ஒரு மாமரத்தின் கிளையில் வந்து உட்கார்ந்தது. தவளை மீண்டும் பலமாகச் சிரித்தது. காகம் கேட்டது: ''எதற்காகப் பைத்தியம் போல் சிரிக்கிறாய்? உன்னைச் சாப்பிடப் போகிறேன் பார்.''

தவளை உள்ளூற நடுங்கினாலும் வீரத்துடன் பேசிற்று. ''இந்த மரத்தில்தான் என் அப்பா இருக்கிறார். அவருடைய உருவம் என்னைவிட ஆயிரம் மடங்கு பெரியது. உன் இறக்கைகளையும் சேர்த்து உன்னை விழுங்கி விடுவார்.'',

காகம் பயத்துடன் தவளையைத் தூக்கிக் கொண்டு அங்கிருந்து பறந்தது. 'எங்கே உட்கார்ந்து கொண்டு இந்தத் தவளையைச் சாப்பிடுவது? எங்கே போனாலும் இதனுடைய சொந்தக் காரர்கள் அங்கே உண்டு போலிருக் கிறதே?' என்று காகம் யோசித்தது.

வழியில் ஒரு கிணறு தென்பட்டது. காகம் அதன் மேடையில் வந்து அமர்ந்தபின் கேட்டது: ''ஏ தவளையே! இங்கே ஒரு மரமும் இல்லையே. ஆகவே உன் சொந்தக்காரர்கள் யாரும் இங்கில்லை அல்லவா?''

தவளை கூறியது: ''இங்கே என் உறவினர் யாரும் கிடையாது என்பது உண்மைதான். ஆனால், ஒரு விஷயம். எங்க தாத்தாவிடமிருந்தும் அப்பாவிட மிருந்தும் நான் உன்னைக் காப்பாற்றிய தற்காக ஓர் உதவி செய். நீ என்னைக் கொல்லாமல் விட மாட்டாய் என்று தெரியும். ஆனால், எனக்கு அதிகமாக வலிக்காதபடி கொன்றால் உபகாரமாக இருக்கும். அதற்காக நீ உன் அலகை மிகவும் கூர்மையாகத் தீட்டிக் கொண்டு வா.''

காக்கை கிணற்று மேடை மேல் தவ ளையை வைத்து விட்டுத் தன் அலகை மேடைக் கல்லில் தேய்க்க ஆரம்பித் தது. நல்ல சந்தர்ப்பம் இதுதான் என்று தவளை துள்ளிக் குதித்துக் கிணற்றுக்குள் குதித்து விட்டது.

அலகைக் கூராக்கிக் கொண்ட பின் காக்கை கத்தியது: ''ஏ தவளையே, நீ எங்கே போய்த் தொலைந்தாய்? அலகு கூராகி விட்டது. உடனே வந்துவிடு.''

தவளை கடகடவென்று சிரித்துக் கூறியது: ''நான் தவறிப் போய்க் கிணற்றுக்குள் விழுந்து விட்டேன். நீ இங்கே வந்து என்னைச் சாப்பிடு. என்னால் கிணற்றுச் சுவர் ஏற முடிய வில்லை.''

காக்கைக்குத் தன் முட்டாள்தனம் புரிந்தது. அது கூறியது: ''சரி, உன்னைச் சாப்பிடவில்லை. ஒரு விஷயம் மட்டும் கேட்டுப் போ.''

தவளை ஏமாறுமா? அது சொல்லி யது: ''எனக்கு நாலு காலும் வலிக் கிறது. நீயே கிணற்றுக்குள் வா.''

காக்கை ஏமாந்து போய் வருத்தத் துடன் பறந்து போய் விட்டது.


குட்டித் தவளை கிணற்றிலிருந்த மற் றத் தவளைகளுக்கெல்லாம் காகம் ஏமாந்த கதையைக் கூறியது. எல் லாத் தவளைகளும் விழுந்து விழுந்து சிரித்தன. தலைமுறை தலைமுறையாக இக்கதையைஅப்பா-அம்மாத் தவளைகள் பாப்பாத் தவளைகளிடம் சொல்லி வரு கின்றன.

தவளைகள் கத்துவதைக் கேட்டிருக் கிறோம் அல்லவா? அது வேறொன்று மில்லை. இக்கதையைக் கேட்டு அல்லது நினைத்துத் தவளைகள் சிரிக்கும் சப்தம் தான் அது!

## பறக்கும் அணில்!

அணில்களிலே 'பறக்கும்அணில்' என்று ஒரு வகை உண்டு. ஆனால் அது பறவை களைப் போல் சிறகை அடித்துக் கொண்டு பறக்காது. சிறகுக்குப் பதி லாக, அதன் இரு புறமும் மெல்லிய தோல் மடிப்புக்கள் இருக்கின்றன. உடலையும் முன் பின் கால்களையும் அந்த மடிப்புக்கள் சேர்க்கின்றன.

ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்துக்குப் போக வேண்டுமானால், பறக்கும் அணில் ஆகாயத்தில் தாவும். அப்போது அந்தத் தோல் மடிப்புக்கள் விரிந்து கொள்ளும். காற்றில் மிதந்து சறுக்கிக் கொண்டே போய் இன்னொரு மரத்தை அடையும். உங்களில் சிலர் காகிதத்திலே விளையாட்டு விமானம் செய்து எறிகிறீர்கள் அல்லவா? அதைப் போல இந்த அணில் செல்லும்!''



# எண்ணாமல் ஏமாந்த அரசன்

வான்முகில்

அரசவையில் ஒரே பரபரப்பு!

அரசன் இன்னும் வராததால் சலசலப்பு!

காரணமில்லாத ஒரு கலகலப்பு!

அமைச்சரின் கையிலிருந்த ஒரு பலகையைப் பலர் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சதுரமான பலகை. வெள்ளையும் கறுப்புமாகப் பல கட்டங்கள் பளிச்சிட்டன.

''என்ன? என்ன?'' என்று பக்கத்தில் இருந்தவர்கள் கேட்டனர்.

''அவசரம் வேண்டாம். அரசர் வரட்டுமே சொல்கிறேன்'' என்றார் அமைச்சர்.

''பராக்! பராக்!''

''வாழ்க! வாழ்க!''

குரல்கள் ஒலித்தன.

வந்தார் அரசர். அரியணையில் அமர்ந்தார்.

அரசரின் காலடியில் வண்ணப் பலகையை வைத்துவணங்கினார் அமைச்சர்.



''என்ன பலகை இது?''

''அரசே! இது விளையாட்டுப்பலகை!''

''இந்தப் பலகை மேல் நின்று என்ன விளையாடுவது? என்ன, என்னிடம் விளையாடுகிறீரா?''

''ஆம்! அரசே! நாம் இருவருமே விளையாடலாம்' ஆனால், பலகையின் மேல் நின்றல்ல; பக்கத்தில் உட்-கார்ந்து. நான் கண்டு பிடித்தேன். பெயர் சதுரங்கம்.'' என்று அமைச்சர், ஆடும் முறையை விளக்கினார்.

போர்த் தந்திரங்களைப் பயிலவும், நன்றாகச் சிந்திக்கவும் அந்த விளையாட்டு உதவும் என்பதை உணர்ந்த அரசர் மகிழ்ந்தார்.

''அமைச்சரே! வேண்டிய பரிசினைக் கேளுங்கள்'' என்றார்.

தயங்கினார் அமைச்சர்.

''என் தயக்கம்?''

''எது கேட்டாலும் கிடைக்குமா?''

''கேளுங்கள், கிடைக்கும்'' என்றார் அரசர். என்றாலும், உள்ளூரக் கொஞ்சம் பயம்தான். இப்படி வாக்குக் கொடுத்து விட்டுப் பின்னர் மாட்டிக் கொண்டு ''திருதிரு'' என்று விழித்த அரசர்களின் கதைகள் பல படித்திருக்கிறார். பயன் என்ன? 'அவசரப்பட்டு, அரசவையில் வாக்குக் கொடுத்தாகி விட்டதே!' என்றெல்லாம் அரசரின் மனத்தில் எண்ணங்கள் பட்டாம்பூச்சிகள் போல் பறந்தன.

அமைச்சர் தயக்கம் நீங்கி,

'கோதுமை வேண்டும்'' என்றார்.

''அஹ்ஹஹ்ஹா? கோதுமைதானே! வேண்டிய மூட்டைகளைக் கிடங்கிலிருந்து எடுத்துச் செல்லுங்கள்.''

''அப்படி வேண்டாம் அரசே! கோதுமையை எண்ணிக் கொடுத்தால் போதும்''

''கோதுமை என்ன, தங்கக் காசா? வெள்ளிப் பணமா, எண்ணிக்கொடுக்க? அள்ளிச் செல்லுங்கள்.''

''வேண்டாம் அரசே! எண்ணிக் கொடுத்தால் போதும்.''

''சரி! உங்கள் விருப்பம்! எத்தனை?''

''இந்தச் சதுரங்கப் பலகையில் 64 கட்டங்கள் உள்ளன. முதல் கட்டத்திற்கு ஒரு கோதுமை தானியம். இரண்டாம் கட்டத்துக்கு இரண்டு தானியங்கள். மூன்றாம் கட்டத்திற்கு நான்கு, நான்காம் கட்டத்திற்கு எட்டு, ஐந்தாம் கட்டத்துக்குப் பதினாறு. இப்படி ஒவ்வொரு கட்டத்திற்கும் தானிய மணிகளை, முன் கட்டத்தில் வைத்ததைப் போல் இரண்டு மடங்காக்கிக்கொண்டு போக வேண்டும். 64 கட்டங்களுக்குக் கொடுங்கள். அவ்வளவுதான்.''

அரசர் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்.

''ஓ! இப்படி ஒரு விளையாட்டா! யாரங்கே? ஒரு மூட்டை கோதுமை கொண்டுவா!'' என்று ஆணையிட்டார்.

வந்தது தானியம். சேவகன் ஒரு தானிய மணியை எடுத்துச் சதுரங்கப் பலகையின் மேல் முதல் கட்டத்தில் வைத்தான். அமைச்சர் முழந்தாளிட்டு வணங்கி அதனை எடுத்துக் கொண்டார். அரசர் சிரித்தார். அவையும் சிரித்தது. புத்திசாலித்தனமான இந்த விளையாட்டைக் கண்டு பிடித்த அமைச்சர் இப்படிக் கோமாளியாகி விட்டாரே!

கட்டங்கள் போகப் போகத் தானிய மணிகளைக் கட்டத்தில் வைக்க முடியவில்லை. சேவகன் கணக்கிட்டு எண்ணித் தரையில் வைத்தான். இருபதாவது கட்டத்தைத் தாண்டுவதற்குள் ஒரு மூட்டை காலியாகி விட்டது. பிறகு மூட்டைகளை இரட்டிப்பாக்கி எண்ணிக் கொடுக்க வேண்டியிருந்தது.

மூட்டைகள் ஒன்று இரண்டாகி, இரண்டு நான்காகி, நான்கு எட்டாகி உருண்டன.

அரசர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

அவையோர் எழுந்து நின்றனர்.

''கோதுமைக் கிடங்கு காலி'' — உணவு அமைச்சர் அலறினார்.

அரியாசனத்தில் அரசர் மயங்கி விழுந்தார்.

[தற்போது 'செஸ்' எனப்படும் சதுரங்க விளையாட்டு கண்டுபிடிக்கப் பட்டது பற்றி வழங்கி வரும் பல கதைகளில் இதுவும் ஒன்று.

அரசர் — ஷர்ஹாம்.
அமைச்சர்சிஸ்ஸா பென் தாஹிர்.
நாடும் காலமும் தெரியவில்லை.

அமைச்சர்கேட்டபடி 64 கட்டங்களுக்கும் தானிய மணிகள் கொடுக்க 18,446,744,073,709,551,615 — கோதுமை மணிகள் வேண்டும்.

என்ன, தலை சுற்றுகிறதா? இப்படித் தலை சுற்றியதால்தானே அரசர் ஷர்ஹாம் அரியணையில் மயங்கி விழுந்தார்!]



# கமலா போட்ட கடிதம்

கமலா கதைப் புத்தகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டால், அவளுக்கு உலகமே மறந்து விடும். நேரம் போவது தெரியாமல் படித்துக் கொண்டிருப்பாள். பக்கத்தில் நடப்பது தெரியாது.

அம்மா கால் மணி நேரமாகக் கூப்பிட்டுக் கொண்டிருப்பது அவள் காதில் விழவில்லை. அருகில் வந்து அதட்டினாள். ''உனக்கு இந்தக் கதைப் புத்தகம் வாங்கிக் கொடுத்ததே தப்பு. எவ்வளவு நேரமா கத்தறேன்? திரும்பியே பார்க்கல்லே. இந்தலெட்டரைக்கொண்டு போய் போஸ்ட் பண்ணிட்டு வா. நேரமாச்சு. இன்னும் கொஞ்ச நேரத்துலே கட்டு எடுத்துடுவாங்க. ரோடில் வேடிக்கை பார்த்தபடி போகாதே. சீக்கிரம் வந்துவிடு...''

கதையைப் பாதியில் விட்டுவிட்டுப் போகக் கமலாவுக்கு மனம் வரவில்லை. ''அண்ணனைப் போகச் சொல் அம்மா...'' என்று கெஞ்சினாள்.

''வேலைக்கு அண்ணன். செல்லத்துக்கு மட்டும் நீயா? வரவர உனக்குச் சோம்பல் அதிகமாயிடுத்து. அப்பா வரட்டும். இனிமே உனக்கு கதைப் புத்தகமே வாங்கித் தர்ராதீங்கன்னு சொல்றேன். அண்ணா கராத்தே பயிற்சிக்குப் போயிருக்கிறான். இந்தக் கடிதத்தை போஸ்ட் பண்ணிவிட்டு வந்து படி'' அம்மா கண்டிப்புடன் கூறிவிட்டாள்.

முணகிக்கொண்டே கடிதத்தை வாங்கிக் கொண்டு புறப்பட்டாள் கமலா. பாதியில் கதைப் புத்தகத்தைப் பிரித்துப் படித்துக் கொண்டேபோனாள். நல்லவேளை. கொஞ்சம் தப்பியது. இல்லாவிட்டால் கார் அவள் மீது ஏறியிருக்கும். டிரைவர் கத்தினான்: ''கண்ணு தெரியலே? பார்த்து நடக்கறதுக்கு என்ன?''

பாதையில் நடக்கக் கூடாது என்று புத்தி வந்தது கமலாவுக்கு. ஆனால், வேடிக்கை பார்த்துக் கொண்டே போனாள். பழக்கூடைப் பாட்டி, பலூன்காரன், ஐஸ் வண்டிக்காரன், சினிமா சுவரொட்டி ஒட்டும் சைக்கிள் பையன், கையேந்தும் பிச்சைக்காரன், வித்தை காட்டுகிறவன், சாமி ஊர்வலம், தொழிலாளர் ஊர்வலம்... இப்படி அவள் கவனம் பல பக்கங்களில் பாய்ந்தது. கமலாவுக்கு வந்த வேலை மறந்துவிட்டது. 'எதற்கு வெளியே புறப்பட்டு வந்தோம்?' என்று குழம்பினாள்.

'அம்மா எதுக்கோ அனுப்பினாளே? ஆமாம், போஸ்ட் பண்ணச் சொன்னாள்' எதை? அதான் கையிலே கொண்டாந்திருக்கோமே...' ஓவர்கோட் போட்ட பீட் கான்ஸ்டபிள் போல் நின்று கொண்டிருந்த பெரிய அஞ்சல் பெட்டியில் கையில் இருந்ததைப் போட்டுவிட்டாள் கமலா. அடுத்த வினாடி விக்கித்துவிட்டாள். அவளது கதைப் புத்தகம்

மு. முத்துக்காளத்தி

அல்லவா அஞ்சல்பெட்டியில் போய்விட்டது! அம்மா கொடுத்த கடிதத்தைப் போடுவதற்குப் பதிலாக, பாதியில் படித்துக் கொண்டிருந்த கதைப் புத்தகத்தை போஸ்ட் பண்ணிவிட்டாள்.

'கடிதம் என்ன ஆகியிருக்கும்? கதைப் புத்தகத்தோடு சேர்ந்து போயிருக்குமா? அப்படிப் போயிருந்தாலும் பரவாயில்லே. வரும் வழியில் ஒரு வேளை கீழே விழுந்து விட்டிருந்தால்? அம்மா மாமாவுக்கு எழுதியிருந்தாளே, கடிதம் வரவேயில்லே என்று மாமா சொல்லி விட்டால்? கதைப் புத்தகமும் போச்சு. அம்மாவுக்கு ஆத்திரம் வரும்படி வேறு ஆச்சு. ஏன் இப்படி முட்டாள்தனம் பண்ணினேம்? பெரியவங்க ஒரு வேலே வெச்சா அதைச் சரியா செய்யணும். இல்லேயா? அம்மா கூப்பிட்டதும் நான் கதைப் புத்தகத்தை மூடிவச்சிட்டு,போய்க் கேட்டிருக்கணும். கடிதம் போடக் கொடுத்ததும் கதைப் புத்தகத்தை வீட்டில் வச்சிட்டுப் போயிருக்கணும். அப்போ கடிதத்தையும் ஒழுங்கா போட்டிருக்கலாம். கதைப் புத்தகமும் போயிருக்காது. எனக்கு நல்லாப் புத்தி வந்தது. இனிமே இப்படி முட்டாள்தனமா நடக்கமாட்டேன்...'

தனியே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள் கமலா. கராத்தே பயிற்சி முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிவந்த அண்ணன் அருணன், ''என்ன கமலா? ஏன் அழறே?'' என்று கேட்டான்.

கமலா நடந்ததைச் சொன்னாள்.

''பரவாயில்லே. அழாதே. என்னுடைய சிறுசேமிப்பில் பணம் இருக்கிறது. நான் உனக்கு அந்தக்கதைப் புத்தகத்தை வாங்கிக் கொடுக்கிறேன். வீட்டில் ஒய்வு நேரத்தில் அதைப் படி. இனிமேல் வெளியே கொண்டு போகாதே. அம்மா, வேலே வைக்கும் பொழுது, சந்தோஷமாகச் செய். சலிப்பில்லாமல் போ. கவனமாக அந்த வேலேயை முடி. அதுதான் முக்கியம்.''


''அம்மா கொடுத்த கடிதம், என்ன ஆச்சுன்னு தெரியல்லியே அண்ணு. போஸ்ட் பண்ணிட்டேன்னு அம்மாவிடம் போய் சொன்னேன். அதான் எனக்கு மனசு உறுத்துது.''

''கவலேயை விடு. அந்தக் கடிதத்தை நான் போஸ்ட் பண்ணிட்டேன்''

''என்ன அண்ணு! நீங்க போஸ்ட் பண்ணிட்டீங்களா? மாமாவுக்கு அம்மா எழுதிய கடிதத்தையா?''

''ஆமாம் கமலா! நான் கராத்தே பயிற்சி முடித்து வீட்டுக்குத் திரும்பி வந்தபொழுது வழியில் ஒரு கடிதம் கிடந்தது. உடனே அதை எடுத்து விலாசத்தைப் பார்த்தேன். அரக மாமாவுக்கு அம்மா எழுதிய கடிதம்! வீட்டுக்கு வந்து நீ எங்கேன்னு அம்மாவைக் கேட்டேன். லெட்டர் போஸ்ட் பண்ணப் போயிருக்கான்னு சொன்னுங்க. எனக்கு விஷயம் விளங்கிவிட்டது. நான் உன்னைக் காட்டிக் கொடுக்காமல், அந்தக் கடிதத்தை அஞ்சவில் சேர்த்துட்டேன். இனிமே இப்படி நடக்காம பார்த்துக்க...''

''அப்படியே செய்யறேண்ணு....'' என்று தழுதழுக்த குரலில் சொன்னுள் கமலா.



## அஸ்க்! அஸ்க்!


ரயிலிலே பயணம் செய்துகொண்டிருந்த சிறுவன் 'அஸ்க்! அஸ்க்!' என்று அடிக்கடி தும்மிக் கொண்டிருந்தான். பக்கத்திலே இருந்த அம்மாளுக்கு அருவருப்பாக இருந்தது. அவனிடம் கேட்டாள்:

''ஏன் தம்பி, உன்னிடம் கைக்குட்டை இல்லேயா?''

''ஓ,இதோ பையிலே இருக்குதே! ஆனல் உங்களுக்கு நான் ஓசி தர மாட்டேன்.''

# நின் பெயர் சொல்

தங்கமணி



நெடுங்கதை

நடுப் பகல். அக்கினி வெய்யில் பொசுக்கியது. இடைவேளைக்காகச் சற்று ஓய்ந்திருந்தது, மகாகவி பாரதியார் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கூடம். அந்த ஆறாம் வகுப்புக் கூடத்தில், ஜன்னலுக்கு அருகில் நின்றவாறு கண்ணம்மா, பார்வதி, கல்யாணி மூவரும் என்னவோ பேசிக் கொண்டிருந்தார்கள். என்ன பேசிக் கொண்டிருந்தார்கள்?

நிச்சயமாக—

சினிமாக் கதை அல்ல!

தனக்குத் தன் அத்தை சொல்லிய ஒரு பயங்கரக் கொள்ளைக்காரனுடைய கதையை வெகு ஊக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள், கண்ணம்மா. பார்வதி, கல்யாணி இருவரும் அந்தக் கதையை ரொம்ப ரசனையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அது என்ன கதை?

''அப்புறம்... அந்தக் கொள்ளைக்காரப் பாவி, குத்துக் கத்தியை எடுத்தான். எடுத்துக் கொண்டு பாய்ந்தான். ரொம்பக் கோபத்தோடு தாவி ...தாவி....தா...வி...'' கண்ணம்மா அதற்கு மேலே கதையைத் தொடரவில்லை. ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. கம்மென இருந்தாள்.

அவளது திடீர் மௌனத்தைக் கண்டதும் சிநேகிதிகள் திகைத்தார்கள். ''அப்புறம் என்னடி....?'' எனத் தூண்டினாள் பார்வதி. ''குத்துக் கத்தியுடன் பாய்ந்த அந்தப் பயங்கரக் கொள்ளைக்காரன் என்னடி செய்தான்?'' எனத் துருவிக் கேட்டாள் கல்யாணி.

கண்ணம்மா ஊமையாய் நின்றாள். எதையோ பார்த்துக் கொண்டு உம்மென இருந்தாள். எதைப் பார்த்துக் கொண்டு இருந்தாள்?

பள்ளிக்கூடத்தின் சுற்றுச் சுவர் விளிம்பில் பல நிறக் கண்ணாடிச் சில்லுகள் புதைக்கப் பட்டிருந்தன. அக்கண்ணாடிச் சில்லுகளில் ஒன்று நடுப் பகல் சூரியனின் ஒளியில் பளிச்செனப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. பார்வையைக் கூச்சப்படுத்தும் அந்தச் சுடரொளிக் கீற்றையே பார்த்தாள். முகம் அசையாமல், ஆழ ஆழக் கூர்ந்து பார்த்தாள். முகமெல்லாம் முத்து முத்தாக வியர்க்க வெறிக்க வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தாள், கண்ணம்மா.

ஏதோ... பித்துப் பிடித்தது மாதிரி குத்திட்டு நின்ற அகன்ற விழிகளால் எதையோ வெறித்து நோக்கியவாறு ஆடாமல் அசையாமல் நின்ற கண்ணம்மாவைப் பார்க்கப் பார்க்க...

கதி கலங்கியது!

''ஐயோ! என்னடி இது?'' என்று ஏதும் விளங்காமல் வீறிட்டு அலறினாள், பார்வதி. ''ஏண்டி, என்னடி உனக்கு?'' என்று கண்ணம்மாவின் தோளைப் பிடித்து உலுக்கியபடியே கிறீச்சிட்டுக் கதறினாள், கல்யாணி.

அடுத்த நொடியில்—

''என்னடி அது...?'' எனக் கேட்டவாறே, கூடத்துக்குள் வந்தார், வாத்தியாரம்மா. அந்தப் பள்ளிக்கூடத்தில் ஆறாவது, ஏழாவது வகுப்புக்குக் கணக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காகச் சில நாட்களுக்கு முன்புதான் வேலைக்கு வந்திருக்கும் புது வாத்தியாரம்மாவைக் கண்டதும்—

தாவிக் குதித்து ஓடினார்கள். வாத்தியாரம்மாவை அணுகினார்கள். ''டீச்சர்! கண்ணம்மாவுக்கு என்னவோ தெரியவில்லை. என்ன கேட்டாலும் முழிக்கிறாள்!'' எனத் திகிலுடன் கூவினாள், கல்யாணி. ''பேயோ பிசாசோ...ஒன்றும் புரியவில்லை ''டீச்சர்!....'' எனக் கிலியுடன் பதறினாள் பார்வதி.

''பேயாவது, பிசாசாவது!....'' என்று அலட்சியமாகச் சொன்னார், வாத்தியாரம்மா. சொல்லிக்கொண்டே கண்ணம்மாவை நெருங்கினார். ''அடி உன் பெயர் என்ன?'' என்று வினவினார் வாத்தியாரம்மா.

மதில் சுவரின் விளிம்பில் கண்ணாடிச் சில்லுவின் பிரகாசமான ஒளிச் சுடரையே வெறிக்கப் பார்த்துக்

கொண்டு கண்ணம்மா பதில் சொன்னாள்: ''என் பெயர் பொம்மி...''

இதைக் கேட்டதும்—

திடுக்கிட்டுக் கூவினாள், கல்யாணி. ''இல்லை, இவள் பெயர் பொம்மி இல்லை — கண்ணம்மா!'' அவளைத் தொடர்ந்து, ''ஐயோ கடவுளே! என்னவோ புரியவில்லையே!'' எனக் கைகளைப் பிசைந்தபடி தவியாய்த் தவித்தாள், பார்வதி.

மறு நொடி—

மருண்டு, மிரண்டு, மயங்கிக் களைத்துச் சாய்ந்து விழுந்த கண்ணம்மாவை இரு கைகளாலும் சடக்கெனப் பிடித்துக்கொண்ட வாத்தியாரம்மா, பதறலும் கதறலுமாகக் கூறினார்: ''அடியே, போய்... ஹெட்மாஸ்டரைக் கூப்பிட்டுக்கொண்டு வாடி!...''

வாத்தியாரம்மா வாய் மூடுவதற்குள்—

குண்டுச் சத்தத்தைக் கேட்ட புரு மாதிரி — பூனையின் குரலைக் கேட்ட கண்டெலி மாதிரி கல்யாணியும், பார்வதியும், வகுப்புக் கூடத்திலிருந்து குபீரெனப் பாய்ந்து பறந்தோடினார்கள்.

சில நாட்களுக்குப் பிறகு—

ஓர் அகன்ற நெடுஞ் சாலை. அந்த நெடுஞ்சாலையில் ஓர் அழகிய பங்களா. அந்தப்பங்களாவுக்குள்ளே விசாலமான ஒரு தனி அறை. நோயாளிகளைப் பரிசோதிக்கும் அந்த அறைக்குள்ளே—

நிலாவிலிருந்து பார்த்தால், வானம் முழுவதும் காரிருளாய்க் காணுமாம்! அந்த மாதிரி அடர்ந்த இருளும், அமைதியும் சூழ்ந்த அந்த அறைக்குள்ளே—

அப்பா, அம்மா, கல்லூரி மாணவனான அண்ணன், மனோ தத்துவ டாக்டர் இவர்களுக்கு நடுவில், ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள் கண்ணம்மா. அவள் தனக்கு முன்னே நாலைந்து கெஜ தூரத்தில், தலைக்கு



மேலே சற்று உயரத்தில், இருளில் சின்னஞ் சிறு ஒளிப் பொட்டாகப் பிரகாசிக்கும் பொன்னிறச் சுடரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.
ஏழெட்டு நிமிஷங்களுக்குப், பிறகு டாக்டர் என்னவோ ஜாடை காட்டினார்.
அடுத்த நொடி—
அப்பா கூப்பிட்டார்: 'கண்ணம்மா!''
பதில் இல்லை.



காரிருளில் காணும் ஒளிப் பொட்டையே வெறித்துப் பார்த்தவாறு சும்மென இருந்தாள் கண்ணம்மா.
அம்மா கூப்பிட்டாள்: ''கண்ணம்மா.''
பதில் இல்லை.
இருளில் ஒளி வீடும் சுடர்த் துனியையே ஆழ்ந்து நோக்கியபடி ஆடாமல், அசையாமல் இருந்தாள், கண்ணம்மா.
அப்புறம், மனோ தத்துவ டாக்டர், மெல்லிய குரலில், கண்ணம்மாவின் முகத்துக்கு அருகே குனிந்து வினவினார்: ''உன் பெயர் என்ன?''

கண்ணம்மா மறு நொடியே விடையளித்தாள்: ''என் பெயர் பொம்மி''
''உன் அப்பா, அம்மாவின் பெயர் என்ன?'' என்றார் டாக்டர்.
''என் அப்பாவின் பெயர் காளி. என் அம்மாவின் பெயர் குப்பி'' என்று கரகரத்த குரலில் சாந்தமாகப் பதில் அளித்தாள், கண்ணம்மா.
இதைக் கேட்டதும் மிகுந்த பதற்றத்துடன், ''உங்களுடைய வீடு எங்கே இருக்கிறது?'' எனக் கேட்டார், கண்ணம்மாவின் தந்தை ராமசாமி.
என்னவோ, கனவு மயக்கத்தில் பேசுவது போல, கண்ணம்மா சொன்னாள்: ''தமிழோங்கிபுரக் காட்டுக்கு நடுவில் ஒரு மலை. அந்தக் கருங்கல் மலைக்கு மேலே ஒரு கோவில். அந்தப் பாழடைந்த கோயில்தான் எங்கள் வீடு....''
அப்புறம், ''உன் அப்பாவுக்கு என்ன வேலை?'' என்று சற்றுப் பர

பரப்போடு கேட்டாள், கண்ணம்மாவின் தாய் லட்சுமி.

ஓரிரு விநாடி மௌனத்துக்குப் பிறகு, கண்ணம்மா சொன்னாள்: ''என் அப்பா ஒரு பயங்கரக் கொள்ளைக்காரர். கொள்ளையடிப்பதுதான் அவருடைய வேலை. தமிழோங்கிபுரக் காட்டுப் பாதைகளில் பயணம் செய்பவர்களை வழி மறித்துப் பணத்தையும், நகைகளையும் அபகரிப்பதுதான் என் அப்பாவுக்குத் தொழில். கோயிலுக்குள்ளே ஒரு பெரிய பாறுங்கல். அந்தக் கல்லிலே ஒரு பொந்து. அந்தப் பொந்துக்குள்ளே அன்றாடம் கொள்ளையடித்துக் கொண்டு வரும் தங்கம், வெள்ளி நகைகளை யெல்லாம் ரகசியமாகப் பதுக்கி வைத்... வை...த்...த்...த்....''

மறு நொடியே — திடீரென்று மயங்கித் துவண்டு சாய்ந்தாள் கண்ணம்மா. உடனே தாவி நடந்து, விளக்குப் பொத்தானைத் தட்டினார் டாக்டர். குப்பெனச் சூழ்ந்த வெளிச்சம், அறையின் இருளை விரட்டியது. கைக்குட்டையால், நாற்காலியில் மூர்ச்சித்துக் கிடந்த கண்ணம்மாவின் வியர்த்த முகத்தைத் துடைத்தார். துடைத்துக் கொண்டே, ''இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. கடந்த ஜென்மத்தைப் பற்றிய நினைவுகளால் உங்களுடைய மகள், பழங் கதையைச் சொல்கிறாள்'' என்று கூறினார் டாக்டர்.

**மு**ன்னிரவு நேரம்.

'டடக்....டக்... டடக் டக்...
டடக் டக்... டடக் டக்...'

இது என்ன சப்தம்? இது ரயில் ஓடிக் கொண்டிருக்கிறபோது சக்கரங்களைத் தாங்கி நிற்கிற கருவிகளிலிருந்து எழும் சப்தம்.

'டடக் டக்... டடக் டக்....'

ஒரே மாதிரியான தாளக் கட்டுடன் ஓடிக் கொண்டிருந்தது ரயில். அது வேகமாய்ச் செல்லும் மெயில் வண்டியல்ல — படு வேகமாகத் தாவியோடும் எக்ஸ்பிரஸ் வண்டியுமல்ல— சாதாரண பாஸஞ்சர் ரயில் வண்டி.

தெருவோரங்களிலுள்ள ஒவ்வொரு தொட்டி தொட்டியாக நின்று நின்று போகும் கார்ப்பரேஷன் குப்பை வண்டி மாதிரி,

பாதை நெடுகக் காணும் ஒவ்வொரு சின்னஞ் சிறு ஸ்டேஷனிலும் நின்று நின்று ஓடிக் கொண்டிருந்தது, அந்த ரயில்: 'டடக் டக்... டடக் டக்'

என்னென்னவோ எண்ணங்கள், ஏதேதோ சிந்தனைகள். மூளை சோர்ந்து தவித்தது. உடல் களைத்துத் துவண்டது. தூக்கம் கண் இமைகளை அழுத்தியது. 'வ்வோ .. ஹாய்!' என்று வாயைப் பிளந்து நீளக் கொட்டாவியை ஊதித் தள்ளினான். முழுக்கால் சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்தான். தூக்கம் கனக்கிற விழிகளையும் முகத்தையும் அழுத்தமாகத் துடைத்துக் கொண்டான். எதிர் இருக்கையில் அமர்ந்திருக்கும் கிழவரைப் பார்த்தான். ''தாத்தா, இப்போது மணி என்ன?'' என்று வினவினான், ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்த நல்லமுத்து.

கிழவர், தம் கைக்கடியாரத்தைக் கூர்ந்து நோக்கியவாறே சொன்னார்: ''பதினொரு மணி இருபத்தாறு நிமிஷங்கள்...''

''தாத்தா... இந்த ஆமை வேக வண்டி தமிழோங்கிபுரத்துக்கு எந்த நூற்றாண்டில் போய்ச் சேரும்?'' என்று எரிச்சலை மறைத்துக் கொண்டு வேடிக்கையாகக் கேட்டான், நல்லமுத்து.

கிழவர் புன்சிரிப்புடன் சொன்னார்: ''இந்த வண்டி தமிழோங்கிபுரத்தை அடைவதற்கு முன் பொழுது விடிந்து விடும்!''

அப்புறம்—

நல்லமுத்து பெருமூச்சு விட்டவாறே ஜன்னலுக்கு வெளியே பார்த்



**கை தட்டல்!**

''டேய், எங்க பழைய மாம்பலத்திலே பொதுக்கூட்டத்திலே யார் பேசினாலும் நிறைய கைதட்டு விழும்.''

''அப்படியா!''

''ஆமாம். நிறையக் கொசு பறந்து கொண்டேயிருக்கும். அதை அடிக்கக் கைதட்டுவார்கள்.''

—ராஜேஸ்வரி

தான். ரயிலைச் சூழ்ந்து கவ்விய காரிருளில் தூரத்து ஒளிப் பொட்டுகள் மின்மினிகளாய்ப் பறந்தன. சில விநாடிகளில், இரண்டு மூன்று கொட்டாவிகளுக்குப் பிறகு—

அவன் தூங்கினான்.

வெகு வேகமாகப் பாய்ந்தோடியது! எது பாய்ந்தோடியது?

அந்த ரயில் அல்ல! நேரம்!

தலைக்கு மேல் தொங்குகிற பலகையில் சுருண்டு படுத்திருந்தவள், தூக்கம் கலைந்து விழித்தாள்; எழுந்தாள். உடலை நெளித்து வளைத்துச் சோம்பல் முறித்துக் கொண்டே, ''அண்ணா..'' எனக் கூப்பிட்டாள், கண்ணம்மா.

பதிலைக் காணோம்.

சற்றுப் பரபரப்புடன் கீழே குனிந்து பார்த்தாள். இருக்கையில் அமர்ந்தவாறே ஜன்னல் விளிம்பில் கவிழ்ந்து தூங்கிய நல்லமுத்துவைப் பார்த்தாள். ''தூங்குகிறாயா?...'' என்று மெல்லக் கிசுகிசுத்தபடியே, பலகையிலிருந்து இறங்கினாள். நல்லமுத்துவை அணுகினாள். ''அண்ணா! அண்ணா!'' எனத் தோளை உலுக்கிக் கூப்பிட்டாள் கண்ணம்மா.

மறு நொடியே தூக்கத்தை உதறிக் கொண்டு எழுந்தான். கண்ணம்மாவைப் பார்த்தான். ''கண்ணா... நன்றாகத் தூங்கினாயா?'' என்று செல்லமாகக் கேட்டான் நல்லமுத்து.

''நன்றாகத் தூங்கினேன். அது சரி... இப்போது நாம் எங்கே போகிறோம்?'' எனப் புரியாமல் கேட்டாள் கண்ணம்மா.

''தமிழோங்கிபுரத்துக்குத்தான்....''

''தமிழோங்கிபுரமா? அந்த ஊருக்கு எதற்காகப் போகிறோம்?'' என்று வினவியவாறே நல்லமுத்துவின் அருகில் அமர்ந்தாள், கண்ணம்மா.

'தமிழோங்கிபுரம்' என்னும் சொல்லைக் கேட்டதும்—

எதிர்ப்புற இருக்கையில் இரண்டு வாலிபர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுள் ஒருவன் சிகரெட் பற்ற வைக்கிற சிகார் லைட்டரை என்னவோ ரிப்பேர் செய்து கொண்டிருந்தான். சிவப்புத் தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் அணிந்து, ஏதோ ஓர் இங்கிலீஷ் புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த இன்னொருவன், நல்லமுத்துவைப் பார்த்தான். நயமாகச் சிரித்தான். ''நாங்களும் தமிழோங்கிபுரத்துக்குத்தான் போகிறோம்'' என்றான்.

நல்லமுத்து பேசவில்லை. ஒரு சின்னக் குறும்புச் சிரிப்புடன் மௌனமாக இருந்து விட்டான். ஆனால், அந்தச் சிவப்புத் தொப்பிக்காரன் விடவில்லை. ''தமிழோங்கிபுரத்தில் ஏதேனும் விசேஷமா?'' என்று நல்லமுத்துவை வினயமாகக் கேட்டான். நல்லமுத்து என்னவோ உதடுகளை அசைத்த நொடியில்—

''ஆ! எரிகிறது!'' எனக் கூவினான் சிகார்லைட்வாலா. அவனது உள்ளங்கைக்குள்ளடங்கிய சின்னஞ் சிறு சிமிழிலிருந்து நீல நிறச் சுடர் எரிந்தது.

''வெரி குட்!'' என்றான் சிவப்புத் தொப்பிக்காரன்.

அந்தச் சுடரைப் பார்த்தாள் கண்ணம்மா. பார்க்கப் பார்க்க, கரிய மேகங்கள் மலை மீது படருகிறமாதிரி உள்ளமெல்லாம், உணர்வெல்லாம் ஏதோ ஒரு வித மயக்கம் புகுந்து படர்ந்தது.

கண்ணம்மா அசையவில்லை, ஆடவில்லை. அந்தச் சுடரையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நல்லமுத்துவுக்குத் திகீர் என்றது. அவன் கண்ணம்மாவை அணைத்துக் கொண்டு, பதற்றத்துடன் கூவினான்: ''கண்ணம்மா...கண்ணம்மா!...''

கண்ணம்மா பேசவில்லை.

விளக்குச் சுடரை அணைத்து விட்டு நல்லமுத்துவைப் பார்த்து ஒரு வியப்பும் தவிப்புமாக சிகார்லைட்வாலா


**யார் சொன்னது?**

சுப்பு: ஏண்டா குப்பு, நீ ஸ்கூட்டர் ஓட்டக் கத்துக்கறியாமே!

குப்பு: ஆமாம் உனக்கு யார் சொன்னது?

சுப்பு: ஆஸ்பத்திரியிலே ரெண்டு மூணு பேர் சொன்னாங்க.

—கீழை அ. கதிர்வேல்




## நடிக்கும் காரணம்?

''என்னடா நம்ம சரித்திர ஆசிரியர் இன்னைக்கு நடிச்சு நடிச்சுப் பாடம் நடத்துறாரு!''

''இன்னிக்கு நம்ம ஹெட்மாஸ்டர் லீவு. இவர்தான் இப்போ ஆக்டிங் ஹெட்மாஸ்டர்!''

—பிரகாஷ் முரளி



---

கேட்டான்: ''ஹலோ, உன் தங்கச்சிக்கு என்ன ஆயிற்று? ஏன் இப்படி விழிக்கிறாள்?''

அவனைத் தொடர்ந்தார், கிழவர்: ''தம்பி... உன் ஸிஸ்டருக்கு ஏதேனும் மனோ வியாதியா?''

நாலைந்து நொடி தயக்கத்துக்குப் பிறகு, கவலையும் கலக்கமுமாகச் சொன்னான் நல்லமுத்து: ''ஒன்றுமில்லை... வந்து..' எப்போதோ ஒரு காலத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து அழிந்து போன ஒரு பழைய ஜன்ம உணர்வு இந்த ஜன்மத்தில் எப்போதேனும் சில சமயம் இவளைப் பீறிக் கொண்டு வெளிப்படுகிறது. இவளுடைய பழைய வீடு தமிழோங்கிபுரத்தில் உள்ள ஒரு மலைக் கோயிலில்....''

நல்லமுத்துவின் பேச்சை இடைமறித்துக் கொண்டு, கண்ணம்மாவைப் பார்த்துக் கேட்டான், சிவப்புத்-தொப்பிக்காரன்: ''கண்ணு உன் பெயர் என்னம்மா?''

—ஓடிக் கொண்டிருக்கிற ரயிலுக்கு வெளியே கப்பிக் கொண்டிருக்கும் கருக்கிருளை வெறித்து நோக்கியவாறே ''என் பெயர் பொம்மி'' என்றாள், கண்ணம்மா.

''பொம்மி... உன் வீடு எங்கே?'' சிகார்லெட் வாலாவின் கேள்விக்குக் கண்ணம்மா விடையளித்தாள்: ''தமிழோங்கிபுரக் காட்டுக்கு நடுவிலே ஒரு மலை. அந்த மலை மேலே ஒரு பொந்துக்குள்ளே, கொள்ளையடித்த நகைகளையும் பணத்தையும் என் அப்பா ரகசியமாக...''

கண்ணம்மாவை மேலே சொல்ல விடவில்லை. ''பொம்மி! இப்போது அந்த மலை வீட்டில் இருக்கும் உன்னுடைய அப்பா, அம்மாவைப் பார்க்கப் போகலாம்... வருகிறாயா?'' என்று என்னவோ எண்ணத்துடன் கேட்டான் நல்லமுத்து.

கண்ணம்மா அழுதாள். அழுத-வாறே சொன்னாள்: ''என் அம்மா குப்பி அம்மா.... அம்மை நோய்கண்டு செத்து....செத்து....''

''உன் அப்பா இருக்கிறார், இல்லையா?'' எனக் கேட்டார் கிழவர்.

கண்ணம்மா குலுங்கி அழுதாள். சில விநாடிகளுக்குப் பிறகு தேம்பினாள். தேம்பியவாறே சொன்னாள்: ''வந்து... ஒரு நாள்... எனக்கு நீர்க் கோழியை வறுத்துத் தின்பது என்றால் ரொம்பப் பிரியம். ஒரு நாள்... வந்து எனக்கு நீர்க் கோழி வேண்டும் என்று என் அப்பாவைக் கேட்டேன். உடனே, என் அப்பா என்னை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். நாங்கள் குடியிருந்த மலைக்குச் சற்றுத் தூரத்திலே ஒரு பெரிய ஏரி. அந்த ஏரியில் பெரிய பெரிய மீன்களும், நீர்க் கோழிகளும் ஏராளமாக இருந்தன. அந்த ஏரிக்கு நீர்க்கோழி பிடிப்பதற்காக அப்பா என்னை அழைத்துக் கொண்டு போனார். ஏரிக் கரையை நெருங்கிய உடனே—

எங்கேயோ ஒரு புதரில் பதுங்கிக் கிடந்த ஒரு பயங்கர வேங்கைப் புலி எங்களைப் பார்த்து விட்டது. பார்த்து விட்டுப் பாய்ந்தோடி வந்தது.

அதைக் கண்டதும்—

''அப்பா, புலி! புலி!' எனக் கூவிய படியே என் அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டேன். அப்புறம் ...வந்து.. அப்பா என்னைத் தூக்கிக் கொண்டு தாவிக் குதித்து ஓடினார். அருகில் ஒரு பெரிய மாமரம். அந்த மாமரத்தில் என்னை ஏற்றி விட்டார். நான் பரபரவென்று மரத்தில் ஏறினேன். உயர்ந்த ஒரு கிளையில் தொற்றிக்கொண்டேன். சற்றுத் தூரத்திலிருந்து எங்களை நோக்கிப் பாய்ந்தோடி வரும் புலியைக் கவனித்து விட்டு, 'அப்பா புலி வருகிறது! நீயும் மரத்தில் ஏறிக் கொள்!...' என்று அலறித் துடித்தேன். ஆனால்—

நொடி நேரத்தில் புலி வந்து விட்டது!

என் அப்பா இடுப்பில் இருந்த பிச்சுவாக் கத்தியை எடுத்துக் கொண்டு திரும்பினார். அதற்குள் பின்னால் 'வந்த வேங்கைப் புலி குபீரெனப் பாய்ந்து என் அப்பாவைக் கடித்துக் கொதறி...

இதைப் பார்த்ததும்—

'அய்யோ! அப்பா! அப்பா'! என்று வீறிட்டுக் கதறினேன். கதறிக் கொண்டே மயங்கித் தடுமாறி, மரக் கிளையிலிருந்து விழுந்....

ஆ....புலி! புலி! அய்யோ! அப்பா! அப்பா!....'

திடீரெனக் கூவிக் கதறிய கண்ணம்மா, மூர்ச்சித்துப் போய், நல்லமுத்துவின் மடியில் விழுந்தாள்.

அடுத்த நொடி—

'டர்ர்ர்...' பிரேக் கட்டைகள் உறுமின. தமிழோங்கிபுரம் ஸ்டேஷனுக்குள் வந்து ஊர்ந்து நகர்ந்து நின்றது, ரயில்....

**பொ**ழுது விடிந்து சற்று நேரமாயிற்று. பனித் தூறலிலும், குளிர் காற்றிலும் சிக்கிய உடல்கள் யாவும் வெடவெடவென நடுங்கின. அந்த ரயில் நிலையம், அதைச் சுற்றிச் சூழ்ந்த அடர்ந்த மரங்களும் செடிகளும் காலை நேரத்து மஞ்சள் வெய்யிலில் பளபளவெனச் சிரித்தன!

ஒரு கையில் பெட்டியைத் தூக்கிக் கொண்டு இன்னொரு கையைக் கண்ணம்மாவின் தோளில் போட்டவாறு ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தான் நல்லமுத்து. அவனைத் தொடர்ந்து வந்த சிவப்புத் தொப்பிக்காரன், அங்கும் இங்குமாய்ப் பார்த்தான், பார்த்துக் கொண்டே, ''பக்கா நாட்டுப்புறம்!'' என்று சிரித்தான். அவனைத் தொடர்ந்து ''இயற்கைக் காட்சிகள் நிறைந்த சரியான ஏ ஒன் பட்டிக்காடு!'' எனச் சிரித்தான் சிகார்லேட் வாலா.

தலையையும் முகத்தையும் ஒரு பூப் போட்ட டவலால் போர்த்திக்கொண்டிருந்த கண்ணம்மா, நல்லமுத்துவைக் கேட்டாள்: ''அண்ணா, இதுதான் தமிழோங்கிபுரமா?''

''ஆமாம்'' என்றான் நல்லமுத்து.

''ஆமாம், கண்ணுக்கு எட்டிய தூரம் வரையிலும் ஒரு மலையைக் கூடக் காணவில்லையே!'' என்றான் சிவப்புத் தொப்பி.

அந்தச் சமயத்தில்—

காக்கி உடை அணிந்த ரயில்வே ஊழியர் ஒருவர், ஸ்டேஷனை நோக்கி வேகமாக நடந்து போனார். அவரைக் கண்டதும், ''சார்...'' என்றவாறே ஓடினான். அவரை அணுகியதும், ''இந்தத் தமிழோங்கிபுரத்தில் மலை எங்கே இருக்கிறது?'' என்று விசாரித்தான் நல்லமுத்து.



**கவிமணியின் காணிக்கை**

சில புத்தகங்களின் ஆரம்பத்திலே பார்த்திருப்பீர்கள். சமர்ப்பணம் அல்லது காணிக்கை என்ற தலைப்பில்,

'என் அருமைப் பெற்றோர்களுக்கு' என்று ஒரு புத்தக ஆசிரியர் குறிப்பிட்டிருப்பார்.

இன்னும் சிலர்,


'என் மதிப்புக்குரிய ஆசிரியர்.... அவர்களுக்கு'

'என் இனிய நண்பர்....அவர்களுக்கு'

என்று தங்கள் அன்பையும் நன்றியையும் தெரிவித்திருப்பார்கள். ஆனால், உங்களுக்காக நிறையப் பாடல்களை எழுதிய கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் தாம் எழுதிய 'மலரும் மாலையும்' என்ற புத்தகத்தை யாருக்குக் காணிக்கை ஆக்கியிருக்கிறார் தெரியுமா?

'செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்தநூல் உரியதாய் என்றும் வாழ்கவே'

என்று உங்களுக்கே காணிக்கையாக்கியிருக்கிறார். குழந்தைகளிடம் அவர் கொண்டிருக்கும் அன்புக்கு அளவே இல்லை.



அந்த ஊழியர் கூறினார்: ''இது புதுத் தமிழோங்கிபுரம். இங்கே மலை, குன்று எதுவும் கிடையாது. ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன்னே பழைய தமிழோங்கிபுரம் என்று ஒன்று இருந்தது. அது வெறும் காடு. அந்தப் பயங்கரக் காட்டுக்கு நடுவிலே ஒரு மலை இருக்கிறது. அந்த மலை மேலே ஒரு கோயிலும், அந்தக் கோயிலில் வழிப் போக்கரைக் கொள்ளை யடிக்கும் ஒரு கொடிய கொள்ளைக்காரப் பிசாசும் இருந்தது.''

சடக்கெனக் குறுக்கிட்டுக் கேட்டான் நல்லமுத்து. ''அந்தத் தமிழோங்கிபுரக் காடு, மலைக் கோயில், எல்லாம் எந்தப் பக்கமாக இருக்கின்றன?''

''வடக்கே இங்கிருந்து பதினேழு கிலோ மீட்டர் தூரத்தில்.... நான் போகிறேன்... எனக்கு நேரமாகிறது'' எனச் சொல்லியவாறே வேகமாக நடந்தார், ஊழியர்.

நல்லமுத்து வந்தான்.

''என்ன, மலை எங்கே இருக்கிறதாம்?'' எனக் கேட்டான், சிவப்புத் தொப்பி. கண்ணம்மாவை அழைத்துக்கொண்டு, மெல்ல நடந்த நல்லமுத்து, சோர்வுடன் சொன்னான்: ''ரொம்பக் கஷ்டமான சோதனை, ஹூம்!....''

''என்ன சமாசாரம்?'' என்றான் சிகார்லெட்..

கண்ணம்மாவுக்கு இங்கிலீஷ் புரியாது. அதனால், பேசுகிற விஷயம் அவளுக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதற்காக இங்கிலீஷில் பேசினான். கல்லூரி மாணவன், நல்லமுத்து. ''கடந்த ஜன்மத்தில் வாழ்ந்த இடத்தை ஒரு தடவை பார்த்து விட்டால், அந்த ஜன்ம நினைவுகள் மறந்து போகலாம் என்று மனோ தத்துவ டாக்டர் சொன்னார். அதை நம்பி, தமிழோங்கிபுரத்துக்கு என் அப்பாவின் உத்தரவுப் படி இவளை இங்கே அழைத்து வந்தேன். இங்கே வந்தால் அந்தத் தமிழோங்கிபுரம், அந்த மலை இங்கிருந்து பதினேழு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறதாம்! இந்தச் சின்னஞ்சிறு பெண்ணை அழைத்துக் கொண்டு அந்தக் காட்டிலும், மலையிலும் அலைவதற்கு எனக்குப் பயமாக..''

உடனே, ''அடப் பூ! பயமாவது, கியமாவது!...'' எனத் தெம்பாகச் சொல்லிய சிவப்புத் தொப்பிக்காரன், சடக்கெனத் திரும்பினான். பக்கத்தில் நிற்கும் சிகார்லெட் வாலாவைப் பார்த்து என்னவோ ஜாடை காட்டினான். மறு நொடியே அப்படியும் இப்படியும் பார்த்துக் கொண்டே எங்கேயே வேகமாக நடந்தான், சிகார் லெட்.

அப்புறம்—

ஐந்து நிமிஷங்கள் நகர்ந்தன. பத்து நிமிஷங்கள் ஊர்ந்தன. பதினைந்து நிமிஷங்கள் நடந்தன. இருபது நிமிஷங்கள் ஓடின. இருபத்தி ஐந்து நிமிஷங்கள் பறந்தன. முப்பது நிமிஷங்கள் பாய்ந்..

'டிர்ர்ர்...' ரெனப் படுவேகமாக ஓட்டிக் கொண்டு வந்த ஜீப் வண்டியைக் 'கிய்ச்ச்ச்...'செனப் பிரேக் போட்டு நிறுத்தினான் சிகார் லெட்.

''இது ஏது?'' என்று வியப்புடன் கேட்டான் நல்லமுத்து.

''நம்முடைய வண்டிதான்... ம்... ஏறி உட்காருங்கள்...'' எனச் சொல்லிக் கொண்டே தாவினான், ஜீப் வண்டியில் ஏறினான். ''என்னடா, இவ்வளவு நேரம்?'' எனக் கொஞ்சலாகக் கேட்டவாறே, சிகார் லேட்டின் தலையில் செல்லமாகத் தட்டிக் கொண்டே அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தான் சிவப்புத் தொப்பி.

ஒரு வினாடி தயங்கினான். மறுவிநாடி யோசித்தான். அடுத்த விநாடி என்னவோ தைரியத்துடன் கண்ணம்மாவுடன் வண்டியில் ஏறினான், பின்புறந்து இருக்கையில் அமர்ந்தான் நல்லமுத்து.

உடனே—

'ஜிவ்'வெனப் பறந்தது, ஜீப்.

ஸ்டேஷனிலிருந்து சற்றுத் தூரம் வரையில் இரு புறமும், நாகதாளிப் புதர்கள் மண்டிய உவர் மண் பாதையில் ஓடியது. அப்புறமாய்க் குறுக்கிடும் அகலமான ட்ரங்க் ரோடில் திரும்பி 'சர்ர்...'ரெனப் பறந்தோடிக் கொண்டிருந்தது. அந்தப் புத்தம் புதிய ஜீப். அதில் அமர்ந்து கொண்டிருந்த கண்ணம்மா, அங்கும் இங்குமாய்ப் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்தாள். மற்ற மூவரும் ரோட்டின் இரண்டு பக்கமும் மரமும் செடி கொடிகளும் அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் எதையோ கவனித்துக் கொண்டே இருந்தார்கள். எதைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்? தமிழோங்கிபுரம் மலையை, மலையுச்சியில் பாழடைந்த கோயிலை. அக் கோயிலுக்குள் பாறைகளின் இடையில் காணும் பொந்துவையும், பொந்துக்குள் தகதகவென, ஜகஜகவெனப் பளபளக்கும் தங்கம், வெள்ளி நகைகளையும் மனக்கண்ணால் கண்டு கொண்டே இருந்தார்கள், சிவப்புத் தொப்பியும், சிகார்லேட்டும்.

பதினாறு கிலோ மீட்டர் தூரத்துக்கு அப்பாலே ஜீப் வண்டியை ஓட்டிச் செல்லும் சிகார்லேட் வாலா, திடீரெனக் கூவினான்: ''தோ! தோ!...''

அவனது கழுகுப் பார்வை பாய்கிற திசையில் பரபரப்புடன் பார்த்தான், நல்லமுத்து. துருதுருப்புடன் கவனித்தான், சிவப்புத் தொப்பிக்காரன்.

சிறிது தூரத்துக்கு அப்பாலே கரடுமுரடுமாய்க் காணுகிற மலையைக் கண்டதும், மலையில் கோயிலைப் பார்த்ததும்,

''இதுதான்! இதுவாகத்தான் இருக்கும்!'' எனக் கத்தினான், நல்லமுத்து.

''திருப்பு வண்டியை!...'' எனக் கூவினான் சிவப்புத் தொப்பி. அடுத்த நொடியே நெடுஞ்சாலையிலிருந்து ஜீப் வண்டியைத் திருப்பிக் காட்டுக்குள் ஓட்டினான், சிகார்லேட்.

ஜீப் வண்டியைப் பார்த்ததும்—

அதன் ஓட்டத்தில் எழும் 'டிர்ர்ர்... புர்ர்ர்'..' எனும் கடூரமான முரட்டுச் சப்தத்தைக் கேட்டதும்—

மரத்துப் பறவைகள் கிறீச்சிட்டுப் பறந்தோடின. மான்கள் மிரண்டு துள்ளித் தாவி ஓடின. முயல்கள் தத்திக் குதித்தோடிப் புதர்களிலும், வளைகளிலும் புகுந்து மறைந்தன.

ஏழெட்டு நிமிஷங்களுக்குப் பின்—

அடர்ந்த மரங்களுக்கு இடையில் ரொம்ப லாகவமாக ஜீப் வண்டியைப் புகுத்தி வளைத்துத் திருப்பி வெகு வேகமாக ஓட்டிச் சென்ற சிகார்லேட், தமிழோங்கிபுரம் மலையடிவாரத்தில், ஒரு பெரிய பாறைக்கு அருகில் வந்ததும் நிறுத்தினான்.

நல்லமுத்துவையும், கண்ணம்மாவையும் பார்த்தான். என்னவோ ஒரு குறுகுறுப்பும், துருதுருப்புமாகச் சிரித்தவாறே சிவப்புத் தொப்பிக்காரன் சொன்னான்: ''இறங்கி வாருங்கள், போகலாம்... இதுதான் தமிழோங்கி

### அபராதம் போட முடியாது

''டேய் ரவி, நான் டிக்கெட் வாங்காமலே தினமும் பஸ்ஸிலே பள்ளிக்கூடம் போறேண்டா!''

''டேய், டேய், அது தப்புடா.கண்டு பிடிச்சிட்டா, அபராதம் போட்டுடு வாங்கடா''

''எப்படிப் போடுவாங்க? அப்போ என் கிட்டேயிருக்கிற பஸ் பாஸைக் காட்டிடுவேன்.''

—வி. புவனா



புறம் மலை. அதோ.. அதுதான் பாழடைந்த கோயில்....''

வண்டியை விட்டு இறங்கியதும் எடுப்பாக, ஓங்கி உயர்ந்து பரந்து காணும் மலையை ஏறிட்டுப் பார்த்தாள். மலையில் அங்கும் இங்குமாகப் பூதம்போல் பிசாசு மாதிரி அரக்கன் போல, ராட்சதன் மாதிரி தோன்றுகிற பிரும்மாண்டமான, பெரிய பெரிய பாறுங் கற்களைப் பார்த்தாள். உள்ளம் குலுங்கியது; உணர்வு கலங்கியது. ''அண்ணா! இந்த மலையையும் இங்கே காணுகிற பாறைகளையும் பார்த்தால், எனக்குப் பயமாயிருக்கிறது...'' எனச் சொல்லிக் கொண்டே நல்லமுத்துவின் கையை இறுகப் பற்றிக் கொண்டாள் கண்ணம்மா.

''ஹே!... பயமாவது, நியமாவது? எந்தப் புலி வந்தாலும் சரி, எத்தகைய பூதம் வந்தாலும் சரி — நான் இருக்கிறேன்! வாருங்கள், போகலாம்!...'' என்று ரொம்பத் தீரமாகவும் தெம்பாகவும் சொன்னான். சொல்லிக் கொண்டே வேகமாக மலையில் ஏறினான், சிகார்லெட். மற்ற மூவரும் அவனைத் தொடர்ந்து போனார்கள்.

வெகு நேரமாயிற்று.

கல்லிலும், முள்ளிலும் நடந்து, பாறைகளையும், புதர்களையும் கடந்து மலை உச்சிக்குப் போனார்கள். இடிந்து சிதைந்து, சீரழிந்து காணும் பாழடைந்த கோவிலுக்குச் சென்றார்கள். வாசலில் நின்று உள்ளே பார்த்தார்கள்.

கோயிலுக்குள்ளே—

தலை உடைந்து முண்டமாய்க் காணும் காளியின் சிலையையும், முகம் சிதைந்து மூளியாய்த் தோன்றும் யாளிப் பதுமையையும்...

காணக் கதி கலங்கியது!


பார்க்கப் பயம் பொங்கியது!

ஏதோ தவிப்பும் துடிப்புமாகக் கண்ணம்மாவைக் கையைச் சுற்றி அணைத்துக் கொண்ட நல்லமுத்து கேட்டான்: ''இதுதானே அந்தக் கோயில்...?''

''எந்தக் கோயில்?'' எனப் புரியாமல் கேட்டான், அவன்.

நொடி நேரம் தயங்கிய பிறகு, கால் சட்டைப் பையிலிருந்த சிகார்லெட்டரைச் சட்டென எடுத்தான். ''தங்கச்சி, இதோ பார்...'' என்றவன், சிகார்லெட்டரின் பொத்தானைப் பசக்கெனத் தட்டினான். சிகார்லெட் வாலா.

'குப்...!' — சிகார்லெட்டரிலிருந்து வெளிப்பட்ட நீல நிறச் சுடரைப்



# நாங்கள் பின்னும் வலை

கம்பி போல நூலிழுத்துக்
காலில் ஆடுவேன்.
கால்கள் எட்டும் பரபரக்க
ஓடி ஆடுவேன்.

வம்பு ஏதும் செய்திடாமல்
சாது வாகவே
வட்ட வலை நடுவினிலே
ஒட்டிக் கொள்ளுவேன்.

கிட்டவரும் பூச்சியெல்லாம்
எட்டிப் பற்றுவேன்.
கிறுகிறுத்து மயங்கும்போது
மெல்லத் தின்னுவேன்.

பட்டுவலை வெய்யி லிலே
பளபளத் திடப்
பார்க்கப் பார்க்க உங்களுக்கு
ஆசை யாகுமே!

ஒற்றைஇழைக் கம்பி ஒன்றை
ஒட்டிடும் வரை
ஓய்ந்திடாமல் தாவித் தாவி
நானும் வெல் லுவேன்.

சுற்றிச் சுற்றிச் சுறுசுறுப்பாய்க்
கம்பி கம்பியாய்ச்
சுத்தமாக நாங்கள் பின்னும்
வலையைப் பாருங்கள்.

— சுப்ரபாலன்

பார்த்தாள். முறைத்துப் பார்த்தாள் உறுத்துப் பார்த்தாள். வெறித்துப் பார்த்தாள். பார்க்கப் பார்க்க...கண்ணம்மா மயங்கி நின்றாள்.

நல்லமுத்து கூப்பிட்டான்: ''கண்ணம்மா...''

பதில் இல்லை.

சிகார்லேட்வாலா அழைத்தான்: ''பொம்மி...!''

''என்ன....?'' என்றாள் அவள்?.

"இதுதானே தமிழோங்கிபுரம் மலை...? இதுதானே பாழடைந்த கோயில்? அந்த நகைகள் — உன் அப்பா பதுக்கி வைத்திருக்கிற தங்க நகைகள் நிரம்பிய அந்தப் பொந்து எங்கே இருக்கிறது...?', என்று ஆசையும் ஆத்திரமுமாகக் கேட்டான், சிவப்புத் தொப்பிக்காரன்.

மறு நொடி—

கனவு மயக்கத்தில் கலங்கி மயங்கி நிற்கிற கண்ணம்மா சொன்னாள்: ''அதோ... அந்தக் காளி சிலையின் வலது கைப் பக்கத்திலே செம்பாறைகளுக்கு இடையில் இருக்கும் அந்தப் பொந்துக்குள்ளேதான்... என் அப்பா பதுக்கி வைத்துள்ள நகைகள் எல்லாம் அந்தப் பொந்துக்குள்ளே ஏன் பாழாகக் கிடக்க வேண்டும்? அவைகளை இப்போதே எடுத்....''

சொல்லிக் கொண்டே கோவிலுக்குள் தாவினாள், கண்ணம்மா. உடனே அவளைக் கப்பெனப் பிடித்துக் கொண்டான் நல்லமுத்து.

அடுத்த நொடி—

''தம்பி.. உன் தங்கையைப் பிடித்துக்கொள். நான் உள்ளே போய், அந்தப் பொந்துக்குள்ளிருக்கிற தங்க நகைகளை வாரிக் கொண்டு வருகிறேன்...!'' எனச் சொல்லியவாறே தாவி யோடினான், சிவப்புத் தொப்பி. அவனைத் தொடர்ந்து பாய்ந்தோடினான், சிகார்லேட்.

இருவரும் ஒருவரை யொருவர் இடித்துத் தள்ளிக் கொண்டு கோயிலுக்குள் பறந்தோடினார்கள். காளி சிலைக்குப் பின் பக்கமாகப் பாறைகளின் இடுக்கில் காணும் பொந்துக்குள், வேட்கையும், வெறியுமாகக் கையை விட்டார்கள்.

மறு நொடி—

''ஆ!...' என்று அலறினான் சிகார்லேட்!

''அய்யோ!...' எனக் கதறினான், சிவப்புத் தொப்பி!

ஏன் அலறினான்?

எதற்காகக் கதறினான்?

அந்த இருண்ட பொந்துக்குள்ளே தங்க நகைகளையும் காணோம்! வெள்ளி நகைகளையும் காணோம்! பொந்துக்குள் நுழைந்த கைகளைப் பார்த்ததும்— உறக்கம் கலைந்து மிரண்டன! வெகுண்டன! சீறின! 'பொத்! பொத்'தென அந்தக் கைகளைக் கொத்திக் குதறி விட்டுப் பொந்துக்குள்ளிருந்து 'குபீர்! குபீர்?' எனப் பாய்ந்து நெளிந்தோடின—

பாம்புகள்! கொடிய விஷம் கொண்ட குரூரமான கருநாகப் பாம்புகள்!...

அவைகளைக் கண்டதும்—

''அய்யோ! அண்ணா!..'' என வீறிட்டலறினாள். அலறிக் கொண்டே தடுமாறிச் சுழன்று மூர்ச்சித்துக் கீழே விழப் போனாள் கண்ணம்மா.

கீழே விழாதபடி கண்ணம்மாவைச் சடாரெனத் தாங்கிப் பிடித்தான். தோளில் போட்டுக் கொண்டு கோயிலுக்குள் கவனித்தான் நல்லமுத்து.

உள்ளே—

கொடிய விஷம் மண்டைக்கு ஏறியதால் மயங்கிச் சுருண்டு ஒருவர் மேல் ஒருவராக விழுந்தார்கள் அவர்கள்: சிகார்லேட் + சிவப்புத் தொப்பி.

அடுத்த வினாடி: 'டுமீல்ல்ல்!...'

திடுக்கிட்டுத் திகிலடைந்த நல்லமுத்து, அச்சமும் அதிர்ச்சியுமாக மலையடிவாரத்தைப் பார்த்தான்.

அங்கே—

பாறைகளுக்கு இடையில் ஜீப் வண்டிக்கு அருகில் நிற்கும் பெரிய லாரியிலிருந்து துப்பாக்கியும் தடியுமாகத் தபதபவென இறங்கிக் கொண்டிருந்தார்கள், பலர்.

அவர்கள் யார்?....

தங்களது ஜீப் வண்டியைப் பறிகொடுத்த காட்டு இலாகா அதிகாரிகள்தான்! **(முற்றும்)**

### பாட்டியின் ஆசை

பாட்டி: கரும்பு சாப்பிடணும் ஆசையா இருக்கு. ஆனால் கடிக்கத்தான் முடியல்லே.

பேரன்: உங்களுக்கு ஏன் பாட்டி அந்த சிரமம்? நான் நல்லாக் கடிச்சு மென்னு தாரேன், பாட்டி.

—A. வேல்ராஜ்





# அணிலுக்கு நன்றி!

குட்டிப் பாப்பா மரத்திலே
கொய்யாப் பழத்தைக் கண்டதாம்.
எச்சில் சொட்டச் சொட்டவே
ஏங்கிக் கொண்டு நின்றதாம்.

அங்கே வந்த அணிலுமே
அதனைப் புரிந்து கொண்டதாம்.
கொம்பில் தாவிச் சென்றதாம்.
கொய்து பழத்தைப் போட்டதாம்.

உள்ளம் அறிந்து உதவிய
உற்ற தோழன் அணிலுக்கு
முல்லைச் சிரிப்பால் நன்றியை
முத்துப் பாப்பா சொன்னதாம்!

—புலேந்திரன்


# யானைக்குட்டி

கிண்டி பார்க்கில் யானை ஒன்று
குட்டி போட்டது!
அண்டி அதனைப் பார்க்க எனக்கு
ஆசை வந்தது!


பாட்டனாரால் முடியாது —
பாவம் ரொம்ப வயசாச்சு.
பாட்டியாலும் ஆகாது —
பஸ்ஸில் ஏறி நாளாச்சு;
அப்பாவுக்கு ஆபீஸ் வேலை —
ஆதலாலே மாட்டாராம்.
அம்மாவுக்கு வீட்டு வேலை —
அதிகப் படியாம் முடியாதாம்.

எத்தனை பேரை நான் கேட்பேன்?
எத்தனை நாட்கள் பொறுத்திருப்
பேன்?
மெத்தப் பெரிதாய் வளர்வதற்குள்
விரைந்து செல்வேன் நண்பருடன்.

—ராஜாதிராஜன்



## ஏமாந்த பூனை!




பாமா வீட்டுப் பூனைக்குட்டி
ஓடி வந்தது.
பளிங்கு போன்ற கண்களாலே
பார்த்து நின்றது.

பரணின்மீது ஓடுகின்ற
எலியைப் பார்த்தது.
பதுங்கி ஒளியப்பார்த்த எலியைப்
பிடிக்கப் பாய்ந்தது.

எலியோ 'டாடா' காட்டிவிட்டுப்
பொந்தில் புகுந்தது.
ஏமாந்த பூனைக்குட்டி
ஏங்கிப் போனது!

—மா. வரதராஜன்





## கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி

### உறுப்பினர் எண், பெயர், முகவரி

226. ஜி. ரங்கநாதன், 1/19, கிருஷ்ணபுரம், சரவணம்பட்டி போஸ்ட், கோவை-641035
227. எஸ். கே. வெங்கடேஷ், 111, வடக்கு அக்ரஹாரம், தென்கரை, பெரியகுளம்
228. ச. சுஜாதா, 27/72, வேணுவில்லா, டானிங்டன் ரோடு, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம்
229. ப. செந்தில்குமார், 31, புதுப்பேட்டை, வடக்குத் தெரு, சிதம்பரம்
230. க. இளங்கோ, 32-ஏ, ஜவராஜா கோவில் தெரு, தென்காசி.
231. கோ. லட்சுமிநாராயணன், 9, கிருஷ்ணநகர் மூன்றும் தெரு, டி.வி.கே. நகர், சென்னை-82
232. ஆர். எம். இராஜமலர் (இராஜ பாரதி) 3, வாரணாசி வீதி, இடையன்காட்டுவலசு, ஈரோடு.
233. ஜே. இராமலிங்கம், 16, இராமசாமி நாயுடு தெரு, தருமபுரி.
234. எஸ். கார்த்திகேயன், 4/233, ஈ.பி. காலனி, ஈரோடு-9.
235. பி. சிவக்குமார், எம். எஸ். பி. பில்டிங், மெயின் ரோடு, காங்கயம்-638701.
236. கோ. உஷா, 185, இரயில்வே காலனி, கோபால்சாமி நகர், சென்னை-8.
237. என். லலிதாராணி, 13/16, நரசிம்மலு நாயுடு 3வது வீதி, கோவை-1.
238. எஸ். பானுமதி, 28, சுந்தரராஜபுரம், மதுரை-11.
239. வி. முத்துராமன், பி-40, சுப்பிரமணியநகர், சேலம்-5.
240. ஜே. முத்துசாமி, 9, 5-ம் குறுக்குத் தெரு, மரவனேரி, சேலம்-7.
241. ப. விஜயகுமார், 10, வெங்கடாசல முதலி வீதி, சென்னை-7.
242. கே. ரகுராம், 22, வாசுதேவன் நகர், சென்னை-95.
243. ஆர். இராமகிருஷ்ணன், 51, மெயின் ரோடு, கோட்டூர், ம. பட்டிணம், பொள்ளாச்சி தாலுகா
244. என். வி. செந்தாமரைக்கண்ணன், பி.எச்.சி. எரிசினம்பட்டி, புங்கமுத்தூர்-638207
245. வி. கே. செந்தில்குமார், 2, தேசபந்து வீதி, ராம்நகர், கோவை-9.
246. வி. செ. அந்தோணிராஜ், கே. ரேஸ் கோர்ஸ் ஹவுஸிங் யூனிட், ரேஸ்கோர்ஸ் ரோடு, கோவை-18
247. கு. மணவாளன், சி/1, எம்.ஐ.ஜி. ஃபிளாட், டபிள்யூ. ராமலிங்கம் ரோடு, கோவை2
248. வே. வெள்ளிமயில், 12, பைபாஸ் ரோடு, வேலூர்-638182
249. கு. அபர்ணா, 17, தாகூர் ரோடு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி-2
250. நீ. க. ப. ஸ்ரீசங்கர், பி-49, சக்கரைச் செட்டியார் நகர், வரதராசபுரம், கோவை-15
251. லதா வெங்கடேசன், 9, ஆதிகேசவன் தெரு, சுப்பிரமணிய சாலை, சென்னை-15.
252. என். சகிலா பானு, 18, புது வெள்ளாளத் தெரு, பாண்டமங்கலம், உறையூர், திருச்சி-3
253. ஏ. வெங்கடேஸ், 4, மேல ரத வீதி, வாசுதேவநல்லூர்-627758.
254. வி.எஸ். இனிதா, மே/பா. வி. எஸ். ஜான்சன், சீயோன்புரம், பொட்டல் தபால்-629501.
255. டி. ராஜேஷ், 27-ஏ, குட்டி கவுண்டர் தெரு, இரத்தினபுரி, கோவை-27.
256. டி. விவேகானந்தன், 12, கலோசனு நகர், மாக்கினாம்பட்டி, பொள்ளாச்சி.
257. ஆ. கவிதா, 2-132-2, கருவேலங்குண்டுத் தெரு, திருநெல்வேலி-6.
258. ஆர். பழனி பிரபு, 17, பெரிய மணவெளித் தெரு, மயிலாடுதுறை-2.
259. ஜி. ராதாகிருஷ்ணன், s/o வி.கோபால், ஆசிரியர், புளியம்பட்டி, நடந்தை போஸ்ட் 627206.
260. அ. த. வீரி செட்டி, C/o அ. வீரி செட்டி, வளவாடி-636457.
261. எஸ். உமாமகேஸ்வரி, D/o என். சீனிவாசன், ஆசிரியர், நீல்லேத் சமீபம், சின்ன தாராபுரம்-639202.
262. எம். காயத்ரி, 12, சேத்தங்குடி அக்ரஹாரம், மயிலாடுதுறை-609001.
263. எம். வித்யா, 12, சேத்தங்குடி அக்ரஹாரம், மயிலாடுதுறை-609001.
264. ஜி. நீலாம்பாள், 18, வி. வி. லே அவுட், உடுமலைப்பேட்டை-642126.
265. பி. சர்புதீன், 33, காந்தி ரோடு, பண்ருட்டி.
266. து. நா. ஆனந்த் குமார், 76, அவல்காரத் தெரு, வேலூர்-632001.
267. டி. சிவகுமார், 6/3, முக்கந்தர் தெரு, இராமநாதபுரம், கோவை-5.
268. எஸ். புவனேஸ்வரி, (அகிலா) C/o வாலாம்பாள் அம்மாள், புதிய அஞ்சலக வீதி, நங்கவரம்-639110
269. பி. சதீஷ்குமார், பிளாட் எண் 16, பங்கஜம் புதுக் காலனி காமராஜர் சாலை, மதுரை-9.
270. A. R. Rajendran, s/o S. Arunachalam, LIC of India Divisional Office, Bistupur Main Road, Jamshedpur
271. வு. எப். பாயிஸா, 54, நடுத்தெரு, கீழக்கரை.
272. பா. ரகுராமன், S/o டி. பாண்டுரங்கன், தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, பெரம்பலூர்-621212.

273. ஏ. ஜெயகுமார், சி-90, நியூ 5வது கிராஸ், தில்லைநகர், திருச்சி-18.

274. என். அல்லி, 22, சிவாஜி நகர், தஞ்சை-1.

275. ஜி. சுரேஷ் பாபு, S/o எஸ். லட்சுமணன், சி-7, இராமசாமி ராஜாநகர், 626204.

276. பா. குபேரன், 480, தேரு வீதி, திண்டிவனம்-1.

277. ரா. முரளி கணேஷ், 17, இரண்டாவது மெயின் ரோடு, ராம்நகர், சென்னை-61.

278. செ. செந்தில் செல்வன், 403-ஏ, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை-19.

279. ந. செந்தில்குமார், பிளாட் ஏ-1-(பி), சுந்தரர் தெரு, எழில்நகர், எம்.வி. ரோடு, தஞ்சை-7.

280. வி. வேணுகோபால், 210, நாலாவது வீதி எக்ஸ்டென்ஷன், 100 அடி ரோடு, காந்திபுரம், கோவை-2.

281. வி. ரவி ராமமூர்த்தி, s/o எல். வேணுகோபால், எதுமலை-621708, திருச்சி மாவட்டம்

282. ஏ. சகாப்தீன், மஜீத் ஸ்டோர், கொத்பா பள்ளி, மெயின் ரோடு, நெல்லிக்குப்பம்.

283. ஜெ. பிரகாஷ், எம்.63/1, 4வது கிராஸ் தெரு, பெஸன்ட் நகர், சென்னை-90.

284. ஜி. சுமன்த், 55, சித்திரக்குளம், வடக்குத் தெரு, சென்னை-4.

285. என். ஆனந்தன், 1/44, புதுத் தெரு, அழிஞ்சிவாக்கம், செங்குன்றம், சென்னை-52

286. சுஜாதா கோபாலகிருஷ்ணன், 40, பிஞ்சால சுப்பிரமணியன் தெரு, சென்னை-17.

287. என். பாலாஜி, 5, பி. என். சாரி தெரு, மதுராந்தகம்-6.

288. என். ஆனந்த், 26/119, சித்தி விநாயகர் கோவில் வீதி, கோவை.

289. பி. கெ. இராமச்சந்திரன், 60, சன்னியாஸி கிராமம், நெல்லை-627001.

290. ஆ. சரவணன், 13, நாடார் கீழத் தெரு, சாத்தூர்-626203.

291. ஆர். ஜெயகுமார், எம்-42, டி. என். ஹவுஸிங் யூனிட், மேட்டுப்பாளையம்,

292. ப. பரணீதரன், 6, குண்டுபாளையம், தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-9.

293. எஸ். சாய்ராமச்சந்திரன், 20, ஞானகிராம் நகர், நெல்லிக்குப்பம்-5.

294. ந. கனகசபாபதி, S/o வி. ஐ. நல்லசாமி,ஆசிரியர், கே.எம்.எஸ். பாளையம்-638052.

295. டி. எல். ஜெயபுரி, ஸி-68, எஸ்.ஐ.பி. காலனி, நந்தம்பாக்கம், சென்னை-89.

296. வீ. அனந்தராமன், 42, கோவிந்தன் சாலை, மேற்கு மாம்பலம், சென்னை-33.

297. சி. என். மல்லிகா, 122, தாமஸ் வீதி, கோவை-1.

298. பி. வாசுகி, D/o மு. பொன்னுசாமி, ஆசிரியர், கருமாபுரம்புதூர்,நெகமம்-642120,

299. ஜி. ஜெயசீலன், 20/4, 27-டி, பள்ளிவிளை அம்மன்கோயில் மேற்புரம், வெட்டூர்னி மடம், நாகர்கோயில் - 3.

300. பாரதி, 5, கந்தசாமி காலனி, கிழக்குத் தாம்பரம், சென்னை-59.

301. வை. வரதராஜன், 24-சி, அருளாநந்தநகர், ஸ்ரீதுர்காகல்லம், தஞ்சை-613007.

302. ஜி. எஸ். ரவிநாராயணன், ஒய். பிளாக், 232, அண்ணாநகர், சென்னை-40.

303. வி. எஸ். விஸ்வநாத், 43, கோவில் தெரு, திண்டுக்கல்-1.

304. ரா. சித்ரா, 7, 46வது தெரு, நங்கைநல்லூர், சென்னை-61.

305. ஆர். சுமதி, 2-க, துரைசாமி தெரு, தருமபுரி-1.

306. பி. முகுந்தன், லட்சுமி இல்லம், பட்டிவீரன்பட்டி-624211.

307. கே. செந்தில்குமார், 73, பஜார் தெரு, பள்ளிப்பட்டு-631207.

308. எல். பத்ரிநாராயணன், 422, ராணிவாய்க்கால் தெரு, தஞ்சை-9.

309. ச. சக்திசரவணன், 4,1/1, சாலியர் வடக்குத் தெரு, முத்துசாமிபுரம், முகவூர் 626111.

310. ப. குளத்து ரெங்கராஜன், 6, ஒடைத் தெரு, சங்கரன்கோவில்-627756.

311. இரா. பாலசுப்பிரமணியன், 123, தெற்கு அக்ரஹாரம், பெரியகுளம், மதுரை மா.வ.

312. எஸ். தமிழ்ச் செல்வம், s/o எஸ். ஆர். சிவராமகிருஷ்ணன், ஆசிரியர், புதுவலசை, 623801.

313. சொ. அருணாசலம், s/o சொக்கப்ப கவுண்டர், பாம்பகவுண்டன்பாளையம், பாகூர்-638154.

314. எஸ். அருள்மாணிக்கம், கிழக்குத் தெரு, சீலியம்பட்டி-636107.

315. எஸ். காந்திமதி, 42, மேலத் தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி-1.

316. சி. ராம்குமார், பூசாரி தோட்டம், நடராஜ் தியேட்டர் வீதி, திருப்பூர்-4.

317. வே. இந்துமதி, 7, சந்திரசேகரன் தெரு, மந்தைவெளி, சென்னை-28.

318. வே. ஸ்ரீப்ரியா, 48, டாக்டர் ஜகனுதநகர், கோவை-14.

319. க. ஜான்சிராணி, மே/பா. வான்முகில், ஆங்கிலத் துணைப் பேராசிரியர், அரசு கலைக் கல்லூரி, உதகமண்டலம்

320. அ. உலகநாதன், 3, கொமாரபாளையம், மல்லூர், சேலம்.

321. T. M. Saleem, B.P.T. Building, No. 1, Room No 32, Old Colony, Nadkarn Park, Bombay-400037

322. ஜி. வரதராஜன், 2-சி, துரைசாமி கவுண்டர் தெரு, தருமபுரி.


323. கா. கி. சுந்தரம், C/o கா. சு. கிருஷ்ணன், காவேரிப்பட்டி அக்ரஹாரம்,காவேரிப்பட்டி 637104.

324. க. இரவி, 75/1, சாலை ரோடு, (மேல் மாடி) தில்லைநகர், திருச்சி-18.

325. ஆர். சுகந்தன், 21, பார்க் தெரு, சேலம்-1.

(இன்னும் வரும்)






அப்புசாமி:

குப்பு சாமி, குப்பு சாமி
சுப்பு வீட்டிலே
சிப்பாய் ஒருவர் வந்துள்ளாரே
சென்று பார்த்திடு.

குப்புசாமி:

சிப்பாய் என்றால். ஐயோ அவரின்
கையில் இருக்குமே
துப்பாக்கியால் டப்டுப் பென்று
சுடுவார் என்னையே!

அப்புசாமி:

முப்பது நாள் லீவில் அந்தச்
சிப்பாய் வந்ததால்,
துப்பாக் கியே இல்லை அங்கே
துணிந்து சென்றிடு.

குப்புசாமி:

என்னை அவரும் படையில் சேர்க்க
இழுத்துச் செல்வரோ!
எதிரியோடு சண்டை போட
என்னால் முடியுமோ?

அப்புசாமி:

சின்னப் பையன் உன்னைப் படையில்
சேர்க்க முடியுமோ?
சென்றே அவரைப் பார்த்து விட்டுத்
திரும்பி வந்திடு.

குப்புசாமி:

முறுக்கி விட்ட மீசை யோடே
இருப்பா ரல்லவா?
அருகில் நெருங்கும் போதே உடம்பு
ஐயோ, நடுங்குமே!

அப்புசாமி:

நாட்டைக் காக்கும் அவரைப் பார்த்து
நன்றி சொல்லுவோம்.
நானும் உன்றன் கூட வருவேன்.
ஏனோ தயக்கமே?

குப்புசாமி:

அடடே, நீங்கள் வருவ தானால்
அச்ச மில்லையே!
உடனே நானும் துணிந்து வருவேன்
உங்கள் பின்னாலே!

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431643)
Editor: K. Rajendran

வண்ணத்துப் பூச்சிகளுக்காகத் தோட்டம் முழுவதும் மூச்சிரைக்க
அலையும் சின்னஞ்சிறிய சகோதரனே!

காலையில் தாமரைப்பூக்களுக்கும் முன்னிரவில் நட்சத்திரங்களுக்கும்
கை நீட்டும் சின்னஞ்சிறிய சகோதரியே!



சிறிய பூங்கன்றுகளை
ஒவ்வொன்றாய் நட்டுப் பின்பு
ஒரு தோட்டத்தையே அடைவதைப் போலானது
எங்களின்
**"ரிக்கரிங் டெபாசிட் திட்டம்"**
என்றும்

ஒட்டகச் சிவிங்கிகளைவிடவும்
வேகமாய்
வளர்வதாலேயே
**"வளர் நிதி சேமிப்புத் திட்டம்"** என்றானது
என்றும்

கவலைகளே
இல்லாமற்
ஒரு கடற்கரையோரத்தில்
அமர்ந்திருப்பதைப் போலானது
எங்களின்
**"LOHT திட்டம்"** என்றும்

அன்பை
மிகச்சரியாய்
சொல்வதைப் போலானது
எங்களின்
**"ரொக்கப் பத்திரங்கள் திட்டம்"** என்றும்

உனக்கும்
உன்வீட்டில்
உள்ளவர்களுக்காகவும்
**"உங்களுக்காகவே நாங்கள்"** என்று
காத்திருக்கிறோம் என்றும்

எங்களைப்
பற்றி எல்லாம்
எடுத்துச் சொல்வேன்.

80
வருடங்கள்
பாங்க் ஆப்
தமிழ்நாடு லிட்.

# பாங்க் ஆப் தமிழ்நாடு லிமிடெட்

ஸ்தாபிதம் : **1903**

பதிவு அலுவலகம் : **62, கீழரத வீதி, திருநெல்வேலி-627 006**


சுத்தமான
பாலின் சுவையை
முழுமையாக உணர,
சுவையுங்கள்
Spencer's
Spencer's
MILKBIX
ஸ்பென்ஸர்ஸ் மில்க்பிக்ஸ் பிஸ்கட்டுகள்
குழந்தைகள் மற்றும் பெரியவர்களால்
எல்லா நேரங்களிலும் விரும்பப்படுபவை.
இந்த பிஸ்கட்டுகளை காலை உணவுடன்
சேர்த்து சாப்பிடுங்கள். பள்ளிக்கு மற்றும்
நீங்கள் பணிபுரியும் காரியாலயத்திற்கு,
உல்லாசப் பயணம் செல்லும்போது
மற்றும் எங்கு வேண்டுமானாலும் உடன்
எடுத்துச் செல்லுங்கள்.
ஸ்பென்ஸர்ஸ்
மில்க்பிக்ஸ்
சக்திதரும் பொருள் இவ்வளவு சுவைத்ததில்லை
ஸ்பென்ஸர்ஸ்
ஸ்பென்ஸர் & கோ. லிட்.
சென்னை மற்றும் கிளைகள்
S 3745 TAM